
www.padippakam.com

தசரா அறக்கட்டளை

# கணையாழி

ஜூலை, 2005 விலை ரூ.10 மாத இதழ்



படிப்பகம்

www.padippakam.com

# கணையாழி திரட்டுகள்

தசரா அறக்கட்டளை ஜனவரி 99 முதல் இன்று வரை உள்ள இதழ்களை திரட்டுகளாக வெளியிட்டுள்ளது. இத்திரட்டுகள் 12 இதழ்களாக கட்டமைக்கப்பட்டுள்ளன.

வாசகர்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு ஆராய்ச்சி கருத்துக்கள் நிறைந்துள்ள இத்திரட்டுகள் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

| தொகுப்பு | விபரம் | ரூபாய் |
|---|---|---|
| Vol. I | 1999 ஜனவரி - 1999 டிசம்பர் | 165.00 |
| Vol. II | 2000 ஜனவரி - 2000 டிசம்பர் | 165.00 |
| Vol. III | 2001 ஜனவரி - 2001 டிசம்பர் | 165.00 |
| Vol. IV | 2002 ஜனவரி - 2002 டிசம்பர் | 165.00 |
| Vol. V | 2003 ஜனவரி - 2003 டிசம்பர் | 165.00 |
| Vol. VI | 2004 ஜனவரி - 2004 டிசம்பர் | 165.00 |

**கணையாழி** பெயரில் M.O. அல்லது D.D. அனுப்பவும். காசோலை பெறப்படமாட்டாது.




**கணையாழி**
11, நானா தெரு, தி.நகர்,
தலைமை தபால் நிலையம் அருகில்,
தி.நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24347354

www.padippakam.com

# உள்ளே...




## கட்டுரைகள்

கிளியோபாத்ரா - ஒரு புதுப்பார்வை
ஜோவலன்வாஸ் - 2

வணிக நாடகம்
எஸ். சுவாமிநாதன் - 5

மதிப்புரையும் திறனாய்வும்
ம.ந.ராமசாமி - 15

மூன்று சுழித்தலையும் தக்கை முடியும்
மலர் மன்னன் - 36

ழா(ன்) போல் சார்த்ர்
காரை. இரா. கிருஷ்ணமூர்த்தி - 39

இராஜா இரவிவர்மா
அரவக்கோன் - 43

திருவனந்தபுரத்தில் திரைப்பட விழா!
இரா. கதைப்பித்தன் - 71

## வரலாறு

வங்காள கவர்னரைக் கொல்ல முயற்சி
தமிழில் ; சு. கிருஷ்ணமூர்த்தி - 61

கலையாத ஓவியம்
க.ம. தியாகராஜ் - 19

எதிரொலி - 23

களத்துமேடு - 28

## சிறுகதைகள்

அதுதான் சரி...!
உஷா தீபன் - 11

ஜெல்லுவுக்கு பச்சைக் கண்கள் ஏன் வந்தன?
பாரவி - 31

வன்மம்
இ. வில்சன் - 47

பனிமலரிடையே தேவதையைக் கண்டேன்
மா.கி. கிறிஸ்ரியன் - 55

## கவிதைகள்

க.வெங்குட்டுவன் - 18
புட்டா (PUTTA) - 22
இளம்பிறை, பொ. செந்திலரசு - 27
ஸ்ரீரங்கம் ஆர். கோபாலன் - 30
வெள்உவன் - 54
த. சுரபி - 60


அட்டை ஓவியம் : மருது

உள்ளோவியங்கள் : மருது, கோவி.பரம்ஜோதி, காமேஷ்



படிப்பகம்

www.padippakam.com

# கிளியோபாத்ரா – ஒரு புதுப் பார்வை

## வரலாற்றுப் பக்கங்களில் இவர்கள்

ஜோவலன் வாஸ்

*கட்டுரை*

உலகப் பேரழகி என்று புகழப்படுகின்ற கிளியோபாத்ரா என்ற பெண் மட்டுமே கிளியோபாத்ரா அல்ல. இந்தப் பேரழகி கிளியோபாத்ராவுக்கு முன்பாக பழங்கால எகிப்தில் ஆறு மகாராணிகள் கிளியோபாத்ரா என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதுதான் வரலாறு. நாம் நன்கு அறிந்துள்ள கிளியோபாத்ரா ஏழாம் கிளியோபாத்ரா என்று வரலாற்றில் அழைக்கப்படுகின்றாள். இவள் காலம் கிறிஸ்துவுக்கு முன் 69ல் இருந்து 30ஆம் ஆண்டு வரையாகும். செக்ஸ் இயல்புக்கு இவள் ஓர் அடையாளம் என வருணிக்கப்பட்டாலும்....

சமீபத்திய ஆய்வுகளின்படி ஏழாம் கிளியோபாத்ரா வெறும் 'செக்ஸ் பொம்மை' அல்ல; அவள் ஓர் அறிவியல் விஞ்ஞானி, நோய் நீக்கும் தரம் வாய்ந்த மருத்துவர், அற்புதமாக அலசி ஆராயும் தத்துவஞானி என்று அராபிய அறிவு மேதைகள் குறிப்பிடுகிறார்கள். இதனை ஒட்டி ஒரு நீண்ட நிகழ்ச்சியை (Research File) ரேடியோ நெதர்லாந்து சென்னை 2004 நவம்பர் மாதம் 8ஆம் நாள் இரவு ஒலிபரப்பியது.

*(அந்த நிலையத்து நிகழ்ச்சிகள் தினந்தோறும் ஆங்கிலத்தில் ஆசியா மற்றும் இந்தியாவுக்கும் என்று ஒலிபரப்பாகின்றன. இந்திய நேரம் இரவு 7.30 முதல் 9.30 வரை. சிற்றலை வரிசையில் 31 மீட்டர் 9435 Khz / மற்றும் 19 மீட்டர் 15595 Khz அலைவரிசைகளில் கேட்கலாம்.)*

**வரலாறு சொல்லும் கிளியோபாத்ரா யார்?**

இன்றைய கண்டுபிடிப்புகள் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னால், அன்றைய வரலாற்று அறிஞர்கள் சொன்ன கிளியோபாத்ரா யார் என்று தெரிந்துகொள்வது அவசியமாகும்.



சிசரோ என்ற ரோமச் சொற்பொழிவாளர் ''கிளியோபாத்ரா என்னும் மமதை பிடித்த பெண்ணரசியை நான் உளமார வெறுக்கின்றேன்!'' என்றார் அன்று. ஏனென்றால் அகங்காரமும் அலட்சியமுமான மனோபாவமும் எவரையும் மதியாத எதேச்சாதிகார குணமும் கொண்டு எல்லாரது வெறுப்பையும் சம்பாதித்தவள், குறிப்பாக ரோமப் பேரரசுடன் தொடர்பு கொண்டவர்களது எதிர்ப்பைச் சம்பாதித்தவள் அவள் என்றுதான் வரலாறு குறித்துள்ளது. சதி, துரோகம், கொலை என்று எதையும் செய்யத் தயங்காத துணிச்சல் நிரம்பியவள். அதே சமயம் நன்கு கற்ற



படிப்பகம்

www.padippakam.com

வள். அறிவுக் கூர்மையானவள். எகிப்து நாட்டுக்குச் சொந்தமாக இருந்த சிரியா, பாலிஸ்தீனம் பகுதிகளை மீண்டுமாக எகிப்து நாட்டுடன் சேர்த்து வைத்தவள். எகிப்தை ஆண்ட அவளது வம்சத்தாரில் முதன் முதலாக எகிப்து மொழியைக் கற்றுக் கொண்டவளும் அவளே. ஏனென்றால் கிளியோபாத்ராவின் தாய்மொழி கிரேக்கம்.

அவளது குடும்பம் மேஸடோனியாவில் இருந்து எகிப்தில் குடியேறியது. மகா அலெக்ஸாண்டரின் போர்ப்படைத் தளபதிகளுள் ஒருவரான முதலாம் தாலமி அவளது மூதாதையர். அலெக்ஸாண்டர் மறைவுக்குப் பின்னர் எகிப்து நாட்டைக் கைப்பற்றிய முதலாம் தாலமி அதை ஒரு சாம்ராஜ்யமாக்கி அரசாள ஆரம்பித்தார்.

ஆனால் கிளியோபாத்ராவின் தகப்பனார் ஏழாவது தாலமி ரோம சாம்ராஜ்யத்தின் கைப்பாவையாகத்தான் ஆட்சி செய்தார். இதற்கிடையில் கிளியோபாத்ராவுக்கும் அவளது சகோதரனுக்கும் திருமணம் நடந்து, கி.மு.51ஆம் ஆண்டில் எட்டாம் தாலமியும் கிளியோபாத்ராவும் எகிப்து நாட்டின் அரியணையில் கூட்டாக ஆட்சி செலுத்த அமர்ந்தார்கள். அவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்த போது கிளியோபாத்ராவுக்கு வயது 18. எட்டாம் தாலமிக்கு வயது 10!! ஆனாலும் வெகு விரைவிலேயே தாலமியின் ஆட்சிக் குழுவோடு அபிப்ராய பேதமேற்பட்டு கிளியோபாத்ரா அலெக்ஸாண்டியாவை விட்டு வெளியேறினாள்.

ஜூலியஸ் சீஸர் தனக்கு எதிராகச் செயல்பட்ட பாம்பெயைத் தேடி அலெக்ஸாண்டிரியா வந்த போது கிளியோபாத்ரா அவரிடம் அடைக்கலம் புகுந்துவிடலாம் என்று அலெக்ஸாண்டிரியாவுக்கு ஒரு சின்னஞ்சிறு படகில் கம்பளிக்குள் சுருண்டு கொண்டவளாக வந்தாள் என்று புளுடார்க் என்ற வரலாற்றாசிரியர் எழுதி வைத்துள்ளார். தனக்கும் தனது சகோதரக் கணவனுக்கும் இடையில் உள்ள பிரச்சரவைத் தீர்க்கச் சொல்லி மத்தியஸ்தம் கேட்கப் போனவள் பின்னால் ஜூலியஸ் சீஸரைக் கைக்குள் போட்டுக்கொண்டாள். சீஸருடனான போரில் எட்டாம் தாலமி இறந்த போது கிளியோபாத்ரா தனது இன்னொரு சகோதரனான பதினான்காம் தாலமியை மணந்துகொண்டாள்.! ஆனால் அவளுக்கு கி.மு.47ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைக்கு தாலமி தகப்பன் அல்லன். பின்னே வேறு யார்...? ஜூலியஸ் சீஸர்தான்! பதினான்காம் தாலமி சௌகரியமாக இறந்துபோக கிளியோபாத்ரா தனது மகனைப் பதினைந்தாம் தாலமி எனப் பட்டம் சூட்டித் தன்னோடு இணையாக ஆட்சி செய்ய வைத்தாள்.

அத்தோடு நில்லாமல் நேராக ரோம் மாநகரம் சென்று தனது காதலனும் கள்ளக் கணவனுமான ஜூலியஸ் சீஸருடன் போய்ச் சேர்ந்துகொண்டாள். அவனோடு கி.மு.44ஆம் ஆண்டு சீஸர் கொலை செய்யப்படும் வரை அங்கே அவனுடன் தான் அவள் வாழ்ந்தாள். ஜூலியஸ் சீஸருக்கு கிளியோபாத்ரா மீது பைத்தியக்காரத்தனமான மோகம். அதனால்தான் வீனஸ் என்ற காதல் தேவதைக்குச் சிலையொன்று வடித்து அவன் அதை வீனஸ் ஜெனட்ரிக்ஸ் ஆலயத்தில் அமைத்த போது அது கிளியோபாத்ராவின் சாயலாக இருந்தது என்று பலத்த குற்றச்சாட்டு எழுந்தது.

**கிளியோபாத்ராவின் வீழ்ச்சி**

கிறிஸ்துவுக்கு முன்னால் 42ஆம் ஆண்டில், எகிப்திலிருந்து பிடிபட்டு பிரிந்துபோன மாகாணங்களை எல்லாம் மறுபடியும் கைப்பற்றக்கூடிய சந்தர்ப்பம் கிளியோபாத்ராவுக்கு மீண்டுமாகக் கிடைத்தது. அதற்காக அவள்...

தற்போதைய துருக்கியிலுள்ள தார்ஸஸ் நகருக்குப் போனாள். அங்கே எகிப்தின் இணை அரசனாக விளங்கிய மார்க் அந்தோணியைச் சந்தித்தாள். மற்றோர் அரசன் சீஸரின் கொள்ளுப் பேரன் முறையினனான ஒக்தாவியஸ் அகஸ்தஸ்.

மார்க் அந்தோணி கிளியோபாத்ராவின் பேரழகில் சொக்கிப்போனானாம். இருவரும் காதலர்களாக வாழ்ந்து அதனால் அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. அதன் பின்னரும் மார்க் அந்தோணியின் மையல் குறையவில்லை. அவளை மணந்துகொண்டு வாழ வேண்டும் என்று தீர்மானித்து அவனது மனைவியும் ஒக்தாவியஸ் அகஸ்தஸின் தங்கையுமான ஒக்தாவியாவை மணமுறிப்



படிப்பகம்

www.padippakam.com

புச் செய்தான். இந்தச் செயலால் ஆத்திரமடைந்த அகஸ்தஸ் மார்க் அந்தோணி மீது போர் தொடுத்தான்.

கி.மு.31ஆம் ஆண்டில் நடந்த இந்தப் போரில் படு தோல்வியடைந்ததனால் மார்க் அந்தோணியும் கிளியோபாத்ராவும் எகிப்துக்குத் திரும்பவும் ஓடிப்போனார்கள்.

கி.மு.30ஆம் ஆண்டில் அவர்கள் இருவரும் தற்கொலை செய்துகொண்டார்கள் என்பது வரலாறு. அதிலும் கிளியோபாத்ரா கொடிய விஷம் கொண்ட எகிப்திய நாகப்பாம்பு ஒன்றைத் தன் பொன்மேனியில் படரவிட்டு அது கொத்தி அந்த விஷம் காரணமாக செத்துப்போனாள் என்பதும் வரலாறு.

**கிளியோபாத்ரா பற்றிய புதிய ஆய்வுகள்**

எத்தனையோ மனிதர்களை மயக்கி தனது வாழ்க்கையை நடத்தியதாக கிளியோபாத்ராவைப் பற்றி நாம் அறிந்துள்ளபோதிலும் அவளைப் பற்றிய புதிய கண்டுபிடிப்புகள் வியப்பூட்டுவதாக அமைந்துள்ளன என்று ரேடியோ நெதர்லாந்து சொல்கின்றது. டாக்டர் எல் டாலி என்ற புகழ் பெற்ற வரலாற்று ஆய்வாளர் தனது ஆய்வுகளில் கண்டு அதை வானொலிக்குச் சொன்ன செய்திகள்:

''கிளியோபாத்ரா ஒரு அறிவியல் விஞ்ஞானி. மருத்துவர். கணிதத்தின் சில இயல்புகளைக் கண்டுபிடித்தவள். எல்லாவற்றுக்கும் மேலாக அவள் ஓர் அற்புதமான தத்துவவாதி. அது மட்டுமன்றி, ஒவ்வொரு வாரமும் அவள் தனது அரண்மனையில் விஞ்ஞான தத்துவ இயல்புகளைப் பற்றி அந்த அந்தத் துறைகளைச் சார்ந்த நிபுணர்களோடு தர்க்கம் செய்து வாதிடுவாள்.''

பழங்காலச் சுவடிகள் மூலம் அறியப்பட்ட இந்தத் தகவல்கள் மூலம் அன்றைய அராபிய அறிவியலாளர்கள் 'கிளியோபாத்ரா மிகவும் போற்றுதற்குரிய தத்துவவாதி மற்றும் ஞானி' என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றும் டாக்டர் எல் டாலி சொல்லியுள்ளார். 'அவளைப் பற்றி அவர்கள் மிகவும் உயர்வாக மதிப்பிட்டுள்ளார்கள்.'

பழங்கால எகிப்திய சித்திர வடிவிலான சுவடிகள் உலகமெங்குமுள்ள பல்வேறு நூலகங்களில் காணக் கிடக்கின்றன. அவற்றைப் படித்து டாக்டர் டாலி மேற்கொண்ட ஆய்வுகளிலேயே கிளியோபாத்ரா பற்றிய இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதனை 1820ஆம் ஆண்டில் ஜீன் ப்ரான்கோய்ஸ் என்ற ப்ரெஞ்சுக்காரர் ரொஸட்டா ஸ்டோன் என்ற பெண்மணியோடு இணைந்து ஆய்வு நடத்தி உறு திப்படுத்தியுள்ளார். இந்த ஆய்வுகள் அன்றைய இஸ்லாமியர்களின் கண்டுபிடிப்புகளைப் பற்றி யும் தெளிவுபடுத்தியுள்ளதாக டாக்டர் டாலி குறிப் பிடுகின்றார்.

பொதுவாக அந்நாளைய இஸ்லாமியர்க ளுக்கு விஞ்ஞானத்திலும் அதன் கண்டுபிடிப்புகளி லும் நாட்டம் இருந்ததில்லை என்று சொல்லப்பட் டாலும் அந்த ஆய்வுகளின்படி அப்போது எகிப்து பல வகையிலும் முன்னேறி இருந்தது என்றும், தொலைநோக்கிகளும், புது வகையிலான ஒளி அமைப்புக்களும், நகரங்கள் முழுவதுமாக ஒளி தரக்கூடிய நடுநாயக அமைப்புக்களும் பொருத்தப் பட்டிருந்ததாகவும், அதைப் போன்று ஏற்படுத்தப் பட்ட கலங்கரைத் தீபங்களால் எதிரிக் கப்பல்க ளைத் தூரத்திலேயே துல்லியமாகக் கண்டுபிடித்து அவற்றை அழிக்கக்கூடிய ஆற்றலையும் பெற்ற ருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

டாக்டர் டாலி ஓர் எகிப்தியர்தான். அன்றைய இஸ்லாமியர்கள் எதற்கும் உதவாதவர்கள், அறிவி விகள் என்று சொல்லப்படுகின்ற கருத்துக்கள் த றானவை; அவர்கள் விஞ்ஞான ரீதியாக எல்ல அறிவும் கொண்டிருந்தனர் என்பதற்கும் ஏரா மான ஆதாரங்களைச் சேர்த்து வெளியிட்டுள்ளா

இஸ்லாமியர்களைப் பற்றிய ஆய்வுகள லேயே அந்த நாள் கனவுக் கன்னியும் பல சாம்ரா யங்களைத் தவிடுபொடியாக்கியவளுமான ஏழா கிளியோபாத்ராவைப் பற்றிய அபூர்வ உண்மை களும் வெளிவந்து நம்மை இன்றைய நிலைமை களோடு சிந்திக்க வைத்துள்ளது என்றால் மிகைய காது.

''என்சைக்ளோபீடியா ஆப் வெர்ல்ட் ஹி டரி'' மற்றும் ரேடியோ நெதர்லாந்து நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# வணிக நாடகம்

கட்டுரை

எஸ். சுவாமிநாதன்

நாடகம் நலிந்து போனது.

அதற்கு காரணமான சினிமா, நாடகம் தந்த எதிர்வினைகளை தர முடியவில்லை.

அந்த சிறிய கிராமத்தில், ஆட்டோ ஒன்று, ஒலி நாடாவில் பதிவு பண்ணப்பட்ட நாடக விளம்பரத்தை, ஓயாமல் ஒலித்துக் கொண்டே கிராமம் கிராமமாக, சுத்துப்பட்டு கிராமங்களுக்கு தகிக்கும் வெயிலில் பயணித்தது. அந்த ஊரின் அளவையும், மக்கள் தொகையையும் வைத்துப் பார்த்தால், திருப்புறம்பயம் என்ற அந்த ஊரின் கோயில் மிகப் பெரியதுதான்.

சுற்றி இருக்கும் குட்டி குட்டி கிராமங்களுக்கும் அதுதான் பெரிய கோயில். மளிகைக் கடை, கட்சிக் கொடிகள், அரசியல் தலைவர்களின் படங்களைத் தாங்கிய சுவரொட்டிகள் - என்று தஞ்சையின் எல்லா கிராமங்களையும் போலத்தான் அந்த கிராமமும்.

87 வயது முதியவர் காசிநாத பிள்ளை, வணிக நாடக பாரம்பாரியத்தில், அந்த கொடியை இன்னமும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல்வாதிகளின் சுயநலப் போக்காலும், சுதந்திர இந்தியாவின் உறுதியற்ற நதிக் கொள்கைகளாலும், தமிழகத்தின் தஞ்சைப் பகுதி பாலைநிலமாய் வறண்டு போய்க் கொண்டிருக்கிறது.

150 ஆண்டுகளாக இந்த வணிக நாடகம், அந்தக் கோயிலின் உட்புறத்தில் வன்னி மரத்தடி மேடையில், ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் நடைபெறுகிறது.

வைகாசி விசாகத்தில், அந்த கோவிலில் காவடி எடுத்து, இந்த நாடகம் ஆரம்ப காலங்களில் ஐந்து முழு இரவுகளும், அப்புறம் மூன்று இரவுகளும் என்று ஆகி இப்போது இரண்டு இரவுகள் நடைபெறுவதாய் சுருங்கிப் போயிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

அந்த நாடகத்தின் கதை, அந்த கோயிலின் ஸ்தலபுராணம். இதை நாடகமாக எழுதிய நாயுடு, அப்போது நிலவி வந்த நாடக மரபுப்படி, மூன்றில் இரண்டு பகுதி இசைப் பாடல்களாகவும், ஒரு பகுதி வசனமாகவும் எழுதியுள்ளார்.

பெட்டி ஆர்மோனியம், மிருதங்கம், தாளம், பின் பாட்டுக்காரர்கள் - இதுதான் இசைப் பகுதி. மேடையின் இடது ஓரமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒலிபெருக்கி இருக்கிறது. பாத்திரங்களுக்கு ஒப்பனையுண்டு. நாடக உடைகளுமிருக்கிறது. இரண்டு அல்லது மூன்று சீன் படுதாக்கள். ஒளி விளக்குகள். முப்புறம் அடைத்து ஒரு பக்கம் மாத்திரம் திறந்து, பெட்டி வடிவிலான புரசீனிய நாடக மேடை அமைப்பு.

மேடைக்கு எதிரிலே, கோயில் உட்பிரகார கருங்கல் பாவிய தரைகளிலே, இரவு முழுவதும் உட்கார்ந்திருக்கும் பார்வையாளர்கள். சுற்றுக் கிராமத்திலிருந்தெல்லாம் வந்திருக்கும் பார்வையாளர்கள். பள பள வென விடிகிறபோது நாடகம் முடிகிறது. பார்வையாளர்கள் கலைகிறார்கள். .

ஒரே கதை. அதே பாடல்களும் வசனங்களுமாய், பாத்திரங்கள் ஏற்று நடிக்கும் மனிதர்கள் மாத்திரம், காலந்தோறும் மாறி, பார்வையாளர்களும், தலைமுறை தலைமுறையாய், புதியன சேர்ந்து, பழையன கழிந்து, - ஆனால் நாடகம் அதே நாடகம்தான். வருடத்திற்கு ஒருமுறைதான் நிகழ்த்தப்படுகிறது. அந்த ஊரில் அந்த கோவில் உட்பிரகாரத்தில் மாத்திரம்தான் நடத்துகிறார்கள். இந்த நாடகத்தை அவர்கள் வெளியே எடுத்துச் செல்வதில்லை.

உன்னதமான அனுபவம். உன்னதம் என்பதற்கு, 1840 ல் 150 புத்தகங்கள், மதத்தத்துவங்கள் குறித்து எழுதிய சோமசுந்தர நாயக்கர் ஒரு அர்த்தம் சொல்கிறார். உடைபட உடைபட கடைசிச் சில்லிலும் அதே பண்புகள் கொண்டது எதுவோ, அதுவே உன்னதம்.

'திருப்புறம்பயம் க்ஷேத்திரத்தில் உள்ள சிவபெருமான் ஓர் வணிகப் பெண்ணின் நிமித்தம் எளிதில் பிரசன்னராய், சர்ப்பம் தீண்டிய அவள் கணவனை எழுப்பி, மதுரையில் உள்ள உறவினர் சந்தேகம் தீர, மதுரை சென்று, சாக்ஷி கூறிய திருவிளையாடலை, அருள்மிகு சாட்சிநாத ஸ்வாமி ஆலயத்தில், வைகாசி மாதம் 21ம் தேதி 04.06.2005 சனிக்கிழமை இரவு முதல் தொடர்ந்து இரண்டு நாட்கள் நாடக ரூபமாக நடத்துகிறோம்'.

என, வணிகர் நாடகசபை வெளியிட்டுள்ள வணிகர் நாட்டிக பத்திரிக்கையில் கதைச்சுருக்கம் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நாடகத்தில் பாடப்படுகின்ற பாடல்கள் நாடகம் எழுதிய போது, புழக்கத்தில், புகழ் பெற்றிருந்த பாடல் மெட்டுகளிலும் கீழ்க்கண்ட ராகங்களிலும் பாடப்படுகிறது. தேவாரப் பாடல்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**ராகங்கள்**

நாட்டை

மத்தியமாவதி

காம்போதி

கானடா

தன்யாசி

கேதாரகௌளம்

மோகனம்

காப்பி

தோடி

கல்யாணி

அடானா

இந்துஸ்தான் பியாக்

கேதாரம்

முகாரி



படிப்பகம்

www.padippakam.com

மெட்டு

மலடி வயிற்று மகள் ...

அன்னமின்ன நடையான் ...

வாகாவா ...

மகிசாசுரமர்த்தினி ...

ரெங்கநாயகம் ...

சாந்தமுலேகா ...

தினந்துதிப்பாய் நெஞ்சே ...

விட முசாயவே ...

திவ்யதரிசனம் தரலாகாதா ...

நந்தகோபாலா ...
மனமிக சோருதே ...

தென்திசை காவலரே ...

கனவு பலித்தது ...

கல்யாணம் செய்த பின்பு ...

இன்னும் வரக்காணலையோ ...

வீணனையேன் படைத்தாய் ...

நல்லோர் பெரியோரென்னை ...

ஏறாதமலை தனிலே ...

சொந்தமான கந்தவேலா

கேட்ட குறிகள் ...

அய்யா பழனிமலை வேலா ...

கூட்டுறவு பேசி ...

சண்டைக் கென்று வந்த மூடா ...

செந்தமிழ் உலகினில் ...

மார்க்கத்தில் கண்ட ...

காளையின் மேல் வா சுருக்காய் ...

இந்த நாடகத்தில் பெண்கள் நடிப்பதில்லை.



ஆனால் பார்வையாளர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்தான். பெண் வேடங்களை ஆண்களே வேடம் புனைந்து நடிக்கிறார்கள். தொழில் முறை நாடக நடிகர்கள் ஒருவரும் இல்லை. இந்த நாடகத்தில் நடிக்கிற ஊர்க்காரர்கள், வருடத்திற்கு ஒரு முறை இந்த நாடகத்தில் நடிப்பதோடு சரி. அதற்குப் பிறகு அவரவர் பிழைப்பைப் பார்க்க போய் விடுகிறார்கள்.

ஆச்சரியமான செய்தி. ஒருவரே எத்தனை பாத்திரம் ஏற்று மாறி மாறி நடித்தாலும் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதைவிட ஆச்சரியம் - நாடகத்தில் குறிப்பிட்ட காட்சி வரை ஒரு பாத்திரத்தை ஏற்று ஒருவர் நடிப்பதும், ஒரு காட்சிக்குப் பிறகு அதே பாத்திரத்தில், இன்னொருவர் நடிப்பதும், அதற்கு பிறகு, சில காட்சிகளுக்குப் பிறகு முதலில் அந்த பாத்திரத்தை ஏற்று நடித்தவரே மீள அந்த பாத்திரம் புனைந்து நடிப்பதும், பார்வையாளர்களால், எந்த இடருமின்றி ஏற்றுக் கொள்ளப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஒருவர் ஒப்பாரி பாடுவதில் வல்லவர். மூன்று மணி நேரத்திற்கு மேலாக, பிணம் மாதிரி ஒருவரை படுக்க வைத்து விட்டு, அதனருகே அமர்ந்து ஒப் பாரி பாடுகிறார். அரவம் தீண்டி பிணமானவரே, அரவம் தீண்டி பிணமானதும், படுதாவை இறக்கி விட்டு, மனைவி வேடம் பூண்டு, வேறு ஒருவரை, வெள்ளைத் துணியால் மூடி, பிணமாக படுக்க வைத்துவிட்டு, ஒப்பாரி பாடத் தொடங்குகிறார். எல்லா நேரங்களிலும் இது நாடகம் என்று உணர்த் தப்படுகிறது. ஆனாலும், பார்வையாளர்கள், நிஜம் போலவே, காட்சிகளில் ஒன்றிப் போகிறார்கள்.

திருமணம் நடைபெறும் காட்சியில், நாதஸ் வர மேளத்துடன், அந்த காட்சி வரும் இரவு மூன்று மணிக்கு, ஊரின் தெருக்களில் ஊர்வலமாய், ஊர் மக்களே, ஆண்களும் பெண்களுமாய் கல்யாண சீர் கொண்டு வந்து மேடையில் அமர்கிறார்கள். கல் யாண காட்சி முடிந்ததும், அவர்கள் மேடையை விட்டு கீழே இறங்கி, பார்வையாளர்களாக அமர்ந்து நாடகம் பார்க்கிறார்கள்.

அதே மாதிரி, பள்ளிக் கூடம் நடைபெறும் காட்சியில், அந்த ஊர் ஆரம்பப் பள்ளி வாத்தி யாரே, வாத்தியார் பாத்திரமேற்று நடிக்கிறார். வகுப்பறையில், கதைப்படி உள்ள இரண்டு சிறு வர்களைத் தவிர, மற்ற சிறுவர்கள் அனைவரும், அந்த ஊர் பள்ளியில் படிக்கிறவர்களே, ஒப்பனை யின்றி மாணவர்களாக நடிக்கிறார்கள். அந்த பள் ளிக் கூட வகுப்பறைக் காட்சி முடிந்ததும் அவர் கள் மேடையை விட்டு கீழே இறங்கி, பார்வை யாளர்களாய் மீதி நாடகத்தைப் பார்க்கிறார்கள்.


காலப்போக்கில், காட்சிகளுக்கிடையே, சில சமயம் தொழில்முறை நடிகர்கள், சில சமயம் ஊர்க்காரர்களில் ஒருவரே, பபூன் வேடம் தரித்து, சிரிக்க வைக்கிற இடையீடு காட்சிகளும் சேர்ந்தி ருக்கிறது. ஆனால், நாடகப் பிரதியில், அந்த காட் சிகளில்லை. அரச தர்பார் காட்சியில், ஆணே பெண் வேடம் தரித்து, பரத நாட்டியம் அல்லது சதிர் ஆடுகிற மாதிரி காட்சி இடைச் செருகல்க ளும், காலத்தின் சுழற்சியில் இடையீடாக சேர்த்தி ருக்கிறார்கள். இதுவும் நாடகப் பிரதியில் இல்லை.

இந்த நாடகத்திற்கு, இயக்குநர் என்று யாரும் இல்லை. இந்த நாடகப் பாரம்பரியத்தில் வந்த 87 வயது காசிநாத பிள்ளைதான், வாத்தியராக இருந், இரண்டு முழு இரவுகளில் நடத்தப் பெறும் இந்து நாடகத்தின் அனைத்து பாத்திரங்களுக்கும் பாடல் களையும், வசனங்களையும் சொல்லி கொடுக்கி றார். இவருக்கு முழு நாடகமும் மனப்பாடம். படித்து மனப்பாடம் செய்யவில்லை. 1942 லிருந்து இந்த நாடகத்தில் பல பாத்திரங்கள் ஏற்று நடித்து, நாடகத்தில் பாடப்படும் பாடல்களையும் வசனங் களையும் கேட்டு கேட்டு மனப்பாடமாகி இருக்கி றது. அடிப்படையில் இவர் ஒரு தஞ்சை மிராசு தார். விவசாயம்தான் தொழில். காவிரி பொய்த்துப் போய் தஞ்சைத் தரணி பாலையானதில், இவரும் இவருடைய குடும்பமும்தான் சேர்த்துதான் நலிந்து போயிருக்கிறது. தன்னுடைய பேரன் களை இந்த நாடகத்தில் நடிக்க பழக்குகிறார். மகன்கள் இருவர் நாடகத்திற்கான மற்ற பின் வேலைகளைச் செய்கிறார்கள். நாடகம் இவர்க ளுக்கு தொழில் இல்லை. இந்த நாடகத்தின் ஒத் திகை கூட முறையாக எல்லா பாத்திரங்களும் ஒரு சேர இருந்து நடப்பதில்லை. நாடகம் நடப்பதற்கு ஒரு வாரம் முன்பாக எந்தப் பொழுது யாருக்கு தோதுப்படுகிறதோ, அந்த நேரத்தில் அவரிடம் வந்து தங்களுடைய பாடல்களை வசனங்களை பாடி பேசி ஒத்திகை பார்த்துக் கொள்கிறார்கள். எல்லோருக்கும் வேறு தொழில் இருக்கிறது. அவர்கள் எல்லோரையும் ஒரு சேர ஒரு இடத்தில் கூட்டி ஒத்திகை நடத்த நிதியுமில்லை, வசதியு மில்லை. நாடகம் நடத்துகிற இரண்டு நாட்கள் மாத்திரம், நாடகத்திற்காக பெறப்பட்ட நன்கொ டைகளை வைத்து நாடகம் சம்பந்தப்பட்ட அனை வருக்கும் காசிநாத பிள்ளை வீட்டிலேயே சாப் பாடு. கடந்த மூன்று ஆண்டுகளாக, தொடர்ச்சி யாக மூன்று முறை அவரோடு சேர்ந்து இந்த நாட கத்தில் அரசர் வேடம், வணிகர் வேடம், அரதன வல்லி என்ற இரண்டாம் மனைவியின் வேடம் ஆகிய மூன்று வேடங்களையும் ஏற்று நடிக்கும்



படிப்பகம்

www.padippakam.com



வாய்ப்பில் பெற்ற அனுபவங்கள் மனதளவில் திகைப்பாயிருக்கிறது.

பாதல் சர்க்காரும், வீதி நாடக பங்கேற்பும் பரீக்ஷா நாடகப் பங்கேற்புகளும் முன் அனுபவ மாயிருந்தாலும், கண்ணப்ப தம்பிரானின் பாரத தெருக்கூத்தை பத்து நாட்கள் கூட இருந்து படமாக் கியதில் பெற்ற அனுபவம் நெஞ்சில் ததும்பினா லும், எண்ணற்ற பிரிட்டிஷ், அமெரிக்க மற்றும் தேசிய நாடகப் பள்ளியின் நாடகங்கள், இருபது ஆண்டுகளாக, நவீன தமிழ் இலக்கியவாதிகள் சென்னையில் நடத்தும், ஐரோப்பிய தாக்கமுள்ள - நவீன நாடகங்கள் என்று சொல்லப்படுகின்ற அபத்த நாடகங்கள் ஆகியவற்றை பார்த்திருந்த அனுபவமிருந்தாலும், தென்னிந்திய நடிகர் சங்கம் - சங்கரதாஸ் அரங்கத்தில் கடந்த சில ஆண்டுக ளுக்கு முன்வரை, ஆண்டுதோறும், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் நாடகம் என்ற பெயரில் தமிழ் சினிமாவின் தாக்கத்துடன் நடத்தப்படும் இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை, சென் னைக்கு தருவித்து நாடகப் போட்டியில் பங்கேற்க வைத்த நாடகங்ளை பார்த்த அனுபவம் மனதில் உறைந்து போயிருந்தாலும், திருப்புறம்பயத்தில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த வணிக நாட கத்தில், பார்வையாளனாகவும், பங்கேற்பாளனா கவும் பெற்ற அனுபவங்கள், நாடகம் பற்றிய சிந் தனைகளை மறு பரிசீலனைக்குள்ளாக்குகிறது.

தமிழின் மிகச் சிறந்த நாடகம் சிலப்பதிகாரம் தான். 5000 வருடங்களுக்கு முன்பே தொல்காப்பி யத்தில் நாடகத்திற்கும், நடிப்பிற்கும் 'நகை, இளி வரல் ....' என்று இலக்கணம் சொல்லப்பட்டிருக் கிறது. நவாப் ராஜமாணிக்கமும், டி.கே.எஸ். சகோதரர்களும், எம்.ஆர். ராதாவும், மிச்ச சொச்ச



படிப்பகம்

www.padippakam.com

மாய் இந்த உன்னதக் கலையின் தொடர்ச்சியை நமக்கு தந்தார்கள். நாம் அதனை, நவீன தமிழ் நாடகத்திலும், சென்னை சபாக்களில், சமீப காலம் வரை கோலோச்சி வந்த துணுக்குத் தோரண நாடகங்களிலும் தொலைத்து விட்டோமோ என்று தோன்றுகிறது.

தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் நாடகம் செத்துப் போனதைப் போல, திருப்புறம்பயத்திலும் அது நலிவின் உச்சத்தில்தான் இருக்கிறது. உரக்கடைக்காரரும், காசிநாத பிள்ளையிடம் மரியாதையும் அன்பும் கலந்த தோழமை பூண்ட ஒரு தன வணிகரும், இந்த நாடகத்தை நடத்துவதற்கு தோள் கொடுக்கிறார்கள். திருப்புறம்பயத்தில் ஊரின் நடுவே உள்ள, அந்த பிரம்மாண்டமான கோவிலின் தென்னைமரம் அளவு உயரத்தில் கட்டப்பட்டுள்ள மதில் சுவரின் ஒரு நீண்ட பகுதி இடிந்து குட்டிச் சுவராகி இருக்கிறது. அதனை மீண்டும் கட்ட சில இலட்சங்கள் ஆகுமாம். இந்த நாடகத்தை நடத்த சில ஆயிரங்கள் திரட்டவே கஷ்டப்படுகிற திருப்புறம் பயத்துக்காரர்கள் மதில் சுவரை சீர் செய்ய சில இலட்சங்களுக்கு எங்கே போவார்கள். கோயிலும், கோயில் சார்ந்த கலாச்சாரங்களும் கலை வெளிப்பாடுகளும், அழிந்து போகாமல் காப்பாற்ற, தமி சூழலில் நிறைய இடர்பாடுகள் இருக்கின்றன.

கோயிலை புறக்கணிக்கச் சொன்ன கடந்த ஐம்பதாண்டு கால அரசியலாருக்கு, இந்த நியாயங்களை புரிய வைக்க நிறைய வாதங்கள் எடுத்து வைக்க வேண்டும். பழங்கலைகளைக் காப்பாற்ற, மக்கள் வரிப்பணத்தில் நடத்தப் பெறும் அரசு அமைப்புகள் இதில் கவனம் செலுத்தலாம்.

தமிழக கலை பண்பாட்டுத் துறை, தென்னிந்திய கலை பண்பாட்டு மையம், சங்கீத நாடக அகாடெமி ஆகியவற்றின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

ஊர் மக்களே இப்போது நடத்துவதைப் போல, நடத்த வேண்டுமென்றால், காவிரியில் தண்ணீர் வந்து, விவசாயம் நடைபெற்றால்தான் பணப்புழக்கம், - காவிரியில் தண்ணீர் வருவதும் கானல் நீர்தான்.

இப்போதைக்கு, ஒன்றிரண்டு பேர் சில ஆயிரங்களும், சில பேர் சில நூறுகளும், ஊர் மக்கள் பத்தும் இருபதும் ஐம்பதுமாக நன்கொடையாக தரும் கொஞ்சம் தொகையையும் வைத்து வணிக நாடகம், தன் கடைசி மூச்சை விட்டு விடாமல் இழுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு இன்னலான சூழ்நிலையிலும், திருப்புறம்பயத்திலிருந்து, நாடகம் நடித்து சென்னை திரும்பிய சில நாட்களில் தொலைபேசியில் செய்தி சொல்கிறார்கள். 87 வயது காசிநாத பிள்ளை, இந்த நாடகம் நடத்தி முடித்த உற்சாகத்தில், உத்வேகத்தோடு முதுமையையும் மீறி புதுப் பொலிவோடு வலம் வருகிறாராம். இரண்டு முழு இரவுகள் அந்த வயதில் மேடையில் வணிகர் வேடமும், அரதனவள்ளி என்ற பெண் வேடமும் தரித்து மணிக்கணக்கில் இந்த முதுமையில் பாடி நடிப்பதைப் பார்த்தால், பிரமிப்பாயிருந்தது?

அவரது வாழ்வில், இந்த நாடகம் என்னமாய் கரைந்து, உள்ளே ஜீவிக்கிறது என்று கண்டறிய முடியவில்லை. அந்த நாடகப் பாடல்களுக்கான ராகங்களையும், மெட்டுக்களையும் அவரிடமிருந்து நேரடியாகப் பெற்று, அந்த ஊரின் இன்னொரு தலைமுறைக்கு கொண்டு சேர்க்க வேண்டும். அப்போதுதான் இந்த உன்னதமான பாரம்பரியம் தொடரும்.

நாடகம் நடிக்கிறவர்களையும், பார்க்கிறவர்களையும் ஒரு சேர எப்படி பாதிக்கிறது என்கிற அனுபவத்தையே இழந்து போன நமக்கு, இந்த முயற்சிக்கான சாத்தியங்களைத் தேடி பயணிக்க இயலுமா?

வாழ்க்கையில் கணவனாக, மனைவியாக, மகனாக, மகளாக, சகோதரனாக, சகோதரியாக, தந்தையாய், தாயாய், வயிற்றுப் பிழைப்புக்கு ஊழியம் தேடுபவராய், அரசியல் கட்சியின் தொண்டனாய், சினிமா நடிகரின் ரசிகர் சங்க உறுப்பினனாய், நவீன இலக்கியவாதியாய், - இப்படி காலந்தோறும் நாள்தோறும் பல பாத்திரங்களேற்றுக் கொண்டிருக்கும் நமக்கு, அப்படி கூடு விட்டு கூடு பாயும் வித்தை, பயிற்சியாய் பழக்கமாய், சுலபப் படுவதற்காகவாது தொன்மையான தமிழ் நாடக மரபுகள் பேணப்படலாம். ●



படிப்பகம்

www.padippakam.com

# அதுதான் சரி...!

உஷாதீபன்

சிறுகதை

நேர் சாலையில் சென்றாலோ, அதற்கு முன்னதாகவே வீட்டை ஒட்டிவரும் தெருவில் புகுந்து பிரதான சாலையை அடைந்தாலோ, நிச்சயம் அவர் வழிமறிக்கக் கூடும் என்ற நினைப்பில் வீட்டின் அருகில் பிரியும் தெருவில் இதுவரை போகாத நேர் பாதையைப் பிடித்து நீள நெடுக வண்டியை விட்டான் இவன்.

அந்த வழியே போய் உழவர் சந்தையை ஒட்டி வரும் குறுக்குச் சந்தில் புகுந்து பிரதான சாலையை அடைந்துவிடுவது என்பது அவன் எண்ணமாக இருந்தது.

இப்படியான ஒரு சிந்தனையைத் தன்னிடம் ஏற்படுத்தியதே அவர்தான் என்று நினைத்தபோது ஒரு பக்கம் சிரிப்பாகவும் அதே சமயம் கோபமாகவும், வருத்தமாகவும் கூட இருந்தது.

காலையில் எழுந்து அலுவலகம் சம்பந்தமான சிந்தனைகளில் தேவையானதை மறக்காமல் எடுத்து வைத்துக்கொண்டும், அன்று போய்ச் செய்ய வேண்டிய பணிகளைக் குறித்து வைத்துக்கொண்டும் கிளம்புவதுதான் பழக்கமாக இருந்ததை மாற்றிய பொறுப்பு அவருடையதுதான்.

கடந்த ஒரு வாரமாய் புத்தியில் அடிக்கடி தோன்றி தொந்தரவு செய்கிறார். தவிர்க்க முடியாததாகிவிட்டது அது.

தன்னிடம் இம்மாதிரி ஒரு குணம் படிந்திருக்கிறது என்பதையே உணர வைத்ததும், கிளறிவிட்டதும் அவர்தான்.

இத்தனை வயதினைத் தாண்டிய இப்பொழுதிலும் கூட, அது தவறு என்று தெரிந்தும் தன்னால் அதைத் தவிர்க்க முடியவில்லை. ஒரு மனிதனின் எண்ண முதிர்ச்சி, செயல் முதிர்ச்சி, இவற்றிற்கு ஆதார சுருதியாக உடலில் தோன்றும் உணர்வலைகள் தகித்து, அதனைக் கிளறுகின்றன. தூங்கிக்கொண்டிருக்கும் தீய எண்ணங்கள் முளை விடுகின்றன. உடம்பும் புத்தியும் அந்த நேரத்தில் சூடேறுகிறது. தேவையில்லாத எண்ணத் தொந்தரவுகள் எழும்பி நச்சரிக்கின்றன.

எதற்கு அநாவசிய டென்ஷன்? பேசாமல் ஏற்றுக்கொண்டு போக வேண்டியதுதானே? என்று ஒரு எண்ணம்.



படிப்பகம்

www.padippakam.com

எல்லாம் மனிதனின் மனதைப் பொறுத்த விஷயமாய் இருக்கிறது. இந்த மனது சரி என்று ஏற்றுக் கொண்டால் சரி. அது நல்லதோ, கெட்டதோ அது பற்றிக் கவலையில்லை. பிறகு அறிவு அதற்கேற்றாற்போல் வேலை செய்ய ஆரம்பித்துவிடுகிறது. நல்லது கிடைத்தால் நல்லது. தீயது நடந்தால் பிறகு அதனையும் அவ்வப்போதைய நிகழ்வுகளுக்கு ஏற்றாற்போல் எதிர்கொள்ளவும் மனசு தயார் ஆகிவிடுகிறது. தீயதுதான் என்று தெரிந்தும் அதனை வெற்றி கொள்வதும், அடக்கி ஒடுக்கிக் காலடியில் வீழ்த்துவதும் பெருமை மிக்க, வீரிய மிக்க செயலாக மாறிவிடுகிறது.

இதற்குப் போய் இம்புட்டு யோசிக்க வேண்டுமா என்று தோன்றியது. தேவையான சிந்தனைதான் என்றது மனது. எல்லா மனிதர்களிடத்திலும் பலவீனங்களும் இருக்கிறதுதானே? அம்மாதிரி பலவீனங்கள் செல்லுபடியாகிற இடத்தில், மனிதன் அதைப் பிரயோகிக்கக முயல்வது இயற்கையோ?

நீண்டிருந்த சிந்தனை திடீரென அறுந்தது. எதையோ கண்டுவிட்ட அரவம். வண்டி கொஞ்ச தூரம் தாண்டிவிட்ட கணக்கில் ''ம்ம்ம்... விடு... வண்டிய...'' என்று ஒரு மனது விரட்டியடிக்க, ஏனோ அவனையறியாமல் வண்டி தானே நின்று போனது. இத்தனை நொம்பளத்திற்கும் காரணமான ''சார்... சார்'' என்ற அவரது குரலின் ஒலியலைகள் இன்னும் அவனை நோக்கி வந்துகொண்டிருப்பதாய் உணர்ந்தான். தலையைத் திருப்பி அவரைப் பார்த்தான். சற்றுப் பாவமாய்த்தான் இருந்தது. அவரது முகமே அப்படித்தானோ என்று தோன்றியது. அசட்டுக்களை லேசாகக் கலந்திருந்தாலோ முகம் அப்பாவியாக மாறிவிடும் போலும் என்று நினைத்துக் கொண்டான்.

''மினி பஸ்ஸுக்கு நின்னுட்டிருந்தேன்... வரல்லை... இப்படியே நடப்போம்... காலை நேரமா இருக்கேன்னு நடக்க ஆரம்பிச்சேன். நீங்களும் வந்துட்டீங்க... என்றவாறே ஃபுட் ரெஸ்ட்டை எடுத்து காலை அதில் வைத்து உன்னியவாறே பின்னால் உட்கார்ந்து கொண்டார்.

''உட்காரவா?'' என்று கூடக் கேட்கவில்லை. அத்தனை உரிமையா?

''நான்தான் சொன்னேனல்ல... உட்கார்ந்திட்டுப் பிறகு காலை வைச்சிக்குங்கன்னு... அதிலே காலை வச்சு தம் பிடிச்சு ஏறினீங்கன்னா அது வெயிட் தாங்காது தார், உடைஞ்சிடும்... ''இன்னும் சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை.

ஒரு வாரம் முன்பு ஒரு நாள் சொன்னான். ''ஓ, அப்டியா?'' என்றார். அத்தோடு சரி.

தான் சொன்னது மறந்துவிட்டதா? அல்லது அதுதான் உடையலியே? என்ற அலட்சியமா?

இதற்குமுன் இரண்டு முறை அதை மாற்றியிருக்கிறான். ஒவ்வொரு முறையும் நூற்றி இருபது செலவு. இப்பொழுது இருப்பது பாதி உடைந்தது.

மாற்றுவதாக இல்லை இவன். எத்தனை முறை தண்டம் அழுவது? என்றுவிட்டுவிட்டான். மீதியும் உடையலியே? என்று நினைக்கிறாரோ? உடைந்தது ஜங்ஷன் ஸ்டாண்ட் உபயம்.

''வண்டி நல்லா ஸ்மூத்தாப் போகுது சார்...'' என்றார் அவர்.

''இருக்கும்... இருக்கும்... ஓசிப் பயணம் தானே... சுகமாத்தான் இருக்கும்...'' நினைத்துக் கொண்டான் இவன்.

அவருக்கு எந்த பதிலும் சொல்லாமல் இருப்பதே தனது அதிருப்தியைக் காண்பிப்பதற்கான அடையாளம். இதை அவர் உணர்ந்த மாதிரித் தெரியவில்லையே? தெரியவில்லையா? அல்லது காட்டிக்கொள்ளவில்லையா? ஓசிப் பயணம் செய்தே ஆக வேண்டும் என்று முடிவு கட்டிவிட்டவருக்கு ஏது பொருட்டு?

தினமும் ஏதாவது சொல்லத்தான் செய்கிறார் அவர்.


''குட் டிரைவிங்... நாட் ஸ்லோ... பட் ஸ்டெடி...'' என்றார் நேற்று. ஒரு சுமுக நிலைக்காக அப்படிச் சொல்கிறார் என்றுதான் தோன்றியது. இவனின் எதிர்வினை எதுவுமில்லை.

இன்று என்ன சொல்லப் போகிறாரோ? என்று நினைத்தபோது ஆரம்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com



''இன்னைக்கு என்ன உழவர் சந்தைப் பக்கத்து ரோடு வழி வர்றீங்க?'''

அவரது கேள்வியில் விநயம் தெரிந்தது. குயுக்தியான ஆள்தான்.

என் வண்டி. என் இஷ்டம். நான் எந்த வழி வந்தால் என்ன? இது இவருக்கு வேண்டாத கேள்வி தானே?

தான் அவரிடமிருந்து தப்பிக்க நினைத்ததை உணர்ந்தே கேட்கிறாரோ?

''வழக்கமா காலனில தண்ணீர் பிடிக்கப் போவேன். நேத்து தண்ணி வரலை. இன்னிக்கு குடத்தை வச்சிட்டு, காசு கொடுத்து பிடிச்சு வைக்கச் சொல்லிட்டு வர்றேன்... அதனால்தான் இந்த ரூட்...''

இத்தனை விஸ்தாரமான பதில் தேவையில்லைதான். ஆனாலும் ஏதோவொன்று தடுக்கிறதே? சட்டென்று முறித்துப் பேச வாய் வரமாட்டேன் என்கிறதே?

இந்த பலவீனம்தான் அவருக்கு பலமோ? அப்படிப் பேச இன்னும் வலுவான ஒரு சந்தர்ப்பம் வேண்டுமோ?

இந்த மாதிரி நினைப்பு கொடுத்த அழுத்தம் தான், நாலு நாளைக்கு முன்பு அவர் கையசைத்த போது, பார்க்காதது போல் விருட்டென்று வண்டியை விட்டுக்கொண்டு பறந்தது.

பிறகு என்னடாவென்றால் கர்சீப்பை உதறி - ரெயில்வே கார்டு போல் பறந்து பறந்து கொடிய சைத்து நிறுத்துகிறார் வண்டியை. மேலேயே வந்து விழுந்துவிடுவார் போலிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

''போனால் போகட்டும் பாவம். ஏத்திண்டு போங்களேன்... தேய்ஞ்சா போறது?'' என்றாள் விமலா.

''என்னிக்காவது ஒரு நாள்னா பரவாயில்லை. தினமுமா? அதுக்கொரு விவஸ்தையில்லை? எனக்கென்ன தலைவிதியா?''

இப்படி இருந்தவரை ஒரு நாள் வண்டியோடு பார்த்தான். மொபெட்டில் சல்லென்று பறந்து கொண்டிருந்தார். ''அப்பாடா... விட்டது சனி...''

அவரோடு சண்டைபோடும் முன்பே வண்டியோடு பார்த்தது பெருத்த ஆறுதலாயிருந்தது.

''என்ன சார்! வண்டி வாங்கியாச்சு போலிருக்கு?'' என்றான்.

''என் சகலை வண்டி சார்...'' என்றார் படக்கென்று. இவனுக்கு சப்பென்று போனது.

அந்த வாரம் பூராவும் சுதந்திரமாய் உணர்ந்தான் இவன். கையசைப்பு இல்லை. கொடியசைப்பு இல்லை. மறியல் இல்லை. ஆஹா! மனசே லேசாகிப் போனதே?

ஒரு ஞாயிறு விடுப்பு கழிந்த திங்களன்று அரசமரம் ஸ்டாப்பில் திடீரென்று வழிமறித்துவிட்டார் மீண்டும்.

பின்னால் அமர்ந்தவர் வாய் மூடி வந்திருக்கலாம். அல்லது பொதுவாக நலம் விசாரித்திருக்கலாம். ரெண்டுமில்லாமல் ஒன்று கேட்டார்.

''ஒரு வாரம் நல்லா, ஃப்ரியா இருந்திருப்பீங்க...''

அதிர்ந்துபோனான் இவன். இந்தாளுக்குப் பேசவே தெரியாதா? என்று நினைத்தான் என்ன திமிரான கேள்வி.

அன்று ஆபீசுக்கான ரயில் பயணத்தின்போது, பின் சீட்டில் அமர்ந்திருந்த அவர், எதிரே ஒருவரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

''ஒரு வாரம் சகலை வண்டிய வச்சிருந்தேன். பெட்ரோல் போட்டு, மாளலை... ஒரு மாச சீசன் டிக்கட் காசை முழுங்கிருச்சே சார்.. என்ன அநியாயம்?''

எப்படி அவரைத் தவிர்ப்பது என்பது பெரும் பிரச்னையாகத்தான் இருக்கிறது. இந்த மண்டைக் குடைச்சலுக்கு என்று தீர்வு?

''சார்... நிறுத்துங்க...'' குரல் கேட்ட பின்புதான், இன்றும் அவர் பின்னால் உட்கார்ந்திருக்கிறார் என்ற நினைப்பே வந்தது இவனுக்கு

''ரைட்... ஓ.கே... நீங்க போகலாம்...'' என்றுவிட்டு சாலைப் பிளாட்பாரத்தில் ஏறி நடக்க ஆரம்பித்தார் அவர்.

அவரது செயல், பேச்சு எல்லாவற்றிலுமே ஒரு அதிகாரம் மிளிர்வதை அப்பொழுதுதான் உணர்ந்தான் இவன். நன்றி சொல்வது கூட என்றாவதுதான். அதிலும் ஒரு கௌரதை, மிடுக்கு. ஏதோ அவரைக் கொண்டு வந்து இறக்கிவிடுவது தனது ட்யூட்டி என்பது போல!

வண்டியை ஸ்டாண்டில் நிறுத்தினான். டோக்கன் பெற்றுக்கொண்டு, பக்கத்துப் புத்தகக் கடைக்குள் நுழைந்து ஒரு மாத இதழை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான். அப்போது அது தற்செயலாய் அவன் கண்ணில்பட்டது.

எதிர்த்த காபி ஸ்டாலில் தனிஆளாய் நின்று ருசித்து காபி குடித்துக்கொண்டிருந்தார் அவர். அங்கே அஞ்சு ரூபாய் காபி. அந்த ஏரியாவில் காற்றில் கலந்திருந்தது அந்த சுகந்த மணம். அது இவன் நாசியைப் பதம் பார்த்தது.

தினசரி ஜங்ஷன் வாசலில் குறிப்பிட்ட இடத்தில் அவர் இறங்கிச் செல்வது இதற்காகத்தானா? என்று நினைத்தபோது மனதுக்குள் ஆத்திரம் பொங்கியது.

ஒரு சம்பிரதாயமாகக் கூட ஒரு நாள், ஒரு பொழுது அழைக்கவில்லையே?

மறுநாள் காலையில் வழக்கம் போல் கிளம்பி ஆபீஸ் வந்துகொண்டிருந்தான் இவன். குறிப்பிட்ட அதே இடத்தில் நின்று கையசைத்தார் அவர்.

அவரை நோக்கி இடது கையை நீள நீட்டிச் சத்தமாய் ''போய்யா'' என்று விட்டு விர்ரென்று பறந்தான் இவன்.

●



படிப்பகம்

www.padippakam.com

# மதிப்புரையும் திறனாய்வும்

கட்டுரை

ம.ந.ராமசாமி

நூல்கள் பல வெளியாகின்றன. எழுத்தாளர்கள் எழுதித்தர, பதிப்பாளர்கள் அச்சிட்டு விற்பனை செய்கின்றனர். என்னதான் வாசகர்கள் இலக்கியம், கலை என்ற உணர்வுடன் ரசனை, சுவை, சௌந்தர்ய உபாசனை தாகத்துடன் நூல்களை அணுக இருந்தாலும், அந்நூல்களுக்கும் விளம்பரம் தேவைப்படுகிறது. பொதுவான வாசகர்களுக்கான விளம்பரம்.

பதிப்பாளர்களே தாங்கள் வெளியிடும் நூல்களுக்கு பட்டியல் தயாரித்து விநியோகித்து விளம்பரம் செய்கிறார்கள். விளம்பரம் என்பதில் ஒரு பிரிவு பட்டியல். நூல் நிலைய நிர்வாகிகளுக்கு இப்பட்டியல் தவறாமல் செல்கின்றது.

நன்கு பேசப்படும் எழுத்தாளர்களின் நூலாக இருந்தால், பதிப்பாளர்களால் பத்திரிகைகளில் விளம்பரம் தரப்படுகிறது. அப்பத்திரிகையின் வாசகர்கள் விளம்பரத்தைக் கவனத்தில் கொள்ள, நூலைத் தேடிப் போக இந்த விளம்பரம் உதவுகிறது. ஏற்கெனவே வாசகர்களின் மனதில் இடம்பெற்றுவிட்ட நூலாதலால், விளம்பரச் செலவு பற்றிப் பதிப்பாளர் யோசிப்பதில்லை. இந்தப் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்கள் கூடுதலாகவே அச்சிடப்படும். நூலின் விலையும் சற்றுக் கூடுதலாக இருக்கும். ஆகவே விளம்பரத்துக்கான செலவு பதிப்பாளருக்குக் கட்டுப்படி ஆகும்.

நூல் மதிப்புரை என்று பத்திரிகைகளில் வருவதும் விளம்பரம்தான். நூல்கள் விற்பனை ஆக வேண்டும், வாசகர்கள் வாங்கி வாசிக்க வாய்ப்புத் தர வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சில பத்திரிகைகள் நூல் மதிப்புரை வெளியிடுகின்றன. எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் பத்திரிகைகள் தரும் அரிய சலுகை இது. மதிப்புரைகளுக்குப் பதிலாக வேறு வணிக நோக்கில் அந்தப் பத்திகளில் விளம்பரங்கள் வெளியிட்டால், பத்திரிகைகளுக்கு வருமானம் கூடும் வாய்ப்பு உண்டு. இருந்தாலும், மதிப்புரைகளுக்கு வாசகர்களிடம் வரவேற்பு இருக்கிறது என்பதால் பத்திரிகைகள் இலக்கியச் சேவையாகக் கருதிப் பக்கங்கள் ஒதுக்குகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அதே சமயம், பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட நூல்களின் இரு பிரதிகளைக் கேட்கின்றன. ஒன்று, பத்திரிகையின் நூலகத்துக்கும், மற்றது, மதிப்புரை வழங்குபவருக்குமாக இரு பிரதிகள். விளம்பர நோக்கில் பார்த்தால், கணித்தால், இரு பிரதிகளின் கிரயம் நூலுக்கான விளம்பரச் செலவை விட குறைவாகத்தான் இருக்கும்.

ஆக, மதிப்புரை என்பது நூல்களுக்கான விளம்பரம் என நிதர்சனமாக விளங்குகிறது. சாதாரணமாக விளம்பரம் என்பது வணிக நோக்கில் என்னதான் பொருள் நயமற்றதாக, மோசமாக இருந்தாலும் சிறப்பாகச் சொல்வது நடைமுறை. சந்தையில் கடை விரிக்கப்படும் பொருள்கள் அனைத்துமே விளம்பரப்படுத்தப்படுகின்றன. விளம்பரத்துக்கு உட்படாத பொருள்கள் என்னதான் அவை நயமானவையாக இருந்தாலும் விற்பனை ஆவதில்லை. விளம்பரயுகம் இது.

வெளிவரும் நூல்களிலும் சிறந்தவை, வாசிப்பதற்கு ஏற்றவை, வாசித்துவிட்டு விசிறி எறிய வேண்டியவை, மோசமாக எழுதப்பட்டவை என்று உண்டு. அப்படி மோசமான நூல் பிரதிகள் பத்திரிகைகளுக்கு வருமாகில், மதிப்புரையாளரிடமிருந்து அக்கருத்தைப் பெற்ற பத்திரிகையின் ஆசிரியர் அந்த மதிப்புரையை வெளியிடாது இருப்பதே பொருத்தம். சம்பந்தப்பட்ட நூல் மோசமானது, இலக்கியத் தரமற்றது, வாசிப்பதற்கு ஏற்றது அல்ல என்பதாக மதிப்புரை இருக்கக் கூடாது. அது மதிப்புரை அல்ல. சம்பந்தப்பட்ட எழுத்தாளருக்கு, பதிப்பாளருக்குச் செய்யப்படுவதான துரோகம். மதிப்புரை என்பது ஏற்கெனவே சொன்னது போல, நூலுக்கான விளம்பரமே தவிர, நூல் விற்பனை ஆகாமல் இருப்பதற்கான செய்தி அல்ல. மோசமான நூல்களுக்கு மதிப்புரை தராமலே இருப்பதுதான் எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் பத்திரிகை தரும் உதவி.

அடுத்து, விமர்சனம் அல்லது திறனாய்வு என்பது என்ன என்பதைப் பார்ப்போம். திறனாய்வு என்பதும் ஒரு வகையில் நூலுக்கான விளம்பரம் தான். திறனாய்வின்போது, திறனாய்வாளர் நூலை ரசித்து, ரசனை விமர்சனம் என்பதாக எழுதலாம். நூலில் உள்ள குறைகளை மட்டுமே கண்டு குதறலாம். அலசல் விமர்சனம் என்பதாக வரிவரியாகப் பார்த்து, அழகியல், அமைப்பியல், நடை, உள்ளடக்கம், சமுதாய நோக்கு என்பதாக நிறைகுறைகளைக் கண்டு எழுதவும் செய்யலாம். மொத்தத்தில் திறனாய்வு என்பது திறனாய்வாளரின் ஏகபோக உரிமை. கட்டுப்பாடு எதுவும் கிடையாது.

திறனாய்வு என்னும்போது, இலக்கியம் சம்பந்தப்பட்ட விற்பன்னர்கள் திறனாய்வு வகையை நான்காகப் பிரித்துப் பார்த்திருக்கிறார்கள்.

1. ரசனைக் கருத்து.
2. பகுத்து உணர்தல்.
3. படிவ முறை.
4. கலாபூர்வமான அணுகல்.

இவை தவிர, வெறும் கண்டனம் என்பதான திறனாய்வும் உண்டு. வடமொழியில் இந்த கண்டன விமர்சனம் பிரசித்தம். அப்பய்ய தீட்சதரின் சித்ரமீமாம்சம் நூலுக்கு ஜகந்நாத பண்டிதர் என்பவர் கண்டன விமர்சனம் எழுதி இருக்கிறார்.

திறனாய்வு என்னும்போது, வாசகர்கள் ரசித்து மகிழ்வதற்கான வேடிக்கை விவகாரங்கள் இருப்பது உண்டு. திறனாய்வாளர்களுக்கு வேண்டப்பட்ட, வேண்டப்படாத எழுத்தாளர்கள் இருக்கும் பட்சத்தில், திறனாய்வின் போக்கு நட்பு சார்ந்தும், பகைமை சார்ந்தும் இருந்துவிடுவது தவிர்க்க முடியாதது. அப்ஜெக்டிவ்வாக இல்லாத, சப்ஜெக்டிவ் ஆன திறனாய்வு அது. திறனாய்வாளர் நடுநிலுவை வகித்து நூலுக்கு நியாயம் வழங்குவதில் தான் அவருடைய திறமை தெளிவுபட இருக்க வேண்டுமே தவிர, காய்தல் உவத்தல் தவறு, குற்றம்.

ஒரு நூல் சிறப்பான திறனாய்வைப் பெறும் போது, அதைக் கண்ட வாசகர்கள் அந்நூலை



படிப்பகம்

www.padippakam.com

நாடிச் செல்லலாம். குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வதாக இருந்தாலும், அவற்றைத் தாங்களும் கண்டு அனுபவித்து உணர வேண்டும் என்பதான வாசகர்களும் உளர்.

ஆக, மதிப்புரை என்பது கூடிய மட்டும் நூலின் சிறப்பான அம்சங்களை எடுத்து உரைக்கும்போது, திறனாய்வு என்பது நூலின் சிறப்பு மட்டுமல்லாது குறைகளையும் எடுத்துக்காட்டும் இலக்கிய மரபாகும். திறனாய்வின் நோக்கம் விளம்பரம் அல்ல. மாறாக, மூல நூலின் தொடர்ச்சியான இலக்கியப் பண்பு கொண்டது. நூலின் குற்றம் குறைகளையும் தடாலடியாக எடுத்துச் சொல்லும்போது, திறனாய்வும் இலக்கியத்தின் ஒரு பிரிவாக அமைகிறது. நூலின் தரத்தை, அழகியல் உணர்வுகளை அனுபவப் பரவசங்களைத் திறனாய்வாளர் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். நூல் வாசிப்பில் திறனாய்வாளரின் தேர்ந்த அனுபவம் வாசகர்களுக்கு உதவுகிறது.

இவ்விதம், மதிப்புரை என்ற அளவில் மோசமான நூல்கள் ஒதுக்கப்படும்போது, திறனாய்வில் அந்த நூல்கள் ஏன், எப்படி, எவ்வாறு மோசமானவை என்பதைச் சீர்தூக்கிப் பார்த்துத் திறனாய்வாளர் தன் கருத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

மதிப்புரை, திறனாய்வு என்பன இப்படி வேறுபடும்போது, ஒரு இலக்கிய விழாவில் சொற்பொழிவு ஆற்றிய ஒரு பிரபல எழுத்தாளர், மதிப்புரைக்கும் திறனாய்வுக்கும் வேறுபாடு ஏதும் கிடையாது என்பதாகச் சொல்லி இருந்தார். தரமற்ற நூல்கள் மதிப்புரையில் சாடப்பட வேண்டும் என்பதான கருத்தைத் தெரிவித்திருந்தார். அவருடைய பேச்சு ஒரு பத்திரிகையிலும் கட்டுரையாக வெளிவந்தது.

'ஐயா, மதிப்புரைக்கும், திறனாய்வுக்கும் வேறுபாடு உண்டு. தமிழ் நூல்களின் விற்பனை நிலைமை கேள்விக்கு உரியதாக இருக்கும் இந் நாட்களில் கவலையுடன் பத்திரிகைகளுக்கு நூல்கள் மதிப்புரைக்காக அனுப்பப்படும்போது, சம்பந்தப்பட்ட நூல்களின் குற்றம் குறைகள் பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்படுமானால் நூல் அனுப்பப்பட்டதன் நோக்கமே சிதறிவிடுகிறது. மாறாக நூலின் திறனாய்வின்போது அக்குற்றம் குறைகள் எடுத்துக் காட்டப்படுவதுதான் முறையாக அமையும், என்பதாக அந்தப் பிரபலத்துக்கு எழுதினேன்.

அக்கடிதத்துக்கு பதில் எழுதுகையில் '...மதிப்புரைக்கும், திறனாய்வுக்கும் அப்படி ஏதும் வேறுபாடு இருப்பதாக நான் எண்ணவில்லை. நீங்கள் மதிப்புரை எழுதும் நூல்களைக் காசு கொடுத்து நான் வாங்கமாட்டேன், என்பதாக அடாவடியாகத் தெரிவித்தார் பிரபலம். அறிவு சார்ந்த வன்முறைக் கருத்து இது. இலக்கிய சண்டியர்தனமாகவும் இதைக் கொள்ளலாம்.

சற்றேனும் மனித நயமற்ற, தமிழ் இலக்கிய நூல்களின் விற்பனை பற்றிய அன்றைய சூழ்நிலை அறியாத கருத்தாக இது எனக்குப் பட்டது. நூல்களைப் பற்றிய மதிப்புரைகளும், விமர்சனங்களும் விளம்பர நோக்கிலேயே வெளியாகின்றன. அந்த மதிப்புரைகளும், திறனாய்வுக்களும் அவருடைய நெருக்கமான நண்பர்களாலும், வாசக விசிறிகளாலும் எழுதப்படுகின்றன. ஆகவே அவருடைய நூல்களைப் பொருத்தமட்டில் விற்பனை என்பது இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு என்று சென்றுகொண்டிருக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் எவரும் அவரைப்போல நிறுவன அதிபராகவும், பதிப்பாளராகவும், சொந்தப் பத்திரிகை வெளியிடுபவராகவும் இல்லையே! தமது நூல்கள் விற்பனை ஆகாதா, அவை பற்றிப் பாராட்டி இரண்டு வார்த்தை எவராவது சொல்ல மாட்டார்களா என்று சொந்தமாக நூல்களை அச்சிடும் எழுத்தாளர்கள் சகோர பட்சியாகக் காத்திருக்கின்றனர்.

லோகோ பின்ன ருசி. வெவ்வேறு மாற்றுக் கருத்துள்ளவர்கள் இருக்கத்தான் செய்வர். கலை, இலக்கியங்கள் எந்த ஒரு தனி நபரையும் சார்ந்து இருப்பதில்லை. நாம் புரிந்துகொண்டு செயல்பட வேண்டியது என்னவெனில், மதிப்புரை என்பது வேறு, திறனாய்வு வேறு என்பதுதாம். நூல் மதிப்புரைகள் எழுதும் மற்ற சகோதர எழுத்தாளர்கள் புரிந்துகொண்டால் போதும்.

●



படிப்பகம்

www.padippakam.com

**கவிதை**

# மழ பேஞ்ச காத்தால...

செந்தண்ணீர் தேங்கிய
ஊர்க்குளத்திலும் பள்ளங்களிலுமிருந்து
ஓயாது வரும் தவளைகளின் சத்தம்
சேவல்களையும் முந்திக்கொண்டு
எழுப்பிவிடும்

எச்சரிக்கையாய் எடுத்து வைத்திருந்தும்
சாரல் பட்டு ஈரமான விறகு
எரிய மறுத்து புகையும் எரிச்சலுறும் அம்மா
சீமெண்ணையையூற்றி
பற்ற வைப்பாள் அடுப்பை.

விதைமஞ்சட்சோளம் நரிப்பயிரை நனைத்து
மூட்டையாகக் கட்டிக்கொண்டு
தோட்டம் கிளம்புவார் அப்பா
கூடவே போகும் மூத்தவன் சாணியள்ளிக்
கொட்டி
பின் கறந்து தரும் பாலைப் பெற்று
வீடு வந்து சேருவான் பனிச்சென்று விடிந்திருக்க

ஒத்தையேருக்கும் வக்கில்லா நொடிஞ்ச
குடியானவனும் மாடு பூட்டி உழுது மாளா
பரவடி பண்ணையக் காரனும் டிராக்டரைத் தேடி
பஸ் நிறுத்தம் போவார்கள்.

சாப்பாட்டுக் கூடையுடன் விதைப்பு
விழும் காட்டிற்கு அவசரமாய்
கிளம்பிச் செல்வாள் அம்மா.

தேங்காய் சிரட்டையினுள் மழையீரமண் நிரப்பி
இட்டிலிகள் சுட்டும் கோழிக்கூடு கட்டியும்
உயிரும் உறுப்பும் பெற்ற குங்குமத் திலகமெனத்
திரியும் பாப்பாத்திப் பூச்சிகளைச் சேகரித்தும்

வேலாமரம் மலிந்த சரளைக் காடுகளில்
செம்பொன் வண்டுகளைத் துரத்தியும்
போன வருடம் காளான்கள் புடைத்திருந்த
புற்றுகளைப் போய் பார்ப்பதுமாய்

நிற்க நேரமிருக்காது பொடியான்களுக்கு
சனி ஞாயிறாயிருந்து பள்ளியும்
விடுமுறையெனில்.

கோடையின் கடைசிப் பகல் முடிந்து
பருவத்தின் முதல் மழையும்
பெய்துவிட்டதற்குப் பின் விடியும்
காலைப் பொழுதில்

வாழ்ந்த சலுப்பில் வாசல் திண்ணையுடன்
முடங்கிய பாட்டன்களும் எழுந்து நடமாடியபடி
நடுவீதி ஆட்டுரலில் தேங்கிய நீரை வைத்து
அளவு கணக்கிட்டு ஆருடம் சொல்லிக்கொண்
டிருக்க

பற்ற வைத்த பீடியைப் புகைக்கவும் தோணாமல்
வெறுமனே சூனியம்
வெறித்துக்கொண்டிருப்பான்
ஊரின் எல்லையில்
சூளை போட்டு செங்கல் அறுக்கும் அவன்.

சு. வெங்குட்டுவன்.





படிப்பகம்

www.padippakam.com

# கலையாத ஓவியம்

## கடல் கடந்த வாழ்க்கை-3

கட்டுரை

க.ம. தியாகராஜ்

'தாக்கேட்டா' என்ற பகுதி பர்மாவின் ஜீவ நதிகளில் பிரதான இடம் வகித்து வரும் 'ஐராவதி' நதி பல கிளைகளாகப் பிரிந்து அந்த மான் கடலில் கலக்கும் இடத்தில் அமையப்பெற்ற கழிமுகப் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களில் ஒரு 'தீவு' ஆகும். இத்தீவில் ஆதியில் தமிழர் சிலர் நெல் பயிரிட்டு வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாக அத்தீவில் இன்று வரை இருந்து வரும் 'வன காளியம்மன்' ஆலயமே ஒரு சான்று. என்றுமே வற்றாத ஜீவநதி ஐராவதியினால் முற்றிலும் சூழப்பட்ட தாக்கேட்டா தீவில் மனிதர் வசிக்காவிட்டாலும் அப்பகுதியில் நெல் பயிர் மிகச் சிறப்பாக விளைந்தது. அப்பகுதியின் சிறப்பான 'கண்டுமுதல்' காரணமாகவே அத்தீவிற்குள் சென்று வர ஓர் இரும்புப்பாலத்தை ஆங்கிலேயர் அமைத்திருந்தனர். பர்மாவில் 'புரட்சி சர்க்கார்' அமையும் வரை இத்தீவு விளைநிலமாகவே இருந்து வந்தது. புரட்சி சர்க்காரின் இரங்கூனை அழகுபடுத்தும் திட்டம் காரணமாகவே இரங்கூனைச் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளை அப்புறப்படுத்தி அங்கிருந்தவர்களுக்கு 'குடும்பத்திற்கு ஒரு கிரவுண்டு (60 x 40') என்று மனை இலவசமாக வழங்கப்பட்டது. அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை. கல்விக் கூடங்கள் இல்லை. கழிப்பிட வசதி கூட இல்லை. மருத்துவமனை மற்றும் அங்காடி இல்லை. எம்மதத்தாருக்கும் ஆலயங்களும் இல்லை. பஸ் போக்குவரத்தும் இல்லை. எது தேவை என்றாலும் இரங்கூன் அல்லது அதற்கு இடையில் உள்ள 'பசுமந்தானு'க்குத்தான் சென்று வர வேண்டும்.

மாந்தோப்பில் பிரித்து லாரிகளில் எடுத்துச் சென்ற பழைய மரம், தகரம், அத்தாப்பு (கீற்று) மற்றும் மூங்கில்களைக் கொண்டு தற்காலிகக் குடிசைகள் அமைத்துக்கொள்ளும் வேலையை அனைவரும் தொடங்கி இருந்தனர். எல்லோரும் எல்லோருக்காகவும் பலனை எதிர்பாராது வேலை செய்தனர். போர்க்கால அடிப்படையில் வேலை நடைபெற்றது. கழிப்பிட வசதிக்காக 3 அடி விட்டத்திலும் 10 அடி ஆழத்திலும் களிமண்ணில் வட்டக் குழி தோண்டப்பட்டு மூங்கிலை உடைத்து 'பிளாச்சி'களாக்கி, அவற்றைக் கூண்டுபோல் பின்னி அக்குழிக்குள் இறக்கி, அக்குழிகளின் மீது மரத்தினால் 4' x 4' ஒரு மறைவிடம் கட்டிக்கொண்டனர். இதுவே ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பிடமாகியது.

மரம் என்று பெயர் சொல்லக்கூட ஏதுமில்லாத நிலையில் பகல் பொழுதில் அனல் பிழம்பாக வெய்யில் சுட்டெரித்தது. களிமண் பிரதே



படிப்பகம்

www.padippakam.com

சமாகியமையால் கோடையின் கொடிய வெப்பத்தால் பூமி பாலம் பாலமாக வெடித்து - இந்தியாவில் பஞ்சம் தலைவிரித்தாடும்போது திரைப்படங்களில் காண்பிக்கப்படுவது போன்று எங்கும் விரிசல் காணப்படும். மண் - எங்கோ தூரத்தில் காணப்படும் 'கானல் நீர்' திரை அசைவுகள் - ஆங்காங்கே எழும் சிறு சிறு சூறாவளிச் சுருள்களில் ஆகாயம் நோக்கிச் செல்லும் குப்பைக் கூளங்கள் - இவைதான் அன்றாடக் காட்சிகள். எங்கும் மயான நிசப்தம் (அமைதி அல்ல). அனைவர் முகத்திலும் மனதிலும் ஒரு சோகம் - ஏக்கம் கப்பிக்கிடந்தது.

பர்மாவில் வாழ்ந்த தமிழர்களுக்கு இது ஒரு புதிய அனுபவமல்ல. இது பழகிப்போன ஒன்றுதான் என்பதால் அவர்கள் இதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. சென்றதைப் பற்றிய கவலையோ, வருவதைப் பற்றிய சிந்தனையோ அவர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நிகழ்காலம் ஒன்று மட்டுமே அவர்களின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. இது எனக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. எனது தந்தையின் நண்பர் ஒருவரிடம் அவ்வப்பொழுது எனக்கு ஏற்படும் ஐயம் குறித்து விளக்கமாக விபரங்களைக் கூறும்படி கேட்டுத் தெரிந்துகொள்வேன். அவரிடம் 'இழந்துவிட்ட சொர்க்கம் - மாந்தோப்பு காலி செய்து விட்டு தாக்கேட்டா வந்தது குறித்து உங்களுக்கு வருத்தமில்லையா?' என்று கேட்டதற்கு அவர் கூறிய சொற்கள் என் கண்களை அகலத் திறக்கச் செய்தன.

1930 ல் ஏக இந்தியாவின் ஓர் அங்கமாக பர்மா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆளுமைக்கு உட்பட்டிருந்தபோது, (Rangoon Riot) 'இரங்கூன் கலவரம்' ஏற்பட்டது. இது நேரிடையாக பர்மியர்களால் இந்தியர்களுக்கு எதிராக ஏற்பட்ட கலவரம். இக்கலவரத்தில் தல நிர்வாகம் 'மாநகராட்சி' மற்றும் 'காவல்துறை'யினரின் ஆதரவுடன் இந்தியர்கள் கண்ட கண்ட இடத்திலெல்லாம் பர்மியர்கள் பலரால் தலை வேறு உடல் வேறாக வெட்டிச் சாய்க்கப்பட்டனர். கேட்பாரற்று இந்தியர்கள் தெரு ஓரங்களில் பிணமாகக் கிடந்தனர்.

பின்னர் இக்கலவரம் குறித்து அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் அதன் கண்டுபிடிப்புகளாக அளித்த அறிக்கையின் மூலம் அப்பாவி இந்தியர்களின் மீது பர்மியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகப் படுகொலைகள் மிகத்தெளிவாக படம் பிடித்துக் காட்டப்பட்டிருந்தது. 'கிடைத்தால் அந்த அறிக்கையை படித்துப் பார்' என்று கூறினார். அதன் மூலம் இந்தியர்களின் இழப்பு எப்படிப்பட்ட இழப்பு என்பதையும் - அவர்கள் பர்மாவில் அனுபவித்து துன்பமயமான வாழ்வியல் முறைகளையும் நீ அறிந்துகொள்வாய் என்று கூறினார்.

பின்னர் இரண்டாம் உலகப்போரின்போதும் '1941ஆம் ஆண்டு' டிசம்பர் மாதம் 23ந் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு மக்கள் நடமாட்டம் மிகுந்திருந்த நேரத்தில் அபாய அறிவிப்புச் சங்கு ஊதியது. சில வினாடிகளுக்குள் எண்பதுக்கு மேற்பட்ட ஜப்பானிய விமானங்கள் இரங்கூன் நகரத்தைப் பலமாகத் தாக்க முற்பட்டன. அனற் பிழம்புகள் போன்ற பல்லாயிரம் குண்டுகளைப் பொழிந்தன. நகரமே குலுங்கிவிட்டது. மக்கள் ஆங்காங்கே அகப்பட்ட கட்டிடத்திற்குள் சென்று பதுங்கிக்கொண்டனர். சுமார் 2000க்கும் அதிகமான பேர் கை வேறு, கால் வேறு, தலை வேறாகத் துண்டித்துப் போய்த் தெருக்களில் பிணமாகக் கிடந்தனர். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தியர்கள். தெருவெல்லாம் இரத்தப் பெருக்கும், மனித உடல் சிதறல்களும். கட்டிடங்கள் நெருப்புப் பற்றி கொண்ட சில விழுந்து தரைமட்டமாகின. அதில் வசித்த மற்றும் பதுங்கிய மனிதர்கள் அதனுடனேயே புதையுண்டு போனார்கள். ஒரே கோரக் காட்சி. அடுத்து டிசம்பர் 25ஆம் தேதி ஜப்பானியர் முன்பே அறிவித்திருந்தது போல் இரங்கூன் நகரத்திற்கு 'கிறிஸ்துமஸ் பரிசு' வழங்கினார்கள். அன்று பகல் 11 மணி சுமாருக்கு இரங்கூனிலுள்ள 'அல்லோன்' (Alone) என்ற இடத்தின் மீது சுமார் 80க்கும் மேற்பட்ட ஜப்பானிய விமானங்கள் மீண்டும் குண்டுமழை பொழிந்தன. அதில் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டது.

மனித உயிர்ச் சேதம் சற்று குறைவே என அரசு அறிவிப்பு செய்தது. இதன் பின் உயிரை மட்டுமே காப்பாற்றிக்கொண்டு இந்தியர்கள் தமது உடைமைகள் எல்லாவற்றையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு எவ்விதமான மனச் சஞ்சலமுமின்றி இருந்ததைப் பற்றியோ, இனி இருக்கப்போவதைப் பற்றியோ துளியும் எண்ணிப் பார்க்காமல் கடல் வழியாகவும், ரயில் வழியாகவும், ஆற்று வழியாகவும் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார்கள். அவ்வாறு செல்ல வகையில்லாத கூலி வேலை செய்து பிழைத்து வந்தவர்கள் கால்நடை



படிப்பகம்

www.padippakam.com

யாகப் புறப்பட்டுவிட்டனர். இவர்களது எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு மேலிருக்கும். இந்தியாவை நோக்கிச் செல்வதாக எண்ணிக்கொண்டு புறப்பட்ட இவர்களுக்கு எந்த வழியாகச் செல்வது, எந்த வழி எப்படி இருக்கும், என்னென்னவற்றைக் கடந்து செல்ல வேண்டும், எதன் மூலம் கடக்க வேண்டும் என்ற விவரங்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை. இரங்கூனை விட்டு உயிருடன் வெளியேறிவிட வேண்டும் என்பதே ஒரே நோக்கமாக இருந்தது. இவ்வாறு புறப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வழியில் கொள்ளை நோயினாலும், கொள்ளையர்களாலும். ஒவ்வாமையாலும், பசியாலும், பட்டினியாலும், தகுந்த மருத்துவ சிகிச்சை கிடைக்காமையாலும் மாண்டுபோனார்கள்.

இவர்களின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் மாந்தோப்பிலிருந்து தாக்கேட்டாவுக்கு புலம்பெயர்ந்த இடர்ப்பாடு பொருட்படுத்தத் தேவையில்லாத (Negligible one) ஒன்றே ஆகும் என விபரமாகத் தெளிவுரை வழங்கினார்.

பிறந்த நாட்டில் பிழைக்க வழியின்றி பிழைப்பைத் தேடி வந்த நமக்கு இவை பெரிய துன்பமான விஷயமல்ல - ஆகவே நீயும் இதைப் பற்றிய கவலையை விடு. இதை விடவும் பெரிய துன்பத்தை நீ அனுபவித்தில்லாததினால்தான் இது உனக்கு பெரியதாக தென்படுகிறது. உண்மையில் இது மிகச் சிறிய விஷயமே ஆகும். இதனால் நமது உயிருக்கோ, உடலுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித மான சேதாரமும் ஏற்படவில்லையே. அதுவே பெரிய விஷயம் என்று பெருமூச்சுடன் கூறி முடித்தார். அப்பொழுது என் மனதில் பளிச்சிட்டது ''இருகோடுகள் தத்துவம்''.

ஆனாலும் என் போன்ற பள்ளி மாணவர்களுக்கு இந்த நிகழ்வு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஆங்கிலம் வழி கல்வி பயின்ற எனக்கு ஆங்கிலம், தமிழ், உருது, சீனா, ஜப்பான், ஹிந்தி போன்ற பர்மா அல்லாத பிற மொழிப் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற புரட்சி சர்க்காரின் உத்தரவும், அதன் காரணமாக அம்மொழி ஆசிரியர்கள் அனைவரும் தமது தாய் நாடு திரும்ப உள்ள செய்தியும், அப்பள்ளிகளை பர்மிய அரசே எடுத்துக்கொண்ட செய்தியும் பெரும் கவலை கொள்ளச் செய்தன. நான் கல்வி பயின்ற St. Michael High Schoolன் Principal Mr. Marshall, Headmistress, Mrs. Marshall.



அவர்களின் குடும்பத்தார் மற்றும் ஆங்கில ஆசிரியர் Mr. Nicholas ஆகியோர் லண்டன் மாநகருக்கு விமானத்தில் புறப்பட்ட நாளைச் செய்தி ஏடுகள் மூலம் அறிந்துகொண்ட எமது பள்ளி மாணவ மாணவியர். அப்பள்ளியின் சீருடை - வெள்ளை அரைக்கைச் சட்டை, அடர் நீல நிற டிரவுசர், வெளிர் நீல நிறத்தில் வலப்புறத்திலிருந்து இடது பக்கம் சற்றே இறங்குவது போன்று சம இடைவெளியில் வரையப்பட்டுள்ள வெள்ளை நிறப் பட்டைக் கோடுகளைக் கொண்ட 'டை' (Tie) மற்றும் School Badge ஆகியவை சகிதமாக அணிந்து கொண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பள்ளி மாணவ மாணவியர் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் 'மிங்களாடோன்' விமான நிலையத்தில் யாருடைய ஒருங்கிணைப்புமின்றி தாமாகவே திரண்டு நின்று கண்களில் நீர் மல்க கையசைத்து அவர்களுக்கு விடை கொடுத்ததும், அவர்களும் அழுதுகொண்டே தமது சொந்தக் குழந்தைகளை விட்டுப் பிரிவது போன்று விமானம் ஏறியதும் இன்றும் என் கண்முன் 'கலையாக ஓவியமாகவே திகழ்கின்றது'.

'பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும்
மண்டு துயரெனது மார்பெல்லாம் கவ்வுதே'

*மகாகவி பாரதி.*



படிப்பகம்

www.padippakam.com

கவிதை

# உங்களுடன்

''உறவு வைத்துக்கொள்ள
விருப்பமில்லை'' என்றார் ஒரு மூத்த கவி
(''எப்பொழுது புறப்படுகிறீர்கள்''
என்றார் இன்னொரு பெருங்கவி)
''பேச விருப்பமில்லை'' என்றிட்டார்
எங்கள் பிரியத்துக்குரிய இளைய கவி
உறவெனில் ஒருத்தி
பேச்சென்றால் ஒருவன்
பிறகு
பிறகு?
ஒரு
சொல்
திருச்
சொல்



இங்கே
யான் தன்னந்தனியே
அங்கே
அவளும் அப்படியே
நாளை
எங்கே எப்படியோ
இன்றில்லாவிடினும் என்றேனும்
எங்கள் செல்வர்கள் அன்பினால்
சிந்திச் சிதறியது
போக
முந்தி வந்தது
முந்தி
பிந்தி வரலாமோ
பந்திக்கும் சபைக்கும்
அந்திக்குப் பின்னே(தான்)
இரவு
சந்திக்கும்பொழுது
அதுதானே
கலவியில்
குறிக்கோளென்னவோ நிச்சயமில்லை
பகுத்தது
அறிவு
தொகுத்தது
உணர்வு
பிரிந்தது
பிரிந்ததுதான்
எரிந்தபின் மிச்சம்
சாம்பல்
நீருள்ளபோதே
குளித்துக்கொள்ள வேண்டும்
உள்ள நாளிலேயே
உடைமையைக் கைக்கொள்ள வேண்டும்
(வளவு சேர்ந்த வீட்டில்
வாழ்தல் அரிதென்கின்றான் அமர்)
இமைப்பொழுதும் என்பதுதான்
எப்பொழுதும் சரி (விழிப்புணர்வுக்கு)
''கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூழிலன்யான் நின்னுடை நட்பே.''

புட்டா (PUTTA)



படிப்பகம்

www.padippakam.com

# எதிரொலி




## வாசகர் கடிதம்

ஜூன் கணையாழியில் புது டெல்லி நண்பர் ஏ.ஆர். ராஜாமணி எழுதியிருந்த கடிதத்திற்கு ஒரு சிறு திருத்தம்.

*1977ல் அகிலனுக்கு ஞானபீடப் பரிசு வழங்கியவர் அன்றைய பிரதமர் மொரார்ஜி தேசாய். அப்பொழுது ஜவஹர்லால் நேரு அமரராகி பதின்மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன.*

*1965ல் அகிலனுக்கு சாகித்ய அகாதமி பரிசு வழங்கியவர் அன்றைய குடியரசு துணைத்தலைவர் ஜாகிர் ஹுசேன்.*

**சிட்டி, சென்னை - 20.**

ஜூன் 2005 கணையாழி படித்தேன். 'பயமுறுத்தும் பஞ்சாயத்துக்கள்' - *தலையங்கம் மத்திய அரசின் ஓராண்டுச் சாதனைகள் தொடர்ந்து; காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல், பீகார் சட்டசபை கலைப்பு, பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஊராட்சித் தேர்தல் பதவி விலகல் வரை ஒரு கவிதை போன்று ஒரு பிரதிக்கும் மேல் பல பிரதிகள் என்பதாக அலை அலையான உரையாடல்களின் அணிவகுப்பாக அமைந்திருந்தது. என்ன சாதனை செய்து என்ன? வல்லரசு ஆனால் கூட நம்மால் பாப்பாபட்டியையும், கீரிப்பட்டியையும் சரிப்படுத்த முடியாதவர்களாய் இருப்போம் என்ற உண்மையை நச்சென்று சொல்லியிருந்தீர்கள்.*

*'கெட்டுப்போனவளின் குடை' எனும் (மொழிபெயர்ப்புக் கதை) மலையாளச் சிறுகதை, பெண்கள் வறுமை காரணமாகப் பாலியல் பலாத்காரத்திற்கு ஆட்படுவதைச் சொல்லுகிறது. இச்சிறுகதை ஒரு பெண்ணியப் பிரதி. தனக்கேற்பட்ட தீமைக்குச் சரியான தண்டனை கொடுக்கும் பெண்ணியத்தின் குரல் இக்கதை. ஆணாதிக்கத்தின் பாலியல் சுரண்டலை ஒழிக்க முற்படும் ஒரு பெண்ணின் புரட்சிச் செயல்பாடு, தவறாகப் புரிந்துகொள்ளப்படுகையில் புரட்சி செய்தவளையே பழியாகக் கொள்ளும் சமூகம் இக்கதையில் விமர்சிக்கப்படுகிறது. ஒரு பெண்ணுக்குள் இருக்கும் அநீதியை எதிர்க்கும் ஆற்றலை மிக நுணுக்கமாகக் கதை செதுக்கியுள்ளது. தன்னைச் சூறையாடிய ஆணை அரிவாளால் வெட்டியபின் ''நாய்ப்பயலே'' என்று பைத்தியக்காரிபோல் மீண்டும் அந்த வெறிபிடித்த ஆண் உடலைச் சிதைப்பது ஒரு வகையில்*



படிப்பகம்

www.padippakam.com

ஆணாதிக்கத்தைப் பெண்ணுடல் சிதைப்பது என்பதாகவே அமைகின்றது.

தே. ஞானசேகரன், கோவை - 46.

ஜூன் 05 இதழ் அட்டைப்படம் அருமை. வண்ணத்தின் மெருகு வர வர கூடி வருகின்றது. இந்த பிரகாசம் (ஷைனிங்) தொடரட்டும். சி.எஸ். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவைகள் இதுவரை வெளியே தெரியாத விஷயங்கள். பசுமைப் புரட்சிக்கு வித்திட்டவர், பரம்பிக்குளம் - ஆழியாறு உள்ளிட்ட அணைகள் உருவாவதில் முக்கிய பங்காற்றியவர். காமராஜர் வழி நின்று கல்விச் செல்வம் ஏழைகளை எட்டிட எல்லா வகையிலும் உழைத்தவர். நாட்டின் நிதி நெருக்கடியை சமாளிக்க பொருளாதாரத்தில் புதிய மாற்றங்களை கொண்டு வந்தவர் என பல்வேறு சிறப்புகளுக்கு காரணமான சி.எஸ். தமிழுக்கு ஆற்றிய பணியால் நமது மதிப்பில் இன்னமும் உயர்ந்துவிட்டார்.

சாதாரண செய்திகளை Boost செய்யும் இன்றைய மீடியாக்கள், 'சோகமான செய்திகளை' மக்களை மிகவும் அச்சுறுத்தும் செய்திகளாக ஒளி(லி) பரப்பி வருவதை 'ஸர்வம் விளம்பர மயம் ஜகத்' அழகாக படம்பிடித்துக் காட்டிவிட்டது. சோகத்தில் இருப்பவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு பதிலாக மிரட்சியையும், நம்பிக்கை வறட்சியையும் உருவாக்கும் போக்கை தொலைக்காட்சிகள் இனிமேலாவது கைவிட வேண்டும்.

'தமிழ் இலக்கிய வகைகளில்' ஒரு பகுதியை மட்டும் காய்தல், உவத்தல் இன்றி அற்புதமாக டாக்டர் அ.அ. மணவாளன் ஆய்வு செய்துள்ளார். தொடர்ந்து பல்வேறு பகுதிகளையும் அவர் ஆய்வு செய்து இதுபோன்ற பயன் உள்ள கட்டுரைகளை வழங்கினால் கல்லூரி மாணவர்களுக்கும் குறிப்பாக M.Phil தமிழ் பயிலும் மாணவர்களுக்கும் மிகவும் பயன் உள்ளதாக அமையும். 'முயற்சி' சிறுகதை இன்றைய எதார்த்தத்தின் பிரதிபலிப்பு. நல்ல தரமான கதைகளை 'கணையாழி' போன்ற சில பத்திரிக்கைகளிலேயே காண முடிகின்றது. வெகுஜனப் பத்திரிகைகள் அபத்தமான கதைகளுக்கே அதிமுக்கியத்துவம் அளிப்பதால் சிறந்த கதைகள் அச்சில் ஏறாமல் இன்னமும் ஆங்காங்கே அமிழ்ந்து கிடக்கின்றன.

'கடல் கடந்த வாழ்க்கை'யில் கலா - ஸே (மாந்தோப்பு) பகுதி சங்க காலத் தமிழர்களின் வாழ்வை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய அம்மக்கள், காலவெள்ளத்தில் சுயநலவாதிகளாக மாறிப்போனது மனதை வருத்துகின்றது. 'பிறப்பொக்கும் எல்லாவுயிருக்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்றே குறள் வழி மதம், சாதி, தொழில் கடந்து மனித நேயத்துடன் தமிழர்கள் வாழ்ந்த அந்த பொற்காலம் பர்மாவில் இனிமேல் வருமா என்று தெரியவில்லை.

சிறுகதை இலக்கியம் வளர்ப்பதில் தமிழுக்கு இணையாக மலையாளமும் மாறிவந்து காலம் பல கடந்துவிட்டது. ஆதிக்கவாதிகளின் கைகளில் பெண் இனம் அடிமைப்பட்டுக் கிடப்பதும், பாதிக்கப்பட்ட பெண்களை பாதுகாப்பதை விட்டு விட்டு அவர்களுக்கு அவப்பெயர் சூட்டி மகிழும் இந்த சமுதாய அமைப்பு எப்போது மாறும்? 'கெட்டுப்போனவளின் குடை' இந்த கேடுகெட்ட சமுதாயத்திற்கு கிடைத்த சரியான சவுக்கடி, நாராயண் சிறுகதையை தமிழில் டேவிட் சித்தையா சிறப்பாக மொழிபெயர்த்திருந்தார்.

'முகவரி இல்லாத முகம்' மதவெறி இல்லாமல் மனிதநேயமிக்கவர்கள் மதங்களைத் தாண்டி வாழ்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டியது. 'விகடனில்' கணையாழி பற்றி சுஜாதா எழுதியதை வாசித்திருப்பீர்கள் என நினைக்கின்றேன். மீண்டும் 'சுஜாதாவுக்கு' கடைசிப் பக்கம் ஒதுக்கிட முயற்சி செய்யுங்கள்.

சூரியா சின்னக்கண்ணன், கோட்டூர்.

'உங்களுடன் சற்று நேரம்' ஒரு முறை சுற்றிலும் பார்க்க வைத்தது. 'ஜனநாயகத்தைக் காப்பாற்ற' அவர்கள் எதையெல்லாம் மாற்ற வேண்டியிருக்கிறது - தம்மைத் தவிர. பாப்பாபட்டி - கீரிப்பட்டிகளை நாம் பயமுறுத்தினால் நிலைமை மாறும். பூனைக்கு மணி?

இருக்கிறவர்கள் தம் இருப்பைத் தக்க வைக்க மறைந்தவர்களை மறந்துவிடுவதே மரபாகி வருகிறது. சி.எஸ். நினைவுகூரப்பட்டிருப்பது நம் நன்



படிப்பகம்

www.padippakam.com

றியுணர்வின் அடையாளம். அந்தப் பன்முகச் சிந்தனையாளர் பற்றிய சில பழைய நினைவுகள் வருகின்றன. இன்றைய அரசியல்வாதிகள் போலின்றி - ஆரவார ஆர்ப்பாட்டமில்லாத சாதுவான நிறை குடம். ராஜாஜி ஆள் என்று முத்திரை குத்தப்பட்டாலும், காமராஜரும் தம்முடன் இணைத்துப் பொறுப்பு தருமளவிற்கு அவரிடம் திறமை இருந்தது. அதை அங்கீகரிக்கிற திறமைகளும் அன்று இருந்தன. நேரு சபையிலும் ஒளிர்ந்தார். கல்வி, உணவுத் துறைகளில் அவர் கால் தடங்கள் மறையாது. 'தமிழால் முடியும்' என்று சூளுரைத்தார். வேளாண் துறையில் பசுமைப் புரட்சி, உணவுத் துறையில் தன்னிறைவு கண்டார். 'உலகம் சுற்றினேன்' என்று ஆனந்தவிகடன் மூலம் வாசகர்களுக்கு உலகப் பங்களிப்பைத் திறந்து காட்டினார். நேருஜி மறைந்தவுடன் அதைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கிறார்: The light is out - மறக்க முடியாத வார்த்தை. 'ஜனநாயகம்' இன்னும் இருட்டாகத்தான் இருக்கிறது.

ஊடே சில உறுத்தல்களும் தவிர்க்க முடியவில்லை. சாதியாளர்கள் பொறுப்பில் இருக்கும் போது சறுக்கினால், எதிர்விளை சமூகத்திற்குத் தான். ஒரு வித 'ஹிப்பாகிரஸி'யா அது? நினைப்பதை உடனுக்குடன் தயவு தாட்சண்யமின்றி வெளிப்படுத்திப் பகிரங்கமாக்காமல் - அதில் ஒளிந்திருக்கக் கூடிய நற்பயனைப் பெறாமல் - காலங்கடந்து அங்கலாய்ப்பதில் என்ன பயன்?

மாந்தோப்பின் இதமான சூழல் மனதை மயக்குகிறது. தாக்கேட்டா contrast நெருடுகிறது. இங்கும் அந்தச் சூழல். அந்தக் காலத்தில் இருந்துதான் இப்போது மரவெட்டிகளால் பொட்டல் காடாகி இருக்கிறது. மர வளர்ப்பில் இனியாவது நாடு தீவிரமாக ஈடுபட்டால் நல்லது.

சிறுகதைகளில் சி.எம்.முத்து பாராட்டப்பட வேண்டியவர். இப்போது மிக அவசியமான ஒரு 'மெசேஜ்' அவர் தந்திருப்பது. இந்த மனிதநேயம், பரஸ்பரப் பரிவுதான் இன்றைய தேவை.

'கெட்டுப்போனவளின் குடை' மனசைக் கனக்க வைத்தது. ஒவ்வொரு படைப்பாளிக்கும் 'சம்பவாமி யுகே யுகே' தாரக மந்திரம்தான். அவர்கள் நம் எழுத்துக்களிலாவது நியாயத்தை நடத்திக் காட்ட வேண்டும். அதர்ம அநியாயங்களை ஆரவாரித்து வஞ்சம் தீர்க்காமல் எதற்கு பேனா பிடிப்பது? நெட்டை மரங்களென நின்று புலம்பவா? துச்சாதனர்களைத் தூக்கிப் பந்தாடி மேலேறி மிதிக்க வேண்டாமா? எழுத்திலாவது?

யதார்த்தமான நாகரிக மாறுதல்களை ஜெயபாரதியின் கோளம் நினைவில் நிறுத்துகிறது.

'தமிழிலக்கிய வகை' ஏகலைக் கனம். மடி தாங்காமல். எளிதில் மனசில் ஒட்டாத புதுப்புதுச் சொற்களால் நம் இந்திய விமர்சகர்கள் பயமுறுத்துகிறார்கள். திரும்பத் திரும்பப் படித்தும் குழம்பி அலுக்க வேண்டியிருக்கிறது. எந்த இலக்கியத்துக்கும் இதுதான் இலக்கணம் என்று வரப்பு கட்ட முடியாது. க.நா.சு. சொல்வார் 'மரபுகளை மீறுவதே ஒரு மரபுதான்!' மாறிக்கொண்டேதான் இலக்கியம் இருக்கும், இருக்க வேண்டும்.

பாலசுப்ரமணியம் ஹேமலதா, மதுரை - 1.

கானகமாகிவிட்ட நவீன அரசியலில் நச்சு மரங்களும், முட்புதர்களும் சரளமாக மண்டிக் கிடக்கும்போது ஒரு காலகட்டத்தில் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் நறுமணம் வீசிய ஒரு சந்தன மரமும் வாழ்ந்து வளர்ந்திருந்தது. A silver lining in the grey sky என்பதை 'சி.எஸ்.' கட்டுரை மூலம் இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்.

வி.அய்.சுப்ரமணியம் எழுதிய சி.எஸ்.ஸைப் பற்றிய கட்டுரை சிறப்பாகவும், 'தமிழிலக்கிய வகைகள்' பற்றி டாக்டர் அ.அ. மணவாளன் எழுதிய கட்டுரை மிகச் சிறப்பாகவுமிருந்தன. தமிழ் இலக்கிய முயற்சிகளில் சி.எஸ்.ஸின் ஆர்வமும், அதன் முன்னேற்றம் குறித்த அக்கறையும் கட்டுரையாளரால் அழகாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்றைய தமிழிலக்கிய வகைகளின் போக்கினை, அதன் அழிந்துபட்ட படலத்தை,



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக் கூறுகளை, வருங்காலக் கோட்பாடு களை டாக்டர். அ.அ.மணவாளன் சிறப்பாக வடித்துள்ளார்.

தொடர்ச்சியாக வர வேண்டிய கட்டுரையை, காலமும் இடமும் கருதி சுருக்கித் தந்துள்ளார். பாராட்டுக்கள்! கணையாழியின் நூல் அறிமுகப் பகுதி சுரத்தில்லாமலிருக்கின்றது. ஏன்...? ஆழ்ந்த புலமையாளர்கள் எங்கே போனார்கள்? இடம் நிரப்பிகளாகவே விமர்சனங்கள் அமைந்துள்ளன.

சூர்யநிலா, சேலம்.

'எதிரொலி' பகுதியில் ஞானபீட விருது குறித்து புதுதில்லி ஏ.ஆர். ராஜாமணி எழுதியிருப் பதில் சில தவறான செய்திகள் உள்ளன.

சமஸ்கிருதம், பிராகிருதம் மற்றும் பாலி ஆகிய மொழிகளின் வளர்ச்சிக்காகவும் ஆராய்ச் சிக்காகவும் 1944ல் சாந்தி பிரசாத் ஜெயின் (S.P.ஜெயின்) என்பவரால் 'ஞானபீடம்' என்னும் அறக்கட்டளை நிறுவப்படுகிறது. அது 'கிரந்த மாலா' என்னும் வரிசையில் பல்வேறு ஆய்வு நூல் களை வெளியிடும் இலக்கிய அமைப்பாக இயங்கி வந்தது.

பின்னர், அவ்வமைப்பின் சார்பாக விருது ஒன் றினை வழங்கிட நேர்ந்தபோது, இயல்பாகவே அமைப்பின் பெயர் தாங்கி 'ஞானபீட விருது' என்று அழைக்கப்பட்டது.

உண்மை இவ்வாறிருக்க, அந்த இலக்கிய அமைப்புக்கு, 'ஞானபீடம்' என்கிற பெயரை கவி ஞர் தின்கர் சூட்டினார்'' என்பது தவறானதாகும். அது மட்டுமன்றி, ஞானபீடம் அறக்கட்டளை தொடங்கப்பட்டு இருபது ஆண்டுகள் கழித்தே அதன் பெயரில் விருது வழங்கும் நடைமுறை ஏற் பட்டது. எனவே, வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்தவற்றை, ஒரே காலத்தில் நடந்தவையாகச் சொல்லப்பட்ட பொருத்தமின்மையால் ஏ.ஆர். ராஜாமணி குழம்பியிருக்கிறார்; வாசகர்களைக் குழப்பியுமிருக்கிறார்.

மேலும், அகிலனுக்கு ஞானபீட விருதினை நேரு வழங்கியதைத் தாம், ''மனம் குளிரக் கண்டு களித்ததாக'' ஏ.ஆர். ராஜாமணி எழுதுகிறார். ஆனால், அகிலன் விருது பெற்றது 1975லும், நேரு இறந்தது 1964லுமாக இருக்கும்போது, ''நேருஜி யின் கைகளால் விருது'' எப்படி சாத்தியமாகும்?

ஒருவேளை, நடந்திராத ஒன்று, ஏ.ஆர். ராஜா மணிக்கு, ''பசுமையான நினைவாக'' இருக்க லாம்! ஆனால் எளிய வரலாற்றுக் குறிப்புக்களைக் 'கணையாழி'யும் மறந்திருப்பதுதான் அவலத்திற் குரியது.

ருத்ரன், காவேரிப்பட்டினம்.

தமிழுக்குரிய செம்மொழி அந்தஸ்து - அதன் செவ்விலக்கிய சிறப்புகள் ஒப்பற்றவையாகப் போற்றப்படுவதன் காரணங்களுடன் டாக்டர் அ.அ.மணவாளன் படைத்திருந்த தமிழிலக்கிய வகைகள் வாசித்தபோது தமிழின் தனித்தன் மையை நன்கு உணர முடிகிறது. விவாதங்களுக் குப் பதிலாக விளக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதால் வீணான சர்ச்சைகள் எழுவதில்லை என்பதற்கு இது நல்ல உதாரணம். கலை கலைக் காகவே என்னும் உயரிய நோக்கம் பற்றி எடுத்துக் காட்டுகள் கூறிய மணவாளன் தமிழின் தூய்மை காத்தலையும் வலியுறுத்தியிருந்தார். தொடர வேண்டிய ஆராய்ச்சி

ஆர்.ஆர்.சாமி, திருவண்ணாமலை.


## சிறந்த நாவலுக்கான
## தஞ்சை ப்ரகாஷ்
## இலக்கிய விருது

விவரங்களுக்கு

**தஞ்சை ப்ரகாஷ் இலக்கிய விருதுக்குழு**
மிஷன் ஆலமரத்துத் தெரு,
மகர்நோன்புச் சாவடி,
தஞ்சாவூர் - 613 001.




படிப்பகம்

www.padippakam.com

## கவிதைகள்



# ஒன்றுமற்ற ஒன்று

நீ எதற்கும் சிரமப்படுவதில்லை என்றாலும்
எதற்கோ சிரமப்பட்டுக்கொண்டுதானிருக்கிறாய்.
உன்னை யாரும் தொந்தரவு செய்ய முடியாதென்றாலும்
யாரோ தொந்தரவு செய்து கொண்டுதானிருக்கிறார்கள்
உன்னை யாரும் ஏமாற்ற முடியாதென்றாலும்
நீ தினமும் ஏமாந்துகொண்டுதானிருக்கிறாய்
எங்கும் வர விரும்பாத உன்னைத் தேடி
எல்லாம் வந்துவிடுகின்றன.
எதிர்பார்ப்புகள் தீர்ந்த உறவில்
வாழ விருப்பமென சூழ்ந்து நிற்கும்
எதிர்பார்ப்புகளிடம் புலம்புகிறாய்.
ஒன்றுமற்ற ஒன்று
கவ்விப் பறக்காதா எனக் காத்திருக்கிறாய்.
கவ்விப் பறந்து... அத்துவானத்தில் வைத்து
குதறி... குடல் இழுக்கையில்
பதறி... திரும்பிவிடுகிறாய்.
ஏதாவது செய்து தொலைக்கும்படியான
நெஞ்சின் நிர்ப்பந்தம் சபித்தபடி...
உட்கார்ந்து... ஊஞ்சலாடுகிறாய்
ஒன்றுமற்ற ஒன்றில்;
ஞாபகங்களை அமர்த்த முடியாத
இயலாமைகளுடன்.

இளம்பிறை

# கரும்பலகைக் குறிப்புகள்

★ பள்ளிகள் மீண்டெழுந்த
தனி வகுப்புகளில்
சாக்பீஸ் முனை வழிப்
பிதுங்கும் உயிர்மெய்கள்.

★ அழித்தல்களுக்குப் பின்னும்
மீண்டும், மீண்டும் பதிவாகும்
தேர்வு பயங்கள்.

★ பாடம் தின்று செரித்த
மூளைச் செல்களில் படியும்
மாலை நேரச் சோர்வுகளோடு
குழந்தைகளின்
குரல்வளை நெரிக்கும்
மனனங்கள்.

★ வீட்டுப்பாடங்கள் கனத்த
மாலை கழிந்து
எல்லாக் குழந்தைகளும்
பள்ளி சென்றுவிட்ட
பகல்களில்

★ அவர்கள் மறந்த
விளையாட்டு மொழியினை
யாருமற்ற மனவெளியில்
மனனித்து ஒப்புவிக்கும்
சுவரில் தொங்கும்
சதுரக் கருமைகள்.

பொ. செந்திலரசு



படிப்பகம்

www.padippakam.com

# களத்துமேடு

**விதையுறக்கம்**, சிறுகதைத் தொகுப்பு, அ. அப்பாவு, பொன்னேர் பதிப்பகம், புதிய எண். 6, முதல் தளம், கிருஷ்ணமாச்சாரி அவென்யூ, அடையார், சென்னை - 20, விலை ரூ 100/-

**விக்கிரகம்**, சத்தியானந்தன், காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, விலை ரூ 65/-

**நனைந்த நதி**, திலகபாமா, காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, விலை ரூ 50/-

**வெள்ளை மனசு**, லோட்டடஸ் எடிசன், திரேசா நூல் ஆலயம், 'பூஞ்சோலை', ஏ - 24, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, போளூர் - 606 803, விலை 130/-

**பாதையோர ஸிக்னல்கள் ...**, கவிதைத் தொகுப்பு, தந்தை முனைவர் அ. ஸ்டீபன், விண்ணேற்பு அன்னை வெளியீடு, ஆயர் இல்லம், 34, ஆபீசர்ஸ் லைன், வேலூர் - 632 001, விலை ரூ 50/-




**இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்- தொகுதி-3**, இ. சுந்தர மூர்த்தி, மா.ரா. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113, விலை ரூ. 60/-

**தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம்**, முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, முனைவர் ச. சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113, விலை ரூ. 30/-

**திருக்குறளில் பொதுநிலை உத்திகள்**, முனைவர் பொன். சௌரிராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113, விலை ரூ. 30/-

**கூர்ப் பச்சையங்கள்**, புதுக் கவிதைகள், திலகபாமா, காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024 விலை ரூ. 50/-

**யாராவது வருகிறார்கள் ....**, கவிதைத் தொகுப்பு, க. அம்சப்ரியா, புன்னகை, 68, பொள்ளாச்சி சாலை, ஆனைமலை - 642 104, விலை ரூ. 35/-

**இளைப்பாறுதல்**, ஜெயபாரதன், வ.உ.சி. நூலகம், ஜி-1, லாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை - 14, விலை ரூ. 50/-

**உண்மையின் தரிசனங்கள்**, மெய்ஞான நாவல், அவ்வை. மு. ரவிக்குமார், கமலம் பதிப்பகம், அவ்வை நகர், அம்மனூர், அம்பேத்கர் வீதி, அரக்கோணம் - 631 2002, விலை ரூ. 125/-

**தவிப்பு**, சிறுகதைத் தொகுப்பு மணிநாத், காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, விலை ரூ. 80/-



படிப்பகம்

www.padippakam.com



முத்தங்கள் தீர்ந்து விட்டன, கவிதைத் தொகுப்பு, ஆண்டாள் பிரியதர்ஷினி, குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 60/-

இலக்கியம் : வாசிப்பும் திறனாய்வும், கட்டுரைகள், சி. கனகசபாபதி, காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, விலை ரூ. 120/-

இந்திய வரலாற்றில் (புராணங்கள், இலக்கியங்கள், வானியல்), குமரி மைந்தன், வேங்கை பதிப்பகம், 80ஏ, மேலமாசி வீதி, மதுரை - 625 001, விலை ரூ. 50/-

மௌனமாய் சில ஓசைகள், புதுக் கவிதைகள், ஒழவெட்டி பாரதிப்ரியன், மங்களம் பதிப்பகம், ஒழவெட்டி அஞ்சல், காஞ்சி மாவட்டம் - 603 311, விலை ரூ. 40.00

எதிராக, கவிதைத் தொகுப்பு, அபிமானி, காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024, விலை ரூ. 35/-

கலை உலகில் ஒரு சஞ்சாரம், வெங்கட் சாமிநாதன், சந்தியா பதிப்பகம், நியூடெக் வைபவ் பிளாட்ஸ், 77, (பழைய எண். 57), 53வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083, விலை ரூ. 100/-

கலகக்காரர் தோழர் பெரியார், மு. இராமசுவாமி, ருத்ரா பதிப்பகம், 14-அ, முதல் தெரு, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர் - 613 007, விலை ரூ. 125/-

அய்யப்பன் கவிதைகள், தமிழில் என்.டி. ராஜ்குமார், புது எழுத்து, 39, ஜே.கே.சி. தெரு, காவேரிப்பட்டிணம் - 635 112, கிருஷ்ணகிரி மாவட்டம், விலை ரூ. 60/-

யதார்த்தம், சிறுகதைத் தொகுப்பு, உரு. இராசேந்திரன், ருத்ரா பதிப்பகம், 14-அ, முதல் தெரு, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர் - 613 007, விலை ரூ. 40/-

உறுதி கொண்ட நெஞ்சினாய் ..., விமர்சனத் திற்காக, மு. இராமசுவாமி, ருத்ரா பதிப்பகம், 14-அ, முதல் தெரு, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர் - 613 007, விலை ரூ. 50/-

மனவெளியளவு, கவிதைகள், சொர்ண பாரதி, அன்னை இராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011, விலை ரூ. 35

புனா ஒப்பந்தம், ஒரு சோகக்கதை, சிவக்குமரன், யாதுமாகி பதிப்பகம், 37/17, இராமசாமி கோயில், சன்னதி தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002, விலை ரூ. 15/-

தமிழ்க்கவிதை மரபும் நவீனமும், விக்ரமாதித்யன், மருதா, 226 (188) பாரதி சாலை, ராயப்பேட்டை, சென்னை - 600 014. விலை ரூ.100 -






படிப்பகம்

www.padippakam.com

## கவிதைகள்

### ராகமாலிகை

பெண்
பிறக்கையில்
பூபாளம்
பாவாடை
அணிகையில்
பாகேஸ்வரி
இனிய பதினாறில்
ஜனரஞ்சனி -
கற்ற
கல்வியால்
சரஸ்வதி
காதலில்
மோகனம்
திருமணத்தில்
கல்யாணி
கூடலில்
அமிர்தவர்ஷணி
வளைகாப்பில்
வசந்தா
மழலையின்
சிரிப்பில்
மதுவந்தி
குழந்தை தாலாட்டில்
நீலாம்பரி
புதுமனை
புகுதலில்
சுத்தபங்காளா
இல்லற
இங்கிதத்தில்
இந்தோளம்
குடும்ப நிர்வாகத்தில்
நாயகி
சம்சார
சாகரத்தில்
சங்கராபரணம்
கணவனை
கண்டிப்பதில்
கரகரப்பிரியா
மகள்
திருமணத்தில்
ஆனந்தபைரவி
மகன்
திருமணத்தில்
தர்பார்
மருமகள்
அதிகாரத்தில்
அட்டாணா
பந்து ஜன
பிந்துமாபினி
பரிபாலனத்தில்
பிந்துமாலினி
மங்களமான
சஷ்டியப்தபூர்த்தியில்
மத்யமாவதி
மூப்பில்
முகாரி
கண்ணன்
திருவடி
சேர்கையில்
பிருந்தாவன சாரங்கா,

### பக்தி

கோவில்
நிறைய
பக்தர்கள்

கம்பங்கள்
நிறைய
பிரசாதப்
பருக்கைகள்!

ஸ்ரீரங்கம் ஆர். கோபாலன்.



படிப்பகம்

www.padippakam.com

# ஜெல்லுவுக்கு பச்சைக் கண்கள் ஏன் வந்தன?

பாரவி

*சிறுகதை*

நாவலோ நாவல்

வாதம் எதிர்வாதம்

அல்ல

கழுவேற்றும் வாதம்

மீள பதினெண்ணாயிரம் பேருக்கா. எதன் பேரில்.

அந்த வாதமே அல்ல இந்த விவாதம்.

ஏதோவொன்று இது வந்தது எப்படி ஏனோ எப்படியோ இதுவா கேள்வி எது கேள்வி.

இது.

இவர்கள். இவர்கள்தான் கேள்வி

ஆரம்பி.

பார்க்கும் முகங்களில் எல்லாம் இவர்கள்தான் என்றால், எப்படி இவர்கள், எனில் எவர்கள், எவராகவும் இருக்கக்கூடுமா.

அவர்களாகவும் இருக்கலாம், பக்கத்தில் பார்க்க இருப்பதால் உனக்கு அவர்கள் இவர்களாகிவிட்டார்கள், அவர்களென்று பார். உனக்குத் தெரியாத இவர்கள் அறிந்துணராதவர்கள். அவர்களாய் இருந்தால் என்ன. இது அவர்கள்தான். அவர்கள் என்று சொல்லும்படிக்குத்தான் அவர்கள் இருக்கிறார்கள்.

இருந்தார்கள் என்றால்தான் அவர்கள். இருக்கிறார்கள் என நீயே சொல்வதால் இவர்கள்தானே, மேலும் கண்கள், தொலைநோக்கும் பார்வை, அவர்களெனக் காட்டவில்லையே. அவர்களாக இல்லாத போது இவர்கள்தான் என்பதை ஏற்றுக்கொள்ளேன். தீவிரம் வாய்ந்த நிலைத்த கண்கள். பூனைப் பார்வையின் வீச்சு.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் நீ சொல்லும் இவர்களின் தொலைதூரம் ஊடுருவும் பார்வை தொன்மை காட்டுவதாய் அவர்களாக்குமே. இன்னொன்று, என்ன சொன்னாய். தீவிரமா, வீச்சா, எங்கே, பூனைப் பார்வையிலா.

கண்களில் பாய்ந்து முகத்தில் தோய்ந்து காது மடல்களில் துடித்து விடைத்த மூக்கு நுனிகளிலும் இறுகித் தடித்த உதடுகளிலும் புடைத்து எழுந்த முகவெலும்புகளிலும் வழிந்து தீவிரம். வீச்சு. பார்க்க மறுக்காதே பார். அலுக்கும் வாதம் ஒழி.

அருகிருந்து தள்ளி நின்று குனிந்து பின் தள்ளி நிற்குமுனைக் கோணங்களால் ஊடுருவிப் பார்த்தாகிவிட்டது. உன் பார்வையில், ஏன் உன் பூனைப் பார்வை மூலமும், சிரிப்புதான்.

சிரி. நீ சிரிக்காவிட்டால் எப்படி. பிறவி அவநம்பிக்கைப் பதரே.

நெற்றியில் கொம்பு முளைத்த (கொம்புக்கு பாடபேதம்: கை உயர்த்தினான் மாணி) அவர்கள் உலகில் இவர்கள் உலவிக்கொண்டிருந்தனர். மார்பில் தவங்கிய மஞ்சளோ சந்தனமோ எதுவோ மேல்குப்பாயம் மறைத்தும் மறைக்காமலும் நுனி உதடுகளில் மீசை துளிர்த்து நடை பயிலும்போதே கொம்பு முளைத்ததை மறைக்க வேண்டிய ஒன்றாகவும் கூறி, வெளிக்காட்டவும் வேண்டுமெனக் காட்ட முற்பட்டபோதுதான் எங்கும் நடந்திடும் வேடிக்கை நிகழ்ந்தது. வேடிக்கைதான் வேறு என்ன என்று குரல்.

கழுத்துக்கும் கீழே வயிற்றைத் தொட்டு, நான்கு ஐந்து வடம் தங்கச் சரடுகளின் படாமும் முகப்பும் பொதியப்பட்ட வெள்ளை, நீல, சிவப்புக் கற்கள் ஜொலிப்பதைக் காட்டியும், மறைப்பது போல மறைக்காமலும், பட்டுத் துகிலின் கெட்டிச் சரிகை முந்தாணியைக் கவனமாக இழுத்து மூடுவது போல மூடாமலும் விடுவதுமாய்ச் சென்ற அம்மாக்கள்தான் முதலில் கண்டு மாய்ந்து முகவாயில் விரல் வைத்து, வேடிக்கைதான் என்றது. என்னயிது, நெற்றியிலே கொம்பு. புராணங்களில்தான் சொல்லியிருக்கிறது. முன்னொரு ஏதோ யுகத்திலே நெற்றியில் ஒற்றைக் கொம்பும் முதுகில் இரண்டு இறக்கைகளுமாய் இருந்தனவென. அல்லது அரக்கர்களுக்கு இருந்ததாக. நல்ல கூத்து, நல்ல வேடிக்கை இப்போது நமக்கு. சிரிப்புதான். சிரிப்பு. சிரிக்க மாட்டார்களா. தெரிந்தவர்களுக்கு சிரிப்பு.

நீ சிரித்தாயா, சிரிக்க முடியுமா. சிரித்தாயோ முற்பட்டாயோ ஆயிரம் சுக்கலாய் வெடித்துச் சிதறவேண்டும் தலையென தன்முன் தோன்ற மகிழ்ந்த பெரும்பூதத்திடம் சடைமுடி முனி கேட்டுப் பெற்ற வரம் வாக்கு பலிக்காமல் போய் விடாது. எச்சரிக்கை எச்சரிக்கை சாமி எச்சரிக்கை. ராசாதி ராசா எச்சரிக்கை. சிரிப்பார்களா, சிரிப்பாயா, சிரிக்கவாவது.

என்ன இப்படியாகிவிட்டது.

எது எப்படியாகிவிட்டது.

இது இப்போது போய்.

எது எப்போது போய்.

மங்கிய ஒளியினூடே தட்டென்று ஓர் ஒலி. தட்.

மேலிருந்து போட வேண்டிய சாளரக் கம்பியைக் கீழிருந்து மேலாகச் செருகியது யார். யாரென்று கேட்கிறோமே, யாரெனச் சொல்ல மாட்டீர்களா. மியாவ். யாரோ கத்தினார்கள். மியாவ்.

கீழ் மேலாகப் போட்ட தாழ்சாளரம். மாற்றிப் போட்டு இறுகிப்போன தாழ்ப்பாள். இரட்டை தாழ்ப்பாள். தலைகீழ். மியாவ். கீழ் மேலாக. மியாவ். சிக்கியது யார். மியாவ். தாழ் திறக்க முடியவில்லையெனில் என்ன சாளர இடுக்கு அடைத்தா போய்விட்டது. இண்டு இடுக்குகள் இல்லாதா போய்விடும். இருளின் இடுக்கு வழியே பூனை ஒற்றைக்கோட்டுப் பார்வை செல்லாதா மியாவ்.

பார்த்தால் சாளர அடைப்புதான் நிற்கிறது. யார் எப்படி அடைத்தார்கள் எனப் பார்த்தால்தான் திறப்பது எளிது. வெளியே ஓடுவதும் எளிது.



படிப்பகம்

www.padippakam.com

மியாவ்.

போதும். மேலும் கடிக்காதே. நகைப்புத்தான் வருகிறது என்றாள் கல்பா. இடுக்கண் வர நகைக்க முற்பட்டு நகுதலுக்குட்பட்டாயிற்றே நீ.

ஓகோ. அப்படியானால் முன்னமும் இன்னமும் கடிபடுவதும் கடிப்பதும்தானா நீ.

கடித்தோ, சிரித்தோ, சாளரங்கள் மட்டுமின்றி கதவுகளும் பார்க்கத் திறப்பன இல்லையோ கடைசியில்.

கடைசியில் என்ன பெரிய கடைசியில்.

திறப்பன இல்லையா, பார். முயன்று பாரேன் என்றான் குமாரசாமி.

பார்.

திபுதிபுவென முகங்கள். பார்த்த முகங்கள். நெற்றியில் இருந்தவை. இல்லாதவை. கடித்தவை. கடிபட்டவை. நகுபவை. நகைக்கப்பட்டவை. நகை முகப்பு படாம் வடம் எல்லாம் அம்மாவின் அக்கால மோஸ்தர் நகையாயிற்று. நகை. நகு.

தேங்கியது தொலைவு. பூனைப்பார்வை. அவர்கள் இவர்கள்.


விட்டுத்தொலை வாதத்தை. வாதத்தையா, விவாதத்தையா.

ஏதோவொன்றை விடு

விட்டாயிற்று. விடு.

காற்றுக் கூட இல்லாதது போல வெற்றிடம்

பேச்சரவம் கேட்டிலையோ எனக் கேட்கவும் அஞ்சிக் கிடந்தவனை கல்பா உலுக்கினாள். ஆமாம், நீ கவனிக்கவில்லையா ஜெல்லு பார்வையை. இரண்டு கண்களும் பச்சை நிறமாக மாறி வருவதை. வீட்டில் இருக்கும் பூனை ஜெல்லுவின் கண்களின் நிறமாற்றங் காட்டி, கவலையுடன்.




வட்டப் பழுப்பில் பகலில் கீற்றாய்த் தெரியும் கறுப்புக் கோட்டின் பார்வைப்புள்ளியும் காணாது, இரு கண்களும் பளபளக்கும் பசுந்தங்கம் படிந்த பச்சை நிறமாய் மாறி வந்தது. பார்வைத் தடுமாற்றம். நடமாட்டத்தில் இடிபடுதல். இயற்கையாய்த் தேடும் தீனியும் கிடைக்காது இளைப்பு. என்ன செய்யலாம். பதினோரு ஆண்டுகளுக்கும் மேலாய் வீட்டில் ஒரு ஆளாய் இருப்பதற்கு இப்படி ஆவது பற்றி எப்படிக் கவலைப்படாமலிருக்க முடியும். தன் சிறுவயதிலிருந்து பார்த்த யாரும் வளர்த்த எந்தப் பூனையின் பார்வையிலும் இப்படி நிறமாற்றத்தை, பசுந்தங்கக் கண்ணாடிப் பளபளப்பை பார்த்ததில்லை.

இல்லை. படித்தேனா அல்லது ஏதேனும் செய்திச்சுருள் ஒளிபரப்பில் பார்த்தேனா நினை



படிப்பகம்

www.padippakam.com



குறைவு என நீலச்சிலுவைச் சங்கத்தினை அணுகியபோது வருந்தியதால், முயற்சியைத் தளரவிடாது விலங்குகளுக்கான பல்கலைக்கழக மருத்துவமனையைக் கேட்டதில், பூனைகளுக்கான மருத்துவ சிகிச்சைப் பிரிவில் ஜெல்லுவை உள் நோயாளியாகச் சேர்க்க முடிந்தது. ஆளரவங் குறைந்த உலகம். தனித்தனி அறைகளில் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கும் நாய்களின் அவ்வப்போது குரைப்புகள். மற்றவை மறக்க.

தினமும் சென்று பார்க்க முடியாததில், வாரத்தில் ஒருநாள் ஞாயிறு அல்லது விடுமுறை நாளில் ஜெல்லுவுக்குப் பிடித்த முட்டை தோசை, குட்டி இதய வடிவ பிஸ்கட்டுகள், பால் அளித்து பார்த்து வருவதும், மருத்துவ வல்லுநர்கள் என்ன செய்யப் போகிறார்கள் எனும் ஆலோசனையைக் கேட்பதும் செய்கிறாயே தவிர, ஜெல்லுவுக்கு அறுவை சிகிச்சை செய்து கண்களில் உள்ள பசுந்தங்கப் பளபளப்புப் படலத்தை நீக்க முடியுமா என்று கேட்டாயா.

பச்சைக் கண்கள் வர என்ன காரணம் எனக் கேட்டாயா எல்லாப் பூனைகளுக்கும் வரும் என்கிறார்களா. கேட்கிறேன். கேட்பாயா. கேட்கிறேன்.

பூனைக்கு மட்டுந்தான் வருமா. நாய்களுக்கும் வருமா. கேட்கிறேன்.

நமக்கு வராதா. கேட்கிறேன்.

கல்பாவின் கேள்விகளுக்கு குமாரசாமியால் கேட்கிறேன் என்பதைத் தவிர்த்து வேறு தெளிவான பதில் தர முடியவில்லை. என்றைக்குத்தான் நீ தெளிவாகப் பேசி இருக்கிறாய். கேட்டு இருக்கிறாய்.

அறுவை சிகிச்சை செய்ய முடியுமா முடியாதா. முடியாதென்றுதான் நினைக்கிறோமென பல்கலை விலங்கு மருத்துவமனை நிபுணர் என்ன மொழியில் சங்கேதமாய் முணுமுணுத்தார் என்பவில்லை. பச்சை நிறப் பளபளப்பு தங்கக் கண்களைப் பெறும் பூனைகளைத் தாய்லாந்தில், அதுவும் பாங்காங்கில் கடவுள் அவதாரமாக, செல்வங்கொழிக்க வைக்க வந்ததாக வழிபடுகிறார்கள் என்பதாக. பூனைக் கடவுள் எகிப்து பிரமிட்டிலும் உண்டு. ஜெல்லு பாங்காங்கில் இருக்கக்கூடாதா. அங்கு அனுப்பிவிடலாமா. நம்பிக்கையே சான்று கேள்விக்குள்ளாக்குவது துரோகம். கர்ணமே ஆதாரமெனும் இன்றைய சூது வாது கூச்சல். தங்கக் கண் பூனைக்கு வழிபாடு அங்கு மட்டுந்தானா.

ஏன் உனக்கும் பச்சைக் கண்கள் வந்தால் அங்கு அனுப்பிவிடுகிறேன். நான் கேட்க நினைத்தது வேறு. ஜெல்லுவுக்கு பச்சைக் கண்கள் ஏன் வந்தன. எப்படி. ஏன் வந்தன. எப்படி வந்தன. கவலையும் கோபமும் கலந்த கல்பா. விவாதத்திற்கு இதுவா நேரம். இப்போதுமா.

சரி, கைகளைத் தூக்கியாயிற்று. உயர்த்திய கொடியை இறக்கியாயிற்று. கட்டு கடையை.

பனிரெண்டு வயது என்பது மனிதனுக்கான வயதாகும் தன்மையில் பூனைக்கும் நாய்க்கும் எவ்வளவு என்பதை விளக்கி, இது நேரக்கூடியது தான், வரக்கூடாததல்ல, வியப்பிற்குரியதல்ல, பாங்காங் பற்றித் தெரியாது எனவும் சொல்லி, ஆனாலும் தங்களால் செய்யக்கூடியது மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

தைத் தெரிவிப்பது முடிவாகுமா. அப்போது எதற்கு மருத்துவமனை. மருத்துவர்கள். நமக்கு செய்ய முடியும் என்றால் ஜெல்லுவிற்கும் முடியாதா. இங்கு எல்லாவற்றிற்கும் ஒரே முடிவு தானா?

ஜெல்லுவின் பக்கத்து படுக்கைக் கூண்டில் சேர்க்கப்பட்டிருந்த மற்றொரு பூனையின் இல்லத்துக்காரர், அதற்கு வேக வைத்த சிறு மீன் துண்டங்களை அளிக்கும்போது வெறும் பால் பிஸ்கெட் முட்டையென வாய் செத்துப்போயிருக்கும் ஜெல்லுவுக்கும் சில துண்டங்களை அளித்ததாகவும், ஜெல்லுவும் ஆவலுடன் விழுங்கியதாகவும் ஒரு ஞாயிற்றுக்கிழமை பார்வையாளர் நேரத்தின் போது குமாரசாமியிடம் தெரிவித்தார். அதுவும் சரியென்று அவரிடமிருந்தே சில மீன் துண்டங்களை வாங்கி ஜெல்லுவுக்கு அதன் தட்டில் வைத்து அழைத்தான்.



அடுத்த ஞாயிறு குமாரசாமியின் குரல் கேட்டதும், பதில் குரலெழுப்பி, இளைத்த உடலுடன் தடுமாறி எழுந்து, தட்டில் பிஸ்கட்டுகளைப் போட்டு முடிப்பதற்குள் இவன் விரலையும் சேர்த்துக் கடித்தது ஜெல்லு. தங்கம் மிளிரும் பச்சைக் கண்களில் இவன் முகம் பளபளக்க. அந்த மருத்துவமனைப் பிரிவில் இவனுக்கு தடுப்பூசி போடயியலாதெனினும், வளர்ப்புப் பூனை என்றாலும் அதன் பல் பட்டிருப்பதால் உரிய ஊசி போட்டுக் கொள்ள வேண்டுமெனும் ஆலோசனை பெற்றுக்கொண்டு வெளியே சாலைக்குச் சென்று மருந்துகள் கடையில் ஊசி மருந்து வாங்கி அதே சாலையின் கோடியில் இருந்த மனிதர்களுக்கான மருத்துவமனையில் மருந்தையும் பணத்தையும் கொடுத்து ஊசி போட்டுக்கொண்டதை வீட்டிற்கு வந்த பிறகு சொன்னான். கல்பா உச்சுக் கொட்டினாள். பாவம் ஜெல்லு.

அது பாவம் நானில்லையா.
ஏன் எரிச்சல்படுகிறாய்.
நாவலோ நாவல்
மறைந்தது பூனை பார்வை
மறைத்தது பூனை பார்வை
துவக்கு.



படிப்பகம்

www.padippakam.com

நடுப்பக்கம்

# மூன்று சுழித்தலையும் தக்கை முடியும்

மலர்மன்னன்

கட்டுரை

பேரப்பிள்ளை சின்னப் பையனாக ஒரு தடவை மடியில் தலை வைத்துப் படுத்திருந்தபோது, ஆசையாக அவன் தலையைத் தடவிக் கொடுத்த பாட்டி சொன்னாளாம் : ''தலையில் மூன்று சுழிகள், எதிர்காலத்தில் நிச்சயம் முடி ஏறப்போகிற தலை இது.''

பாட்டி சொன்னது போலவே பின்னாளில் பேரன் தலையில் முடி ஏறியது - அன்றாடம். ஆனால், ஒரு வித்தியாசம். கேரளத்தின் பிரத்தியேக நிகழ்கலையான கதகளியில் வரும் பிரதானக் கதாபாத்திரங்களின் தலையை அலங்கரிக்கும் முடிதான் அது. அதனாலென்ன? கதகளி என்னும் கலைக் களத்தின் விஸ்தாரமான பரப்பில் ஆளுமை மிகுந்த கலைஞராக அறியப்படும் கலாமண்டலம் ராமன்குட்டி நாயர், அவரது துறையைப் பொருத்தவரை ஒரு முடிசூடா மன்னராகத்தான் சக கலைஞர்களாலும், தேர்ந்த ரசிகர்களாலும், விவரம் மிக்க விமர்சகர்களாலும் மதிக்கப்பட்டு வருகிறார்.

ராமன்குட்டி நாயரின் எண்பது வருட கால நெடிய கலைப் பயணத்தை எழுபத்து மூன்று நிமிடங்களில் உள்ளடக்கி இறுக்கமான ஆவணப் படமொன்றை உருவாக்கித் தந்திருக்கிறார், இயக்குநர் அடூர் கோபால கிருஷ்ணன் - பாரத சங்கீத நாடக அகாடமிக்காக.

கதையாழம் மிக்க திரைப்படங்களை கலைநயம் குன்றாமல் எடுத்துப் பழகி சர்வதேச அங்கீகாரம் பெற்ற அடூர், ஆவணப் படம் எடுக்கிற போது, அதுவும் மிகவும் சுவையாக எடுத்துச் சொல்லப்படுகிற கதையாகிவிடுகிறதேயன்றி வெறும் தகவல் தொகுப்பு விவரணப் படமாகப் போய்விடுவதில்லை. கேரளப் பண்பாட்டின் அடையாளச் சின்னமான இடுப்புயர வெண்கலக் குத்துவிளக்கிற்கு அருகில் அதன் தோழனைப் போல் நின்றவாறு அறிமுகமாகும் ராமன்குட்டி நாயர், நம்முடன் நேரில் பேசத் தொடங்குகிறார். பின்னணியில் அவரது குரல் ஒலிக்கையில் திரையில் காட்சிகள் மலரத் தொடங்குகின்றன. பசுமைச் சாயம் இறங்கினாற் போன்ற அவரது கல்லுவழி கிராமம். வலுக்கட்டாயமாக அவர் அனுப்பி வைக்கப்பட்ட பள்ளிக்கூடம். படிப்பில் கவனம் பதியாமல் கதகளிக் கலைஞனாக ஆகியே தீருவது என்கிற அவரது பிடிவாதத்தால் தாய்மாமன் ஏற்பாட்டில் கதகளி ஆசான் பட்டிக்கந்தோடி ராவுண்ணி மேனன் வீட்டிலும் பின்னர் கவிஞர் வள்ளத்தோள் நிறுவிய கலாமண்டலத்திலும் அவர் பெற்ற கதகளிப் பயிற்சி ....



படிப்பகம்

www.padippakam.com



மணிக்கணக்கில் நீளும் ஒப்பனையைப் பொறுமையாகச் செய்து கொள்ளும் கலாமண்டலம் ராமன்குட்டி நாயகர்

தாம் பயின்ற கலாமண்டலத்திலேயே பயிற்சியாளராகவும் பிறகு முதல்வராகவும் பணியாற்றினார் ராமன்குட்டி நாயர். இன்று கதகளியில் முன்னணியிலுள்ள கலைஞர்கள் பலரும் அவருடைய மாணாக்கர்கள்தாம்.

மிகவும் நிதானமான அசைவுகளும் அடவுகளும் மிக்க நிகழ்கலையான கதகளிக்கு அளிக்கப்படும் பயிற்சி மிகக் கடுமையாகவும் அதிவிரைவாகவும் இருப்பதைப் பார்க்கிறபொழுது பிரமிப்பேற்படுகிறது. சகல விதமான உடற்பயிற்சிகளும் யோகாசனங்களும் அதில் அடங்கிவிடுகின்றன. வெறும் கோவணத்துடன் உடம்பு முழுவதும் எண்ணெய்க் குளியலுடன் கவிழ்ந்து கிடக்கும் மாணவச் சிறுவர்கள் மீது சட்டாம்பிள்ளைகள் ஏறி மிதித்தும் கைகால்களை நீட்டி வளைத்து முறுக்கியும் அந்த உடம்புகளை எத்தகைய இயக்கத்திற்கும் இசைந்து கொடுக்கத் தக்கவையாகத் தயார்படுத்துகிறார்கள். 'கதகளி ஆசானால் மாணவர்களின் சிறு பிழையையும் பொறுத்துக்கொள்ள முடியாது. தண்டனை மிகக் கடுமையாக இருக்கும் என்ற அச்சத்தினாலேயே பயிற்சியில் மிகுந்த சிரத்தை ஏற்பட்டுவிடும்' என்கிறார் ராமன்குட்டி.

கதகளியில் பாத்திரங்களின் இயல்பிற்கேற்ற ஒப்பனைகளும் உடையலங்காரங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கொண்டே இன்ன தன்மையான பாத்திரம் என்பதை அனுபவம் வாய்ந்த பார்வையாளன் புரிந்துகொண்டுவிட முடியும். இவ்வாறான ஒப்பனை - உடையலங்காரங்களுக்கென இடுகுறிப் பெயர்களும் உண்டு. பச்ச (பச்சை), கத்தி, மினுக்கு, தாடி, க்ரி, இப்படி. கண்ணியமான ரஜோ குணத்தை வெளிப்படுத்தும் தருமன், பீமன், அருச்சுனன், கண்ணன் போன்ற பாத்திரங்கள் 'பச்ச' - முகத்தில் பச்சை வர்ணத்துடன் தோன்றுவார்கள். தமோ குணத்தவர்களான ராவணன், துரியோதனன், கீசகன் போன்றவர்கள் 'கத்தி' - கூர்த்த உடையலங்காரங்களுடன் 'தாடி'யில் சிவப்பு, வெண்மை என இருவகை வெள்ளைத் தாடி அனுமனுக்கு, சிவப்பு துச்சாதனனுக்கு. கரி, கரிய நிற ஒப்பனையும் உடையுமாக வனவாசிகளைக் குறிக்கும். 'மினுக்கு' பெண் கதா பாத்திரங்களுக்கு.

ராமன்குட்டி நாயர் தமது கதகளி வாழ்க்கையில் இந்த எல்லாவிதக் கதாபாத்திரங்களையும் ஏற்று நடித்திருப்பதோடு மரபை மீறாமல் பல புதிய கதைகளையும் அரங்கேற்றி வந்திருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



பாட்டி சொன்னவாறே முடிஏறிய தலை

'கலாமண்டலம் ராமன்குட்டி நாயர் : ஒரு மகா கலைஞர் குறித்த நினைவோட்டம்' என்கிற இந்த ஆவணப் படத்தைப் பார்த்ததோடு அதை எடுத்துத் தந்திருக்கிற அடூர் கோபாலகிருஷ்ணனுடன் நேருக்கு நேர் கலந்துரையாடும் வாய்ப்பையும் சென்னை சத்யம் திரையரங்க வளாகத்தில் ஏற்படுத்தித் தந்தது 'லைட்ஸ் ஆன்' என்கிற தீவிர திரைப் பட ரசனை அமைப்பு கடந்த ஜூன் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை மாலையில்.

பார்வையாளர்களுடன் தம் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட அடூர், கதகளி மேல்தட்டு வர்க்கத்தினர் மட்டுமே ரசிக்கும் நிகழ்கலை என்பதையும் சமயச் சார்பில் தோய்ந்த வெளிப்பாடு என்பதையும் மறுத்தார். கேரளத்தில் சாதாரண கிராமவாசிகளும் கதகளியின் ரசிகர்களே என்று தெரிவித்த அடூர், சாஸ்த்ரீயக் கலையான கதகளி, புராதன புராண இதிகாசக் கதையம்சங்களைக் கொண்டதாக இருந்தால்தான் பொருத்தமாக இருக்கும் என்பதையும், சமூகப் பிரச்சினைகளையோ சங்கடங்களையோ பிரதிபலிக்கும் அரங்கமாக அது இருக்க வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார். தாம் எடுத்துள்ள ஆவணப் படம் ஒரு கலைஞனுக்கும் அவனது கலைக்குமிடையிலான ஒட்டுறவு பற்றியதேயன்றி கதகளி என்கிற நிகழ் கலை பற்றியதல்ல என்பதையும் அவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

முத்தாய்ப்பு :

சத்யம் திரையரங்க வளாகத்தின் நிர்வாக இயக்குநர் கிரண் ரெட்டி தமது வளாகம் பொழுது போக்குப் படங்களுக்கான கேந்திரமாக மட்டுமின்றி தீவிர சிந்தனையைத் தூண்டும் இந்தியத் திரை முயற்சிகளைக் காணவும் அவற்றோடு தொடர்புடைய கலைஞர்களுடன் நேருக்கு நேர் கலந்துரையாடவும் வாய்ப்பளிக்கிற களமாகவும் அறியப்பட வேண்டுமென்றும் விரும்பியதன் விளைவாகத் தோன்றியிருக்கிறது 'லைட்ஸ் ஆன்'. இதை முன்னின்று நடத்தி வருபவர் அரங்கக் கலைகளில் ஈடுபாடும் நவீன நாடக முயற்சிகளில் நேரடி தொடர்பும் உள்ள பிரசன்னா ராமசாமி. கலந்துரையாட வரும் கலைஞர்களை விருந்தோம்பி மரியாதை செய்யும் பொறுப்பை ஏற்றிருப்பவர் சவேரா ஐந்து நட்சத்திர விடுதியின் நீனா ரெட்டி.

'லைட்ஸ் ஆன்' நிகழ்ச்சிகளுக்கு அனுமதி இலவசம். ஆனால், சத்யம் திரையரங்கிலிருந்து முன்னதாகவே அனுமதிச் சீட்டைப் பெற வேண்டும். நிகழ்ச்சி பற்றி செய்தித்தாள்களிலும் முக்கியமான புத்தகக் கடைகள், அல்லயான்ஸ் பிராண்ஸே, பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற அமைப்புகளிலும் முன்கூட்டி அறிவிப்பு செய்கிறார்கள். ஆனால், இன்னும் கூடுதலான விளம்பரம் தேவை; பயன் முழுமை பெற.



படிப்பகம்

www.padippakam.com

# ழா[ன்]போல் சார்த்ர்
## (Jean - Paul Sartre, 1905-1980)

காரை இரா. கிருஷ்ணமூர்த்தி

கட்டுரை

பிரெஞ்சு சிந்தனையாளர் சார்த்ரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இவ்வாண்டு மேலைப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் அவரது கருத்துகளும் படைப்புகளும் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. 1950-1980 காலகட்டத்தில்தான் இவரது புகழ் மேலோங்கி இருந்தது என்றாலும், இன்றும் இவரது நூல்களில் நம் சிந்தனையைத் தூண்டும் பல செய்திகளைப் பெற முடியும் என்பது திண்ணம்.

எக்சிஸ்டன்ஷியலிஸம் எனும் இருப்பியல் வாதத்தின் பிரெஞ்சுப் பிரதிநிதியான சார்த்ர் 'சொற்கள்' (Les Mots, 1965) எனும் தலைப்பில் ஒரு சுய சரிதம் எழுதி இருக்கிறார். இதில் அவர் தமது வாழ்க்கையில் எழுந்த சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அவற்றை அவர் எப்படி எதிர்கொண்டார் என்பதை விளக்குகிறார். உலக சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்ற ஆல்பெர்ட் சுவைட்ஸர் இவருக்குத் தாய் வழி உறவினர். சிறு வயதிலேயே தந்தையை இழந்த சார்த்ர். சுவைட்ஸர் குடும்பத்தில் வளர்ந்தார். கல்வி கேள்விகளில் அதிக நாட்டம் கொண்டார். அவர்களது நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தி அறிவை வளர்த்துக் கொள்வதில் முனைப்பாக இருந்தார். சிறு வயதில் அவருக்கு மிகவும் கவலை அளித்தது அவரது உருவத் தோற்றமே. சராசரிக்குச் சற்றுக் குறைவான உயரம். கிட்டப்பார்வை. வசீகரமற்ற முகம். பார்த்த உடனேயே 'நோஞ்சான்' என்று சொல்லும்படியான உடல்வாகு. தெருவில் விளையாடும் சிறுவர்கள் இவரை ஒரு பொருட்டாக மதித்து விளையாடக் கூப்பிடாதபோது தம்மை ஓர் ஒப்புக்குச் சப்பாணியாகவேனும் சேர்த்துக் கொண்டு ஓரத்தில் நிற்க வைக்கமாட்டார்களா, அதுவும் இல்லையென்றால் ஓர் உயிரற்ற பிணமாகவேனும் நடிக்க வைக்க மாட்டார்களா என்பது போன்ற ஏக்கங்கள் எல்லாம் இந்நூலில் சுவையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

வெளித் தோற்றத்தில் அவரை அனைவரும் மிஞ்சினாலும், அறிவாற்றலில் அவர் அனைவரையும் மிஞ்சிவிட்டார். அவர் தேர்ந்தெடுத்த தத்துவக் கல்வியில் அவர்தான் எப்போதும் முதல் மாணவராக விளங்கினார். பின்னர் எக்சிஸ்டன்ஷியலிஸம் எனும் தத்துவத்தை விளக்குவதிலும் அதைப் பின்பற்றி நடப்பதிலும் ஈடு இணையற்றவராகத் திகழ்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

அவர் 1943ஆம் ஆண்டு 'இருத்தலும்வெறுமையும்' (L'Etre et le Neant) எனும் நூலை வெளியிட்டார். இது அவரது தத்துவங்கள் அடங்கிய நூல். மேல் நாட்டுத் தத்துவங்களில் பரிச்சயம் இல்லாதவர்கள் அவ்வளவு எளிதில் புரிந்துகொள்ள முடியாத நூல்.

ஆனால், சார்த்ர் தம் கருத்துகளை அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென விரும்பியவர். ஆகவே 1946ஆம் ஆண்டிலேயே 'இருத்தலியல் ஒரு மனித இயக்கம்' (L'Existentialisme est un Humanisme) எனும் நூலை வெளியிட்டு அந் நோக்கத்தை ஓரளவு நிறைவேற்றிக்கொண்டார்.

மேலை நாட்டுத் தத்துவங்களில் existence (இருத்தல்), essence (அடிப்படைக் கூறுகள்) எனும் பிரிவு உண்டு.

எனக்கெதிரே ஒரு மேசை இருக்கிறது.

அது அங்கு இருப்பதை நான் உணர்வதால் அதன் existence நிச்சயமாகிறது.

அதன் வடிவம், வண்ணம், பயன்பாடு போன்றவை அதன் essence. அதாவது, அதன் அடிப்படைக் கூறுகள்.

பிரச்சினை என்னவென்றால், existence, essence ஆகிய இவ்விரண்டில் எது முந்தியது, எது பிந்தியது என்பதுதான்.

மேசையைப் பொறுத்தவரையில் essence முந்தியது; existence பிந்தியது. ஏனென்றால் essence ஆகிய வடிவம், வண்ணம், பயன்பாடு போன்றவற்றை முதலில் தீர்மானித்த பிறகே தச்சுத் தொழிலாளி மேசையை உருவாக்குகிறான். மேசை ஒரு சடப்பொருள். அது அதுவாகத்தான் இருக்க முடியும் (பிரெஞ்சு மொழியில் en soi = ஆ(ன்) சுவா என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது). தன்னிச்சையாக அது தன்னை மாற்றிக்கொள்ள முடியாது.

இப்போது மனிதனுக்கு வருவோம். எனக்கெதிரே இருக்கும் கேசவன் ஒரு மருத்துவன். அவன் அங்கிருப்பதை நான் உணர்வதால் அவன் existence நிச்சயமாகிறது.

அவனுடைய essence ஆகக் கருதப்படும் அவனது தனித்தன்மை, அவன் தேர்ந்தெடுத்திருக்கும் தொழிலில் அவன் வெளிப்படுத்தும் திறமை அல்லது திறமையின்மை, நேர்மை அல்லது நேர்மையின்மை, எடுக்கும் அல்லது எடுக்காத முடிவுகள் அனைத்தும் அவன் இவ்வுலகிற்கு வரும் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை அல்ல. அவனது essence அவனாலேயே தீர்மானிக்கப்படுகிறது. அவனால் தன்னிச்சையாக செயல்பட முடியும் (பிரெஞ்சு மொழியில் pour soi = பூர் சுவா என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது). இதிலிருந்து மனிதனைப் பொறுத்தவரையில் existence முன்னதாகவும், essence பின்னதாகவும் வரும் என்பது வெளிச்சம்.

ஆகவே,

மேசை : essence - existence

கேசவன் : existence - essence


ஒவ்வொரு மனிதனின் அடிப்படைக் கூறுகளும் அவனால் தேர்ந்தெடுத்துக்கொள்ளப்பட்ட - தீர்மானித்துக்கொள்ளப்பட்டவையே. கதையைச் சொல்லாமல், பேச வேண்டிய வசனத்தையும் சொல்லித் தராமல், பாத்திரத்தின் தன்மையையும் விவரிக்காமல் மேடையில் ஏற்றி நடிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நடிகனின் நிலைமை தான் மனிதனின் நிலைமை. அவனே கதையையும், அவனே வசனத்தையும், அவனே பாத்திரத்தையும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அவனது தேர்ந்தெடுப்புகளையும் - தீர்மானங்களையும், அவன் அவற்றை நிறைவேற்றுவதையும் அடிப்படையாகக் கொண்டே மற்றவர் அவனை மதிப்பிடுவர். அப்படிப்பட்ட மதிப்பீட்டிலிருந்து அவன் தப்பவே முடியாது.

மனிதனின் அடிப்படைக் கூறுகள் இறைவனால் தீர்மானிக்கப்படுபவை என்று வாதிடலாம். சார்த்ர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. மேசையைப் பொறுத்தவரை அதை உருவாக்கிய தச்சுத் தொழிலாளி இருப்பது கண்கூடு. மனிதனைப் பொறுத்தவரை அவனை இறைவன் படைத்தான், அப்படிப்பட்ட இறைவன் இருக்கிறான் என்பது இன்னும் உறுதிசெய்யப்படாத செய்தி.



படிப்பகம்

www.padippakam.com



உலகமும் அதில் நிகழ்வனவும் நம் சிந்தனைக்கு ஒவ்வாதவையாகவே இருக்கின்றன. ஏன் இப்படி இருக்கின்றன அல்லது நிகழ்கின்றன என்று நமக்குப் புரிவதில்லை. அனைத்தும் அர்த்தமற்றதாகவே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான் 'அப்சர்ட்' (absurd) நிலை என்று குறிப்பிடுகிறார்கள்.

அர்த்தமற்றதாகத் தெரியும் வாழ்வில் மனிதனால்தான் ஓர் அர்த்தத்தைக் கொடுக்க முடியும். இது அவனுக்கே உரிய கடமை, கட்டாயம். இதனை எதிர்கொள்ள முடியாத மனிதன் கடவுள் என்று ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு தனது பிரச்சினையைச் சுலபமாக்கிக்கொள்கிறான்.

மனிதனால் மட்டுமே தனது பொருள் பொதிந்த செயலாக்கத்தால் உலகை மாற்ற இயலும். இங்கு மார்க்ஸ் (Marx)ன் கருத்தோடு சார்த்ருக்கு உடன்பாடு உண்டு. இதை அவரே தமது 'Critique de la Raison Dialectique' எனும் 750 பக்கங்கள் கொண்ட தத்துவ நூலில் குறிப்பிடுகிறார். இயற்கையின் போக்கை மாற்றக்கூடிய சுதந்திரம் மனிதனிடம் மட்டுமே உண்டு. இதை அவன் பயன்படுத்துவதைப் பொறுத்தே அவனால் தன்னைச் சடப்பொருளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட முடியும்.

அதே சமயம் மனிதன் எடுக்கும் எந்த ஒரு முடிவிலும் அவனது பொறுப்பு அடங்கி இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. கணவனின் தொல்லையைத் தாங்க முடியாமல் ஜானகி விவாகரத்து வாங்கினால், சூழ்நிலைதான் அவளை அம்முடிவுக்குத் தள்ளியது என்று கூறிவிட முடியாது. ஏனென்றால் அவள் அத்தொல்லையினால் தவித்தபோது அவளுக்குப் பல சாத்தியங்கள் (கணவனிடமே வாழ்ந்து தொலைப்பது/தற்கொலை செய்துகொள்வது, ஓடிப்போய்விடுவது இருந்தன. அவற்றில் ஒன்றான விவாகரத்தைத் தேர்ந்தெடுத்தது அவள்தான்.

ஒவ்வொரு மனிதனும் தனது முடிவுகள், தீர்மானங்கள், தேர்வுகள் அனைத்தும் நேரடியான அல்லது மறைமுகமான நிர்பந்தங்கள் அடிப்படையில் அமையாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சார்த்ருக்கு 1964ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்பரிசு ஒரு ஸ்தாபன அடிப்படையைக் கொண்டது. அதற்கென சில வரைமுறைகள் உண்டு. பரிசை ஏற்றுக்கொண்டால் அவற்



படிப்பகம்

www.padippakam.com

றையும் ஏற்றுக்கொண்டதாக - அங்கீகரித்ததாகி விடும் என்பதால் அவர் அதை வாங்க மறுத்துவிட்டார்.

சார்த்ரின் அனைத்துப் படைப்புகளும் அவரது எக்ஸிஸ்டன்ஷியலிஸக் கொள்கையின் பல்வேறு அம்சங்களையே விளக்குகின்றன.

அவரது 'குமட்டல்' (La Nausee, 1937) எனும் நாவல் அதன் கதாநாயகன் ரொக்காந்தேனுக்கு (Roquentin) ஏற்படும் ஒரு விசித்திரமான அனுபவத்தை எடுத்துரைக்கிறது. எவ்விதத் தெளிவான நோக்கமும் இன்றித் திரியும் அவன், ஒரு நாள் ஒரு பார்க் பெஞ்சு மீது அமர்ந்திருக்கிறான். அவனைச் சுற்றியுள்ள புல்தரை, அங்கு வளர்ந்திருக்கும் மரம், மரத்தின் வேர் ஆகியவை அனைத்தின் நீட்சியாகவே தானும் இருப்பதாக உணர்கிறான். தன்னிச்சையாக இயங்க முடியாத சடப்பொருட்களினின்று தான் எவ்விதத்திலும் வேறுபட்டவன் அன்று என்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இதனால் அவனுக்கு ஒரு குமட்டல் ஏற்படுகிறது.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் மற்றவர்களின் மதிப்பீட்டுக்குள்ளாக்கப்படுகிறோம். அவர்கள் மதிப்பீட்டுக்கு அடிப்படையாக அமைவது நமது செயல்களே. இந்நிலையிலிருந்து நாம் தப்பவே முடியாது. நமக்கு நரகமாக அமைவது நம்மைச் சுற்றி, நம்மை எப்போதும் எடைபோட்டுக்கொண்டே இருக்கும் மற்றவர்களே. இக்கருத்தைச் சித்திரிக்கிறது இவரது 'மீள முடியாது' (Huis Clos, 1944) எனும் நாடகம்.

அரசியல் வாழ்க்கையில் நாம் நமது கொள்கைகளைப் பல சமயங்களில் சமரசம் செய்துகொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது அவரது மற்றொரு நாடகமான 'கறைபடிந்த கைகள்' (Les Mains Sales, 1948).

சார்த்ரின் மற்ற நாடகங்களாகிய 'ஈக்கள்' (Les Mouches, 1943) 'சாத்தானும் தேவனும்' (Le Diable et le Bon Dieu, 1951) 'அல்த்தோனாவில் அகப்பட்டுக்கொண்டவர்கள்' (Les Sequestres d'Altona, 1959) போன்றவற்றிலும், 'சுவர்' (Le Mur, 1939) எனும் சிறுகதைத் தொகுப்பிலும் எக்ஸிஸ்டன்ஷியலிஸத்தின் பல்வேறு அம்சங்கள் விளக்கப்படுகின்றன.



இலக்கியத்தின் நோக்கத்தைப் பற்றி சார்த்ர் தமது கருத்துகளை 'நிலைப்பாடுகள்' (Situations, 1948) எனும் நூலில் திட்டவட்டமாக விளக்கி இருக்கிறார். அவரது பார்வையில் சமூகப் பிரச்சினைகளைத் தொடாத, அவற்றைக் குறித்துச் சிந்தனையைத் தூண்டாத - இலக்கியம் இலக்கியமாகாது. கலை கலைக்காகவே என்பது போன்ற இயக்கங்களையெல்லாம் அவர் அங்கீகரித்தது கிடையாது.

மொத்தத்தில், சார்த்ரின் படைப்புகளில் மனிதனின் பொறுப்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவரது தத்துவம் மனிதனின் பிரச்சினைக்கெல்லாம் மனிதனையே பொறுப்பேற்க வைப்பதில் முனைகிறது. அவரது கடவுள் மறுப்புக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களும்கூட மனிதன் எவ்வாறெல்லாம் தன் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முயல்கிறான் என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் முன்வைக்கும் வாதங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாது. தலைவிதியின் மீது பழியைப் போட்டுவிட்டு வாளாவிருக்க நினைக்கும் வீணர்களுக்கு சார்த்ரின் தத்துவம் ஒரு சவுக்கடியாகவே அமைகிறது எனலாம்.

பிரெஞ்சு எழுத்தாளர்களில் பெரும்பாலானோரின் படைப்புகளை வாசிக்கும்போது நம்மிடம் ஏற்கனவே இருந்து வந்த கருத்துக்களில் ஓர் அதிரடியான மறுபரிசீலனை ஏற்படும். இதை நாம் சார்த்ரின் நூல்களைப் படிக்கும்போதும் நன்கு உணரலாம். ●



படிப்பகம்

www.padippakam.com

# இராஜா இரவி வர்மா

அரவக்கோன்

கட்டுரை

இந்தியக் கலையுலகம் புறந்தள்ளிய ஓவியர் ஒருவர் உண்டு என்றால், அது இராஜா இரவி வர்மா என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. தமது வாழ்நாளில் புகழும், செல்வமும் ஈட்டிய அவரது படைப்புக்களைத் தரம் குறைந்தது என்றும், அவரை ஒரு நாட்காட்டி ஓவியர் (Calender Painter) என்றும் அடையாளப்படுத்தி உரிய இடத்தைத் தர மறுத்தது.

அண்மைக் காலங்களில் கலை வல்லுனர்களும், ஆர்வலர்களும், ரசிகர்களும் அவரது ஓவியங்களை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியதன் விளைவாக நமக்கு அவரைப் பற்றிய பல செய்திகளும் படைப்புலகில் அவர் தொட்ட எல்லைகளும் தெரிய வருகின்றன.

ஓவியர் இராஜா இரவி வர்மா 1848 ஏப்ரல் 29ஆம் தேதி கேரள மாநிலத்தில் கிளிமானூர் என்னும் ஊரில் நீலகண்ட பட்டத்ரிபாட் என்பவருக்கும் உமாம்பா தம்புராட்டி என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். சிறு வயதிலேயே அவருக்கு ஓவியத்தில் இருந்த ஆர்வத்தைக் கண்ட அவரது மாமன் இராஜ இராஜ வர்மா (அவரும் ஓவியர்தான்) மருமகனை திருவனந்தபுரம் மன்னரிடம் கூட்டிச்சென்று அவரின் ஓவிய பயிற்சிக்கு ஒப்புதல் பெற்றார். முறையான பயிற்சிக்கென பள்ளிகள் அப்போது இருக்கவில்லை. தமது 14ஆம் வயதுவரை அங்கு ஆங்கில ஓவியர் தியோடர் ஜென்சன் (Theodore Jensen) என்பவரிடமும் அரசவை ஓவியர் அழகிரி நாயுடு என்பவரிடமும் பயிற்சி பெற்றார். மேலை நாட்டு தைல வண்ண ஓவிய உத்தியும் அவருக்கு அறிமுகமாயிற்று. என்றாலும் அவரது வளர்ச்சி யாருடைய உதவியும் இல்லாமலேயேதான் நிகழ்ந்தது.

1870களில் தைல வண்ண ஓவியம் தீட்டுவதில் திறமையும் நேர்த்தியும் கைவரப் பெற்று ஒரு தொழில்முறை ஓவியராகச் செயற்படத் தொடங்கினார் இரவி வர்மா. வண்ணங்களைக் கலப்பதிலும் மனித உருவங்களில் தோலின் வெவ்வேறு நிற பேதங்களைத் தெளிவாகத் தீட்டுவதிலும் உடைகளின் இயல்புத் தன்மையை நுணுக்கமாக ஓவியங்களில் கொண்டுவருவதிலும் அவர் நிபுணரானார். தைல வண்ணத்தில் ஓவியங்கள் தீட்டுவது என்பது ஒரு பெருமையான விஷயமாக அப்போது சமூகத்தில் நிலவியது.



படிப்பகம்

www.padippakam.com

அவரது கலைப்பயணம் அப்போது முதல் தொடங்கிவிட்டது. தொடர்ந்து ஒரு முப்பதாண்டு காலம் மன்னர்களும் செல்வந்தர்களும் போட்டி போட்டுக்கொண்டு அவரது ஓவியங்களை விலை கொடுத்து வாங்கித் தங்கள் மாளிகைகளை அழகு படுத்தினார்கள்.

1885இல் பரோடா மன்னர் தமது மாளிகையை அலங்கரிக்கவென்று ஓவியரை வரவழைத்தார். புராண, இலக்கியங்களிலிருந்து தேர்ந்தெடுத்த காட்சிகளில் பதினான்கை ஓவியமாக்கினார் இரவி வர்மா. அதற்கான சன்மானத் தொகை ரூ. 50,000/- மன்னரால் கொடுக்கப்பெற்று சிறப்பிக்கப்பட்டார். ஓவியர் தனது ஓவியங்களில் பெண்டிரை எப்போதும் மிகவும் எழில் மிக்கவராகவே காட்டினார். செல்வக் குடும்பத்தினராகவும் அவர்கள் இருந்தனர். 'இரவி வர்மா ஓவியம்' போல என்று பெண்ணின் எழிலை வர்ணிப்பது வழக்கமாயிற்று. அவரது ஓவியப் பெண்டிர் மராட்டியர் உடுத்தும் புடவையுடனேயே காணப்பட்டனர். அவரது நாடான கேரளத்தில் புடவை உடுத்துவது அந்நாளில் வழக்கத்தில் இருக்கவில்லை. புடவையின் வண்ணங்களும், பெண்டிர் உடுத்தும்போது அவற்றில் உண்டாகும் மடிப்புக்களும், அதன் முனைகள் காற்றில் படபடப்பதும் அவரைப் பெரிதும் ஈர்த்தன.

1887 இல் மைசூர் மஹாராஜாவின் அழைப்பை ஏற்று சில ஆண்டுகள் அங்கு தங்கி ஓவியங்கள் படைத்தார். 1891இல் அவர் இரண்டாம் முறையாக பரோடா மன்னரின் அழைப்பை ஏற்று அங்கு தங்கினார். மேலை நாட்டு ஓவியர்களைப் போலவே தமது ஓவியங்களுக்கு கேரள, மராட்டியப் பெண்டிரை மாதிரியாகப் பயன்படுத்தினார். அவர்களைத் தேவையான நிலைகளில் அமைத்து ஓவியங்கள் தீட்டினார் (he used them as models to do live study). தமது வாழ்வின் பெரும்பகுதியை அவர் மும்பையில்தான் கழித்தார். அங்குதான் 1894 இல் அவர் தமது அச்சகத்தை நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதி ஓவியம் - தமயந்தி / அன்னம் - அச்சிடப்பட்டது. 1899இல் அச்சகத்தை ஸ்லிஷர் (Slisher) நகரத்துக்கு மாற்றினார். அக்டோபர் 2, 1906இல் தமது 58ஆவது வயதில் அவர் இறைவனடி சேர்ந்தார்.

அந்த சமயத்தில் அவர் இந்தியாவின் மிகச் சிறந்த, உலகப் புகழ்பெற்ற ஓவியராக விளங்கினார். 'Modern Review' என்னும் இதழ் அவரை இந்தியாவின் மிகச் சிறந்த ஓவியர் என்று சிறப்பித்து எழுதியது. நிவேதிதா அம்மையாரும் தாகூரும் அவரைப் புகழ்ந்தார்கள். அவரது ஓவியங்கள் இந்தியாவெங்கும் அரச மாளிகைகளிலும், தனியார் சேகரிப்புகளிலும் விரவிக் கிடந்தன. பல குடும்பங்கள் அவரது ஓவியங்களின் காரணமாகத் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டு நீதிமன்றத்தை நாடின. அவரது பாணியில் தீட்டி அவரது போலிக் கையொப்பம் இட்ட ஓவியங்களும் கலைச் சந்தையில் பெரும் தொகைக்கு விலைப்போயின.

ஆனால், அவரது மறைவுக்குப் பின் சில ஆண்டுகளிலேயே விமர்சன உலகம் அவருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியது. ஓவியர்களில் பொறாமை கொண்ட சிலரும், கலை விமர்சகர்களும் அவரது ஓவியங்களில் வெறும் கதை சொல்லும் (illustrative) தன்மையும், உணர்ச்சி மேலோங்கிய தன்மையும்தான் காணப்படுகின்றன; அவர் கற்பனை வறட்சி மிக்க மேலை நாட்டுப் பாணியை நகல் செய்யும், இந்தியக் கலையியலைப் புறக்கணித்த ஓவியர் என்றெல்லாம் குறை கூறத் தொடங்கினார்கள். அவரது அச்சகத்தில் அச்சிடப்பட்ட பிரதி ஓவியங்கள் 'கேலண்டர் ஓவியர்' என்று அவரை கொச்சைப்படுத்தப் பயன்பட்டன. மேலை நாட்டு உத்தியான தைல வண்ணத்தை பயன்படுத்தி இந்திய வண்ண உத்தியை அவர் அவமதித்ததாகக் கூடக் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்திய மக்கள் அவரை எப்போதுமே நிராகரிக்கவில்லை.

'இந்திய ஓவியம்' என்றவுடன் மேலைநாட்டு மக்களுக்கு, கண்களை உறுத்தும் வண்ணங்கள் மிகுந்த இந்துக் கடவுளர்களின் பிரதி ஓவியங்கள் தான் நினைவுக்கு வரும். பல ஆண்டுகளாக இவை இந்துக்களின் இல்லங்களில் பூஜை அறை சுவர்களில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, வணங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரதி ஓவியங்கள் அவர்களை ஈர்த்ததற்குக் காரணமானவரைத் தேடினால் நமக்கு இரவி வர்மா என்னும் ஓவியர் கிடைப்பார். தமது ஓவியங்களை அவர் எல்லோருக்கும் கொண்டு சேர்க்க விரும்பினார். அதுவே பிரதி ஓவியங்களுக்கு வழிவகுத்தது. தமது ஓவி



படிப்பகம்

www.padippakam.com

யங்களை ஒரு பரந்த தளத்துக்கு இதன்மூலம் அவர் கொண்டு சென்றார். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவரது ஓவியங்கள் அவர் நிறுவிய அச்சகத்தில் இலட்சக்கணக்கில் பிரதிகளாக அச்சடிக்கப்பட்டு நாடு முழுவதும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவற்றின் அறிமுகத்துக்குப் பின் இந்திய மக்களிடையே மரபு சார்ந்த ஓவியங்கள் அவர்களின் மனதிலிருந்து விலகி இரவி வர்மாவின் ஓவியங்கள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டன. இவற்றின் விலை குறைவாக இருந்ததால் நடுத்தர, ஏழை மக்களும் கூட வாங்க முடிந்தது. மற்ற ஓவியர்களும் அவரைப் பின்பற்றி கடவுளர் உருவங்களை ஓவியமாக்கத் தொடங்கினர்.

தைல வண்ணத்தை ஓவியங்களில் பயன்படுத்திய முதல் இந்திய ஓவியர் எனவும் இவரைக் குறிப்பிடலாம். மேலை நாட்டு முப்பரிமாண ஓவியங்களைக் கூர்ந்து கவனித்து, உள்வாங்கிக்கொண்டு அதனுடன் இந்தியப் புராண, வரலாற்று நிகழ்ச்சிகளைக் கருவாக அமைத்து ஓவியங்கள் தீட்டுவதில் ஒரு புதிய உத்தியை ஓவியர் இரவி வர்மா உண்டாக்கினார். நமது மரபு ஓவியங்களான சுவர் ஓவியங்களில் காணப்படும் நாடகத் தன்மையையும் அவர் தமது ஓவியங்களில் கொண்டுவந்தார். நாட்டின் பல பகுதிகளுக்கும் பயணித்துத் தமது ஓவியங்களுக்கான புராண / இதிகாசங்களை அறிஞர்களிடம் கேட்டுத் தெளிந்து அவற்றுடன் பல இந்திய அணிகலன், உடையலங்காரம் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தமது ஓவியங்களில் பயன்படுத்தினார்.

அவரது ஓவியங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் :

1. மனித முகங்கள் (Portraits)

2. மனித முகம் சார்ந்த வடிவமைப்புக்கள் (Portrait based Compositions)

3. வரலாறு, இதிகாசங்களினின்றும் எடுக்கப்பட்ட நாடகத் தன்மை கொண்ட நிகழ்ச்சிகளின் வடிவங்கள் (Theatrical compositions based on myths and legends)

அவரது மூன்றாவது வகை ஓவியங்கள் அவருக்குப் பெருமையையும் செல்வத்தையும் ஈட்டித் தந்தனவென்றாலும் அவரைப் போல மேலை நாட்டு ஓவியங்களுக்கு ஒப்பான திறமை மிகுந்த மனித முகத்தை (Portrait) இதுவரை வேறு இந்திய ஓவியர் எவரும் படைத்ததில்லை. புராணம், வரலாறு, இலக்கியம் சார்ந்த ஓவியங்களில் அவர் அந்த நிகழ்வுகளின் உறைவு நிலையைப் பதிவு செய்தார். அவரது ஓவிய உத்தி என்பது மேலை நாட்டினுடையதாக இருந்தபோதிலும் ஓவிய மொழி கலப்படமற்ற தென்னிந்திய அடையாளத்துடனேயே இருந்தது. இது ஒரு தென்னிந்தியன் நமது புராணத்தை ஆங்கிலத்தில் கூறுவதற்கு ஒப்பிடலாம். ஆனால் கலைத் தூய்மையைப் போற்றும் பண்டிதர்கள் இதைப் பெரிய குற்றமாக முன் வைக்கின்றனர். இரவி வர்மா எந்த காலகட்டத்தில் இதைச் செய்தார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இருபதாம் நூற்றாண்டில் ஓவியர்களும் சிற்பிகளும் மேலைநாட்டு நவீன பாணிகளை அப்பட்டமாகப் பின்பற்றியதைவிட இது ஒன்றும் மோசமான செயல் அல்ல. சரியாகச் சொல்வதென்றால் இலக்கியத்தில் நிகழ்ந்த அதே உத்திதான் இவராலும் இந்தியாவில் தொடங்கி வைக்கப்பட்டது.

பட்டு, டிஷ்யு, ஆர்கான்ஸா, மல் போன்ற துணி வகைகளை அவர் தமது ஓவியங்களில் தெளிவாக வேறுபடுத்திக் காட்டினார். எம்பிராய்டரி (Embroidery), துணியில் இழை அமைப்பு (Texture), உடைகளின் ஓரங்களில் (Border) காணப்படும் சரிகை வேலைப்பாடுகள் ஆகியவை வெகு நேர்த்தியாக அவரால் ஓவியமாக்கப்பட்டன. பெர்ஷிய, முகலாய தங்க நூல் இழைகள் அவரது தூரிகைகளால் நுணுக்கத்துடன் தீட்டப்பட்டன. உடைகளை வடிவமைப்பது தொடர்பான பல புதிய உத்திகளை ஆடை வடிவமைப்புக் கலைஞர்கள் கற்க ஏராளமான வாய்ப்பு அவரது ஓவியங்களில் இருந்தது. 'மஹாராஷ்டிரா டைம்ஸ்' (Maharashtra Times) 1977ல் பால் கந்தர்வா (Bal Gandharva) சிறப்பு மலர் வெளியிட்டது. அதில் மராட்டிய நாடகக் கலைஞர், பாடகர் (S.G. கிட்டப்பா போல) ப்பால் கந்தர்வா நெசவாளர்களை அழைத்து இரவி வர்மாவின் ஓவியங்களிலிருந்து உடைகளுக்கான வடிவங்களையும், திரைச்சீலைகளையும் நெய்யப் பணித்தார் என்ற குறிப்பு உள்ளது. பரோடா கவின்கலைக் கல்லூரி கலை மற்றும் வர



படிப்பகம்

www.padippakam.com

லாறு பகுதியின் பொறுப்பாசிரியர் (H.O.D.) திரு. தீபக் கனால் இதை உறுதிப்படுத்துகிறார்.

இரண்டு நூற்றாண்டுகளைத் தமது ஓவியங்கள் மூலம் அவர் இணைத்ததை இந்தியக் கலை வரலாற்றுப் பாதையில் ஒரு முக்கியமான நிகழ்வு என்று சொல்ல வேண்டும். மரபை நவீனத்துடன் பொருத்தி அவர் ஒரு புதிய பாணியைப் பின்பற்றினார். இங்கு நவீனம் என்பதை மேலை நாடுகளின் கலைப் புரட்சியுடன் ஒப்பிடக் கூடாது. அவரது பாணி ஒரு புதிய பார்வை தொடர்பானது. அதற்கு முந்தைய காலங்களில் கலை நிகழ்ச்சிகள் அரசவை அல்லது மதம் சார்ந்த சடங்குகள், விழாக்கள் இவற்றுடனேயே தொடர்பு கொண்டதாக இருந்தன. கலைஞர் (ஓவியர் / சிற்பி), கைவினைக் கலைஞர், அணிகலன் செய்பவர் அது தொடர்பான தொழில் செய்பவர் என்று அனைவரும் ஒரு சமூகமாக இணைந்தே செயல்பட்டனர். ஆனால், ஆங்கிலேயர் ஆட்சியில் மேலை நாட்டுக் கல்வி முறையில் தேர்ந்து, அரசுப் பணிகளில் இடம்பெறத் தொடங்கிய இந்திய மேல்தட்டு வர்க்கம் அவர்களிடமிருந்து கலைகளை ஒரு புதிய தளத்தில் புரிந்து கொள்ளக் கற்றுக்கொண்டது.

ஓவியர் இரவி வர்மா தமது மேலை நாட்டு சமகாலக் கலைஞர்களை அடியொற்றிப் பயணம் செய்யவில்லை. அங்கிருந்த, தமக்கு வேண்டிய முறைகளை மட்டுமே உள்வாங்கிக்கொண்டார். ஆங்கில அரசு நிறுவிய கலைப் பள்ளிகளில் தங்கள் கல்வித் திட்டத்தை (Syllabus) செயற்படுத்த முயன்றுகொண்டிருந்தபோது இரவி வர்மா தன்னை ஒரு தொழில் ரீதியான ஓவியன் என்ற நிலைக்கு உயர்த்திக்கொண்டார். அவர் மக்களின் கலா ரசனையைத் தனக்கு சாதகமாக்கிக்கொண்டது உண்மைதான். அவரது ஓவியங்களில் நாடகத் தன்மை மேலோங்கியிருப்பதும் நாம் அறிந்தது தான். ஆனால், இவையெல்லாம் அவரது மற்ற சிறப்புக்களுக்கு முன் கரைந்துவிடுகிறது.

அவர் அரசகுமாரர்களில் ஒரு ஓவியராகவும் ஓவியர்களில் ஒரு அரசகுமாரராகவுமே எப்போதும் விளங்கினார். ●


# கணையாழி

## சந்தா விபரம்

| இந்தியா | | வெளிநாடு |
|---|---|---|
| 1 ஆண்டு | ரூ.110.00 | 15 அமெரிக்கா (யு.எஸ்) டாலர் |
| 2 ஆண்டு | ரூ.200.00 | 30 அமெரிக்கா (யு.எஸ்) டாலர் |
| ஆயுள் | ரூ.1,000.00 | 150 அமெரிக்கா (யு.எஸ்) டாலர் |

'கணையாழி' பெயரில் மணியார்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி

**'கணையாழி'**

11, நானா தெரு, (தி.நகர் தலைமைத் தபால் நிலையம் அருகில்) தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி : 044-2434 7354, செல் : 98402 67296




படிப்பகம்

www.padippakam.com

# வன்மம்

## சிறுகதை

இ. வில்சன்

என் தங்கைக்கு திடீர் திடீரென்று எதன் மீதாவது அதீத பிரியம் ஏற்பட்டுவிடும். கேரம், டான்ஸ், நீச்சல், ஓவியம், டைப்ரைட்டிங் என்று ஒவ்வொன்றாய் அலைபாய்ந்தாள். எதையும் முழுசாய் கற்றுக்கொண்டபாடில்லை. எல்லாம் நுனிப்புல் மேய்ச்சல்தான். ராப்பகலாய் அதே சிந்தையாய் இருப்பாள். அத்துறையில் பெரிய நிபுணியாகிவிடுவாள் என்று பார்ப்பவர்க்குத் தோன்றும். இருக்கையிலேயே வந்த ஆசை போன இடம் தெரியாது. எல்லாவற்றையும் ஏறக்கட்டிவிடுவாள். அத்தோடு முழுக்குதான்.

கேரம் பௌடரும், கால் சலங்கையும், நீச்சல் உடுப்பும், தூரிகையும், தட்டச்சு கார்பனும் மூலைக்கு ஒன்றாய் குவிந்திருப்பது தான் கண்ட பலன். இப்படி இருக்கையில்தான் அந்த 1981ஆம் வருட இறுதியில் அந்த தானனனனனன்ன, தான நன நன்ன தானா நன்ன நன்னா, தன தான நன்னன்னா... என்ற ஆயிரந் தாமரை கும்மிப்பாடல் அவள் காதில் விழுந்தது. விழுந்தது மட்டுமின்றி, திரும்பத் திரும்ப ரீங்கரித்தது. கிறக்கத்தைக் கொடுத்தது. கண் சொக்கி நிற்க ஆரம்பித்தாள். சரி, அடுத்த தலைவலி வாய்ப்பாட்டிற்கு வந்துவிட்டது என்று நினைத்தேன். ஆனால், என் கணக்கு தவறிவிட்டது. பாட்டு அல்ல, மிருதங்கம்தான் கற்றுக் கொள்ளப் போகிறாளாம். அழுது அடம் பிடித்து அப்பாவிடம் சம்மதம் வாங்கிவிட்டாள். அப்பா என்னைக் கூப்பிட்டார்.

''லலிதா, கொழந்தை மிருதங்கம் கத்துக்க ஆசைப்படறா!

''கொழந்தையா அது, கொரங்கு; கோட்டான்; சொல்லுங்கப்பா என்ன பண்ணனும் இப்போ!''

''நீதான் சித்த சபேசய்யர் வீடு வரை அழைச்சுப் போய் வரணும்!''

''ஏம்ப்பா, தெரியாமத்தான் கேட்கறேன், பொம்பளைக் குட்டிக்கு மிருதங்கம் தேவைதானா?''

''என்னம்மா அப்படி சொல்லிட்டே? எப்பேர்ப்பட்ட கலை அது? ரொம்ப நுட்பம் வேணும்மா அதை ரசிச்சு வாசிக்க!''



படிப்பகம்

www.padippakam.com

''அதாம்பா நானும் சொல்றேன். இந்த சனிக்கு ஏது அத்தனை நுணுக்கமும், கூர்மையும்!'' என்று நான் சொல்லும்போதே எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. அம்மாவும் கூட சிரித்துவிட்டாள். என் தங்கைக்கு கண்ணில் நீர் துளும்பிவிட்டது. அது போதாதா என் தகப்பனாருக்கு, பாகாய் உருகிவிட்டார். வீட்டில் என்றுமே நானும் அம்மாவும் ஒரு கட்சி. அப்பாவும் தங்கையும் நேர் எதிர் கட்சி.

''நீ அதிகப் பிரசங்கம் பண்ண வேண்டாம். நான் சொல்றதை மட்டும் கேள். இவளை அழைச்சுப் போறது உன் பொறுப்பு. ஆமாம்!''

''எல்லாத்துலயும் வாய் வெச்சாச்சு. இப்போ, மிருதங்கத்தை காக்கா கடி கடிக்கப் போறதாக்கும். கால் கிணறோ, அரைக் கிணறோ பார்ப்போம்!''

''நீ சித்த சும்மா இரு. ஏதோ, அவளுக்காச்சும் இந்த ஊக்கமும், புதுசா கத்துக்கணும்கற ஆர்வமும் இருக்கே!''

''எத்தனை நாளைக்கோ? பார்ப்போம்!''

''அதெல்லாம் நா முழுசா கத்துப்பேன். என்ன பெட்?'' என்றாள் அனு.

''முதல்ல அத்தைக்கு மீசை முளைக்கட்டும்!''

''சரி போதும் நிறுத்துங்கோ. வர்ர புதன் கிழமையிலிருந்து நீ அவளை மிருதங்க கிளாஸ்க்கு அழைச்சு போய்ட்டு பத்ரமா கொண்டு வர்ர சொல்லிட்டேன்!'' என்று அப்பா முற்றுப்புள்ளி வைத்தார்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வீட்டில் அடைந்து கிடந்த நேரம் அது. எனக்கும் வெளியில் தினமும் சென்று வர ஒரு சந்தர்ப்பமாய் இது அமைந்ததால் என் தங்கையை அழைத்துச் செல்ல சம்மதித்தேன்.


புதன்கிழமை குளித்து முடித்து, பூ, பழம் தட்சணை தட்டுடன் நானும் அவளும் புறப்பட்டோம். டவுன் ஹைஸ்கூல் தாண்டி, யானையடி கடந்து குளம் திரும்பினால் பச்சையப்ப முதலி தெரு. நடந்தால் தெரு கடைசியில் மகாலிங்கம் கண் ஆஸ்பத்திரிக்கு எதிரில் இருந்தது அந்த வீடு! 'சபேசய்யர், மிருதங்க வித்வான்' என்று வாசலிலேயே போர்ட் மாட்டியிருந்தது. செருப்பைக் கழட்டிவிட்டு உள்ளே சென்றோம். ஏகப்பட்ட குடித்தனங்கள் இருந்த பழங்கால வீடு அது. கொல்லைப்புறம் அடுத்த தெருவில்தான் முடிய வேண்டும். நீண்டுகொண்டே சென்றது. கணீரென்று மிருதங்க ஒலி வந்த ஜாகை எங்களுக்கு சுளுவாய் வழி காட்டிற்று. இரண்டு மூன்று பையன்கள் கற்றுக் கொண்டிருக்க, எதிரே அவர் உட்கார்ந்து கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். கட்டுக் குடுமியும், கடுக்கனும், பட்டை பட்டையாய் நெற்றி நிறைந்த விபூதியும், வெற்றிலைக் குதப்பலுமாய் சிவப்பழமாய் இருந்தார். என் தகப்பனார் ஏற்கனவே சொல்லி இருந்திருப்பார் போலும்.

எங்களை உடனே புரிந்துகொண்டு உள்ளே வருமாறு தலையசைத்தார். மடிக்குழந்தையை இறக்கி வைக்கும் தாயின் லாவகத்துடன் மிருதங்கத்தை வெல்வெட் மெத்தையில் வைத்துவிட்டு போய் தாம்பூல எச்சிலைத் துப்பிவிட்டு வந்தார். கிழக்குப் பார்க்க நின்ற குருவின் காலடியில் தட்சணைத் தட்டை வைத்து, நெற்றி வகிடு நிலம் பட என் தங்கை பணிவாய் மடிந்து வணங்கியபோது, என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. 'அடி மாய்மாலக்கள்ளி' என்று முகத்தைத் திருப்பினேன். வாசித்துக்கொண்டிருந்த அந்த பையன்கள் நிறுத்தி இருந்ததை மீண்டும் வாசிக்க ஆரம்பித்தார்கள். என் தங்கையின் மிருதங்க அத்தியாப்பியாசமும் ஒருவாறு ஆரம்பமாயிற்று. வாரத்திற்கு மூன்று நாள் வகுப்பு. சேர்ந்த அன்றிலிருந்தே வீட்டிலும் ஆரம்பித்துவிட்டாள். சாதகம் செய்கிறேன் பேர்வழி என்று லொட்டு லொட்டென்று தட்டி இருப்பவர் தூக்கத்தைக் கெடுக்க ஆரம்பித்துவிட்டாள். பட்டுப்பாவாடையும், பின்னலும், பூவுமாய் சர்வலங்காரத்துடன் மகாராணி முன்னால் நடக்க, நான் சேடிப்பெண் போல் மிருதங்கத்தைத் தூக்கிக் கொண்டு அவள் பின்னே ஓடினேன். வித்துவான் வீட்டு வாசலிலேயே மிருதங்கத்தை அவள் தலையில் கட்டிவிட்டு நான் திண்ணையில் உட்கார்ந்து விடுவேன். அந்த கைபர் கணவாயில் நுழைவதை



படிப்பகம்

www.padippakam.com



முதல் நாளுடன் நிறுத்திக்கொண்டேன். வாசல் திண்ணையும், தெருவும் எனக்குப் பிடித்த விதத் தில் இருந்தன. கம்பி அழி வைத்து தடுக்கப்படாத பெரிய திண்ணை. ஓரளவு அகலமான பெரிய வீதி. பெரிய மனிதர்கள் குடியிருக்கும் தெருவிற்கே உண் டான அமைதியான அழகு அந்த தெருவிலும் இருந்தது. எதிரில் கண் ஆஸ்பத்திரி.

வண்டி கட்டிக்கொண்டுதான் வருவார்கள். நோயைச் சுமந்து வரும் மனிதர்கள், மனிதர்களைச் சுமந்து வரும் வண்டிகள், வண்டிகளைச் சுமந்து வரும் மாடுகள், அதன் மைக் கண்கள், கூர் கொம் புகள், பளபளக்கும் கொப்பிகள், அவிழ்த்து விடப் பட்ட நிழலில் படுத்து அசைபோடும் அவற்றின் வாயின் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் ஒற்றை வைக்கோல் என்று ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டிருப்பேன்.

இதெல்லாம் இல்லையென்றால் எதிர்சாரி பவழமல்லி மரம், வாசல் கோலம், காவிக் கட்டம், வெள்ளரிப் பிஞ்சு விற்பவன், தயிர்க்காரி என்று என் கண்கள் அலைபாயும். ஆனால் இவை எல்லா வற்றையும்விட சுவாரஸ்யமானது எதிர் திண்ணை பாட்டிதான். நான் உட்கார்ந்திருப்பது பெரும்பா லும் சிறிய திண்ணைதான். எதிரில் பெரிய திண் ணையில் நிலைப்படியை ஒட்டி சுவரில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்திருப்பாள். அந்தப் பாட்டி. என்னிடம் ஒரு வார்த்தை பேசியதில்லை. யாரிட மும் பேசியும் பார்த்ததில்லை. பிறவி ஊமை போலிருக்கிறது. மழிக்கப்பட்ட தலை மேல் நார் மடிப் புடவை முக்காடு, நழுவிக்கொண்டே இருக் கும். பொதுவாய் இந்த மாதிரிக் கிழடுகள் நெற்றி யிலும் கைகளிலும் பட்டை பட்டையாய் விபூதி அணிந்து, கட்டை விரலால் ருத்திராட்ச



படிப்பகம்

www.padippakam.com

மாலையை ஒவ்வொன்றாய் நிரடி எண்ணிக் கொண்டு கிருஷ்ணா, ராமா என்று சுலோகம் வேறு முணுமுணுக்கும் வாயுடன்தான் பார்த்திருக்கி றேன். ஆனால் அந்தப் பாட்டிக்கு விபூதிப் பட்டையோ, மணிமாலையயோ கிடையாது. அதற்கு பதில் பட்சண சம்புடம் பக்கத்திலோ மடியிலோ உட்கார்ந்திருக்கும். கெட்டியான பழைய காலத்து பித்தளை சம்புடம். திறந்திருக்கும் சம்புடத்தினுள் என்ன இருக்கிறது என்பதை எதிராளி பார்க்கும்படி தான் வைத்திருப்பாள் அந்தப் பாட்டி.

நானும் பார்த்த இத்தனை நாட்களில், பாட்டியும், சம்புடமும்தான் மாறவில்லையே தவிர, அதனுள் இருந்த பதார்த்தம் மாறிக்கொண்டேதான் இருந்தது. நெய் முறுக்கு, அதிரசம், சீடை, தட்டை, கட்டி உருண்டை என்று விதத்திற்கு ஒன்று. உள்ளே ஏழெட்டு குடித்தனங்கள் இருந்த பெரிய வீடு. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாய் நிறைந்து வழியும் வீடு அது.

சதா உள்ளே போய்க்கொண்டும் வந்துகொண்டும்தான் இருப்பார்கள். அப்படிப்பட்ட கல்யாண சத்திரம் போன்ற வீட்டின் ராஜநுழைவாயில் போன்ற தலைவாசல் பக்கத்தில்தான் அந்தப் பாட்டி உட்கார்ந்து யாரையும் லட்சியம் பண்ணாமல், ஏதோ ஒரு பட்சணத்தை சதா வாயில் போட்டு மென்றுகொண்டே இருப்பாள். பக்கத்திலேயே வெள்ளிக் கூஜாவில் வென்னீர்.

அந்தப் பாட்டிக்கு வயது எழுபத்தைந்துக்கு மேல்தான் இருக்கும். பாரி உடம்பு. கன்னத்திலும் இடுப்பிலும் சதை தொங்கும். ஆள் நடமாட்டம் குறைந்துவிட்டால் பாட்டிக்கு சாப்பிடும் சுவாரஸ்யம் போய்விடும். மெல்லுவதை நிறுத்திவிட்டு கூஜாவைத் திறந்து வென்னீரை இரண்டு மிடறு குடித்துவிட்டு மூடிவைப்பாள். முக்காட்டை இழுத்து மேவாயைத் துடைத்துக்கொள்வாள். உள்ளே உட்கார்ந்த வாக்கிலேயே திரும்பிப் பார்ப்பாள். யாரும் வரவில்லையெனில் பேசாமல் இருப்பாள். வர ஆரம்பித்தார்களோ, கை தானாகவே சம்புடத்தினுள் நுழையும். வெளிவரும் கையிலிருந்து எள்ளுருண்டையோ, தேன்குழலோ வெளிப்பட்டு அவள் வாயினுள் செல்லும்.


குழந்தைகளைப் பார்த்துவிட்டால் அந்தக் கிழவிக்கு மேலும் உற்சாகம் பிறந்துவிடும். கொஞ்சம் கூட லஜ்ஜை இல்லாமல் பாத்திரத்தை சப்தமெழக் குலுக்கி ஒவ்வொன்றாய் எடுத்து வாயில் போட்டுக்கொள்வாள். நான் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டே இருப்பேன். எனக்குதான் இது ஆச்சர்யமே தவிர, அங்கிருந்தவர்களுக்கு இது பழக்கப்பட்ட ஒரு காட்சி போலிருக்கிறது. யாரும் லட்சியம் பண்ண மாட்டார்கள். உள்ளே போகும் பொழுதும், வெளியே வரும்பொழுதும் கூடுமான வரை சின்னத் திண்ணையை ஒட்டியபடியேதான் சென்றார்கள். யாரும் அந்த பெரிய திண்ணையில் அமர்ந்து நான் பார்த்ததில்லை.

திண்ணையின் கடைசி ஓரத்தில் கல் இயந்திரம் ஒன்று பதிக்கப்பட்டிருக்கும். பாட்டி பல சமயங்களில் அதில் உட்கார்ந்து அப்பளத்திற்கு உளுந்தோ அதிரசத்திற்கு மாவோ திரித்துக்கொண்டிருப்பாள். உள்ளே சென்றுவிட்டாலோ அறையிலிருந்து பட்சண மணம்தான் வெளியே வரும். மிருதங்க வித்வான் ஜாகைக்கு முன் ஜாகையில் சமஸ்கிருத பண்டிதர் குடியிருந்தார். ஆச்சார ஸ்ரேஷ்டர். விசுக் விசுக் என்று பாதம் பூமியில் பரவாமல் நடந்து செல்வார். சமயங்களில் பாட்டி திண்ணையில் இருக்க மாட்டாள். அந்த நேரங்களில் மட்டும் பஞ்சகத்திற்கு கீழே இரண்டு பாதங்களும் தரையில் படியும். காஷ்டிக மௌனி எங்கே என்று என்னைக் கேட்பார். அதன் அர்த்தம் வெகு நாட்கள் வரை எனக்கு விளங்கவில்லை. மற்றபடி யாரும் அந்த ஊமைப் பாட்டியுடன் சைகை மூலம் கூட பேசி நான் பார்த்ததில்லை. எல்லோரும் கூடுமானவரை அவளை விட்டு ஒரு அடி தள்ளியே ஒதுங்கி இருந்தனர். அந்தப் பாட்டி எப்பொழுதாவது நிமிரும் பொழுது நான் பார்த்து புன்னகைப்பேன். 'சௌக்யமா?' என்பது போல் தலையாட்டி அபிநயம் பிடிப்பேன். பதிலுக்கு எந்த ஒரு உணர்ச்சியும் காட்டாமல் வெடுக்கென்று திரும்பிக்கொள்வாள். மனிதர் இருப்பதையே லட்சியம் பண்ண மாட்டாள். அந்த முசுட்டுக் கிழவியின் அலட்சியத்தால் நானும் அதிலிருந்து புன்னகைப்பதோ, நலம் விசாரிப்பதோ கிடையாது. ஆனால் அவள் மேல் உள்ள



படிப்பகம்

www.padippakam.com



ஆர்வம் மட்டும் குறையவில்லை. கூர்ந்து அவளை கவனித்துக்கொண்டேதான் இருந்தேன்.

''என்னடீ, இப்பல்லாம் உள்ள வர மாட்டேங் கற? நா என்னமா வாசிக்கக் கத்துனுட்டேன் தெரி யுமோ?'' என்று திரும்பி வீடு வரும் வழியெல் லாம் என் தங்கை அளந்துகொண்டுதான் வருவாள். ஆனால் என் கவனமும், சுவாரஸ்யமும் அந்தப் பட் சணப்பாட்டி மேல்தான். நாளுக்கு நாள் அப்புதிரை அதீத ஈடுபாட்டுடன் நோக்கலானேன்.

பெரிய திண்ணை முடியுமிடத்தில் இருந்த அறைதான் பாட்டியின் ஜாகை. வெல்லப்பாகின் மணமும், நெய்யில் பொறிக்கும் வாசனையும் அங் கிருந்து வெளிவந்து நாசியை நிறைக்கும். தயாரா கும் வாசனையை வைத்து பலகாரத்தின் தரத்தை நிர்ண யித்துவிடலாம். தீசல் வாடையோ, கருகிய நெடியோ, அவ்உள்ளிலி ருந்து வந்ததே இல்லை. கச் சிதமான கலவை; துல்லிய மான பக்குவம்; என் நாக் கில் எச்சில் ஊறும். வெட் கத்தை விட்டு ஒரு நாள், யாரும் இல்லாத நேரம் பார்த்து கைநீட்டினேன். ஒரு நிமிஷம் உறுத்துப் பார்த் தாள். பின் பாத்திரத்தை எடுத்து மறுபுறம் வைத் துக்கொண்டு திங்க ஆரம்பித் தாள்.

'அட அல்ப்பமே!' என்று நினைத்துக்கொண டேன். அவமானமாய்ப் போய்விட்டது. நல்ல வேளை யாரும் பார்க்க வில்லை என்று நிம்மதி அடைந்தேன்.

அன்று அப்படித்தான்.

சம்புடத்தில் சீடையைக் கொண்டு வந்து வைத்து விட்டு, கூஜா தண்ணீரை எடுத்து வர தன் அறைக்கு போயிருந்தாள் பாட்டி. நான் பார்த்துக்கொண்டி ருக்கும் பொழுதே, ராயர் வீட்டுப் பொடியன், ஒற் றைக் காலை இழுத்து இழுத்து வந்து மூடியைத் திறந்து, ஒரு கைப்பிடி அளவு அள்ளிவிட்டான். தண்ணீரை மொண்டு திரும்பியவள் இதைப் பார்த்துவிட்டாள். வேகுவேகுவென்று வந்தாள். ஓட முடியாமல் நின்றுகொண்டிருந்த பையன் கையிலிருந்து ஒன்று விடாமல் அத்தனை சீடைக ளையும் வாங்கினாள். ஒரு எட்டு முன் வைத்து ஓங்கி வாசலை நோக்கி வீட்டெறிந்தாள் பாட்டி. மரத்தின் கீழ் இலந்தைப்பழம் உதிர்ந்திருப்பதைப்



படிப்பகம்

www.padippakam.com

போல் அத்தனை சீடைகளும் வாசல் மண்ணில் விழுந்து கிடந்தன. பையன் பின்னாலேயே வந்து விட்டராயர் சம்சாரத்தின் முகம் அவமானத்தால் சிறுத்துவிட்டது. மூக்கு நுனி துடிக்க கண்ணில் நீர் துளும்பி விட்டது.

''நொண்டிச் சனியனே, நீ செத்து ஒழியப்ப டாதா? தினமும் உனக்கு கூட கூட இருந்து எல் லாம் பண்றதுக்கு நீ இந்த அசிங்கத்தை வேற எனக்கு தேடித்தரணுமா? நாக்கு அத்தனை அலை யறதோ? இந்தக் கைதானே நீண்டது? வா, இதுக்கு இண்ணக்கி ஆக்கினை இருக்கு!'' என்று கரித்துக் கொட்டிக்கொண்டே, தன் எட்டு வயது பிள்ளை முதுகில் நாலு சார்த்தி தரதரவென்று இழுத்துச் சென்றாள். அவள் போட்ட கூச்சலிலும், பையன் வலி தாங்காமல் அலறிய அலறலிலும் அத்தனை ஜாகையிலிருந்தும் வந்துவிட்டார்கள்.

எதுவுமே நடக்காதது போல் அந்தக் கிழவி பாட்டுக்கு மும்முரமாய் சீடை சாப்பிட்டுக்கொண் டிருந்தாள். யாரும் எதுவும் பேசவில்லை. அவர வர் வந்த வழியே திரும்பிச் சென்றனர். மிருதங்க வித்வான் மனைவி என்னை உள்ளே வந்துவிடும் படி ஜாடை காட்டி அழைத்துச் சென்றாள்.

அன்றுதான் இந்தக் கிழவி பற்றிய பல செய்தி கள் எனக்குத் தெரிய வந்தன. அந்த அம்மாள் தனக் குத் தெரிந்ததை, தான் கேள்வியுற்றதை எல்லாம் கோர்வையாய் சொன்னாள்.

அந்த பட்சணப் பாட்டியின் பிறந்தகம் பரம ஏழைக் குடும்பமாம். ஏழை பிராமணனுக்கு ஏழும் பெண்கள். கேட்க வேண்டுமா? வறுமை; கால் வயிற்றுக்கே கஷ்டம். ஏழில் மூத்தவள்தான் இந் தப் பாட்டியாம். இப்படிப்பட்ட ஏழைப் பெண்க ளுக்கென்றேதான் தாரமிழந்த பணக்கார மாப்பிள் ளைகள் இருப்பார்களே; ஐம்பது வயதைக் கடந்த ராமமூர்த்தி அய்யர், பதினோரு வயது கூட நிரம் பாத பாலம்மாவை (அந்தப் பாட்டியின் பெயர் அதுதான்) பெண் கேட்டு வந்தார். தன் வயதை விடவும் மூத்த அந்த மாப்பிள்ளைக்கு தன் மக ளைக் கொடுக்க இவள் தகப்பனாரும் சம்மதித்து விட்டார். அவர் வறுமை நிலை அப்படி. மாப் பிள்ளை கொடுப்பதாய் சொன்ன ஐஸ்வர்யத்தை வைத்து, மற்ற பெண்களையும் கரையேற்றி விட லாம், ஆயுள் முழுதும் மூன்று வேளையும் நிம்மதி யாய் சாப்பிடலாம் என்று அந்த ஏழை பிராமணத் தகப்பன் கணக்குப் போட்டார். தன் பெண்ணிடம் நைச்சியமாய் பேசி சம்மதிக்க வைத்தார்.

'கொழந்தே, நீ அந்த மாமாவைக் கலியாணம் பண்ணிண்டியானா மூக்குத்தி, கம்மல், ஒட்டியா ணம், அத்தனையும் வைரத்தாலேயே போட்டுக்க லாம். நீள ஜடை பின்னி, நுனில குஞ்சம் வச்சுக்க லாம். பட்டுப் பாவாடையும், வெள்ளிக் கொலுசும் போட்டுக்கலாம். முக்யமா உனக்குப் பிடிச்ச நெய் முறுக்கு, அதிரசம், தேன்குழல், சீடைன்னு, தின மும் விதவிதமா சாப்பிட்டு சந்தோஷமா இருக்க லாம். என்ன?'' என்று தகப்பன் கரைத்த கரைப்பில் அந்த பாலகி சம்மதித்துவிட்டாள்.

எல்லா ஏற்பாடும் வெகுவேகமாகப் நடந்தே றின. தெருவடைத்துப் போடப்பட்டிருந்த பந்த லில் ஜாம்ஜாமென்று கல்யாணம் நடந்தது. தகப்ப னார் மடியில் அமர்ந்து மங்கலநாணைக் கழுத்தில் ஏற்றுக்கொண்டாள். மடிசார் கட்டும், மாமன் தோ ளில் அமர்ந்து மாலைமாற்று வைபவமும், கண் ணூஞ்சலும், நையாண்டிச் சிரிப்புமாய் குழந் தைக்கு ஆனந்தமாய் பொழுதுபோயிற்று. பால்ய விவாகமும் முடிந்தது. பெரியவளாய் ஆனபிறகு, மற்ற சடங்குகளை செய்வித்து புக்ககம் அனுப்பு வதாய் ஏற்பாடு.


கலியாணம் முடிந்த உடனேயே இவள் வீட்டு வறுமையும் ஒழிந்தது. சுபிட்சம் மலர்ந்தது. எல் லாம் நல்ல விதமாய் போய்க்கொண்டிருந்த வேளையில்தான் அச்செய்தி வந்தது. ஆற்றில் குளிக்கப் போன மாப்பிள்ளை ஆற்றோடு போய் விட்டார் என்று செய்தி வந்தது. சர்க்கரை படித்து றையைத் தாண்டி, மேலக்காவேரியில்தான் பிரே தத்தைக் கண்டுபிடிக்க முடிந்தது. பெற்றோர் இடிந்து நின்றனர். காரியம் முடிந்தது. குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. கணவன் இறந்து போனது அதன் மனதைப் பெரிய அளவில் பாதிக் கவில்லை. முகம் கூட சரியாகப் பதியாத அந்த ஆடவனின் இழப்பு எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்ப



படிப்பகம்

www.padippakam.com

டுத்தவில்லை. ஆனால், தான் ஆசை ஆசையாய் கனாக் கண்ட பட்டும், பளபள ஆடைகளும் உடுத்த முடிய வில்லை. நகையும் நட்டும் அணிய முடியவில்லை. தழைய தழைய பின்னி பூமுடிக்க முடியவில்லை. தலையை மொட்டையடித்து, நகை களை உருவி, காவி உடுத்தி இந்தக் கோலத்திற்கு ஆளாகிவிட்டோமே என்ற மனக்காயம் மட்டும் ஆறவே இல்லை.




மிருதங்க வித்வான் மனைவி தன் உள்ளிற்கு அழைத்துச் சென்று, அந்தப் பாட்டியைப் பற்றி கதை கதையாய் அத்தனை சொன்னாள். பால்ய விதவையாய் இந்தப் பாட்டி ஆனதால் அழிந்தது அவளது வாழ்க்கை மட்டும்தான். கணவ னின் திரண்ட ஐஸ்வர்யத்திற்கு ஏக அதிபதி ஆனாள் அச்சிறுமி. அதைக் கொண்டு அவள் பெற்றோர் மற் றைய பெண்களுக்கு நல்ல இடத் தில் சம்பந்தம் செய்தனர். பாட் டிக்கு மிஞ்சியது, அவள் பெய ருக்கு நிலைத்தது அந்த பச்சையப்ப முதலித் தெரு நான்கு கட்டு பெரிய வீடு மட் டும்தான். எட்டுக் குடித்தனம் உள்ள அந்த வீட்டி லிருந்து வரும் வாடகையை வைத்துத்தான் அவள் ஜீவனம்.

பெரியோரைக் கண்டால் தன் பெற்றோரை நினைத்து வெறுப்பு; சிறு குழந்தைகளைக் கண் டால் தனக்குக் கிடைக்காதது இவர்களுக்கு மட் டும் கிடைத்துள்ளதே என்று வெறுப்பு; தெய்வத் தைக் கண்டால், தன்னை இந்த கதிக்கு ஆளாக்கி விட்டதே என்று வெறுப்பு. உறவு என்று ஒருவரை யும் நாடவிடாமல் அத்தனை பேரையும் விரட்டி அடித்துவிட்டாளாம். தன் தகப்பனார் ஆசை காட்டி, என்னென்னவோ அனுபவிக்கலாம் என்று உத்தரவாதம் அளித்து, சம்மதிக்க வைத்த கல்யா ணத்தினால், அவள் ஏற்கனவே இருந்ததையும் இழந்ததுதான் மிச்சம். ஒன்றே ஒன்றை மட்டும் தான் அவளால் ஆசை தீர செய்ய முடிந்தது. இஷ் டத்திற்கு சாப்பிடுவது. அதைத்தான் செய்து கொண்டிருக்கிறாள்.

அந்த மாமி சொல்லச் சொல்ல, அந்தப் பாட் டியின் மீது எனக்கு வெறுப்பு மறைந்து அந்த மாமி சொன்ன ஒரு விஷயம் என்னைத் தூக்கிவாரிப் போட்டது. அந்தப் பாட்டி ஊமை இல்லையாம். மனிதர் மீது உள்ள வெறுப்பில் யார் கூடவும் வரு டக்கணக்காய் பேசுவதில்லையாம்.

எனக்கு மகா ஆச்சர்யம். என்ன ஒரு கோபம்; என்ன ஒரு வைராக்கியமான ஆங்காரம். உலகில் உள்ள எல்லோரும் ஓர் அணி. எதிரில் இவள் மட் டும் தனி. ஆனாலும் துளியும் பயமில்லாமல் என்ன அலட்சியம். சட்டை செய்யாத, புறங்கையால் ஒதுக்கித் தள்ளும் நெஞ்சுரம்.



படிப்பகம்

www.padippakam.com

''அந்தப் பாட்டி த்ன் உள்ளில் சுவாமி படங்கள் வச்சிருக்கா தெரியுமோ? விளக்கேற்றியதில்லை. விழுந்து கும்பிட்டதில்லை. பூவோ, படையலோ எதுவும் கிடையாது. நா ஒரு தடவை ஒளிஞ்சிருந்து கவனிச்சேன். பலகாரம் பண்ணின உடனே சம்பு டத்தில் கொட்டி படத்திற்கு எதிரில் அமர்ந்து, நைவேத்தியம் பண்ணாமல் அந்த படங்களைப் பார்க்க வைத்துதான் ரெண்டு எடுத்து வாயில் போட்டு மெல்வாள். அதில் ஒரு அல்ப திருப்தி இந்தக் கிழவிக்கு.

அடுத்ததுதான் இருக்கவே இருக்கு நிலைப் படி ஓர இடம். போறவர்ர இடத்தில், குழந்தைகள் விளையாடற இடத்தில் உட்கார்ந்துண்டு, பாக்க வச்சு, பழிப்பு காட்டி திங்கற கண்றாவி. இது எங்க ளுக்கு பழகிப் போயிடுத்து. நாங்க இதை பெரிசா எடுத்துக்கறதில்லே. நீ புதுசில்லே. போகப் போக சரியாய்டும்!'' என்றாள் மிருதங்க வித்வான் மனைவி.

இப்படி கூட ஒரு மனுஷிக்கு தீராத கோபம் இருக்க முடியுமா என்று பட்டது எனக்கு. எத்தனை ஜென்மத்திற்கும் தீர்க்கக்கூடியது அல்ல. இது என் றும் பட்டது மறு நிமிடமே.

அந்தப் பாட்டியிடம் அன்பு செலுத்தி, தோழ மையுடன் நாலு வார்த்தை பேச வேண்டும் போல் பட்டது எனக்கு. அதற்கெல்லாம் அவள் இடங் கொடுக்கவே இல்லை. யாரும் நெருங்க முடியாத தொலைவு அவள் விலகிச் சென்றுவிட்டது எனக்கு கொஞ்சம் கொஞ்சமாய் புரிய ஆரம்பித் தது.

அந்தப் பாட்டியைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆசைதான். அதற்குள் என் தங்கைக்கு சைக்கிள் கற்றுக்கொள்ள ஆசை வந்துவிட்டது. மிருதங்கத்தைத் தூக்கி மூலையில் கடாசி விட் டாள். புதிய கட்டை சைக்கிளும், அப்பாவிடம் அழுது வாங்கிவிட்டாள். அத்தோடு பச்சையப்ப முதலித் தெரு தொடர்பும் விட்டுப்போயிற்று. இருபத்தி ஐந்து வருடம் கழித்து இப்பொழுதும், தீபாவளி, கோகுலாஷ்டமி என்று முறுக்கும், சீடையும், அதிரசமும் செய்யும்பொழுது அந்த முக்காடு பாட்டியின் ஞாபகம்தான் வருகிறது எனக்கு; கூடவே கண்ணீரும். பாவம் அவள்.

## கவிதை

புகை பிடித்துக்கொண்டே<br>டீ குடித்துக்கொண்டிருக்கிறோம்<br>நீயும் நானும்<br>சத்தமில்லாமல்

விட்டை போட்டுக்கொண்டே<br>மோளுகிறது<br>கழுதை<br>முன் விட்டைக்கும்<br>பின் விட்டைக்கும்<br>வேறுபாடுகள் உண்டா?

இன்னும் ஆய்வுக்கு<br>எடுத்துக்கொள்ளப்படாத<br>தலைப்புதான்

மஞ்சள் சிவப்பு என<br>விதவிதமாய்<br>பூத்துக் குலுங்குகின்றன<br>மரங்கள்<br>நிறம் பார்த்தா நிழலுக்கு ஒதுங்குகிறோம்<br>நிழலுக்கு நிறமுமில்லை<br>தருவதில் பேதமுமில்லை

இருந்தும்<br>ஒலி<br>திரும்பும் வேகம் கணிக்கத் தவறிய<br>வெளவால்<br>தடையில் மோதி<br>தரையில் விழுந்து<br>செத்திருக்கும்

இந்நேரம்<br>கடலும் கரையுமாய்<br>இயல்பாக இருக்கிறது<br>நாடு<br>டீ குடித்துக் கொண்டே<br>புகை பிடித்துக் கொண்டு<br>நானும் நீயும்!

வெள் உவன்



படிப்பகம்

www.padippakam.com

# பனிமலரிடையே தேவதையைக் கண்டேன்

மா.கி.கிறிஸ்ரியன்
[பிரான்ஸ்]

*சிறுகதை*

மார்கழி மாதத்துக் குளிர் உடம்பெங்கும் ஊசியாய்க் குத்திய வலியை வாய்விட்டுச் சொல்ல முடியாது திணித்திருந்தது. உடலின் உதறலைவிட உள்ளத்தில் பதித்திருந்த நினைவின் கனப்பில் பதறல் பல மடங்காய் நிலைத்திருந்தது! எந்த நினைப்பு என்பதை எறிதல் - பகர்தல் பண்ணிக்க முடியாத சவப்பிணமாய்த் தனித்திருந்தான்!

அந்தத்தனித்திருப்பின் சாமத்தின் நினைப்புக்குச் சொந்தக்காரி தாய் நாட்டிலிருந்து பிரஞ்சு நாட்டிற்குள் எப்படி வந்தாள்? கேள்விக்குள் - கேள்வி முடங்கிவிடப் பதிலின் அனுமானத்தில் திடமானம் கொள்ள முடியாத சாமத்தில் மேலும் பக்கத்தில் கிடந்த உருவத்தின் உசப்புதல் பகிர்தலைப் பங்கு போடும்படி கேட்பதாக மௌனபதத்தில் புலம்பிடும் குழப்பத்தில் மேலும் அவன் பிணம் போல் அரவமற்றுச் சாய்ந்திருந்தான். தனிமையில் இனிமை தேடும் சூன்ய இருளில் வெறுமையான வேதனைதான் அவன் உடம்பெங்கும் உருவெடுத்தது! யார் அவள்?

சணல் முடி மாதுகள் கனவிலும் அண்ட முடியாத அழகுக் கடல் அவள்! நினைவில் கட்டிலில் உறங்கும் வெள்ளை மாது அருகினில் உறங்க எங்கிருந்து அந்தப் புழுதிமண் தேவதை நட்சத்திரங்கள் இடையே ஜொலித்தாள்? என்னூர் நிலவு எப்படி இங்கு நீந்துகிறது?

சவமாய் இருந்த உடலில் உணர்வால் உயிரூட்டி கனவா - நனவா இரண்டுக்கும் இடையே தவிக்கும் மனிதமாய் எழுந்து ஜன்னல் கண்ணாடி வழியே கண்களை எறிந்தான்! பனிமலர்கள் மேலாய் தனிமலராய் வெண்ணிறத்தை விழுங்கிய கண்ணிலிருந்து நிஜத்தின் நில்லடி நிறுத்தும் மெல்லடியில் தவழ்ந்து சென்றாள். வியப்பில் அவன் முகத்தில் அடி! நிதானத்தில் வாய் புலம்பிட கண் இமையெழுப்பி மீண்டும் அந்தப் புழுதிமகளை பனிமலர்கள் மேல் காண்கிறான்!

அவனையறியாத இருள்மயக்கம் இழையோடி நரம்பெல்லாம் இரத்தம் உறைந்து விறைத்து விதவிதமான சுகமொன்று வியாபித்திருந்தது! கட்டிலில் கிடந்த வெள்ளை உருவம் : போர்வைக்குள் ஆழ்ந்த உறக்கத்தில்! அவன் இருவிழிப் பார்வை நோக நோக்குதல் வலியை விலத்தி மொழியைக் கவிதையில் பொழிந்தான்...



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் புழுதித் தேவதை பனிமலர்களை அள்ளியெடுத்து உருண்டை பிடித்து எறிந்து விளையாடுகிறாள். இத்தருணத்தில் ஏனிந்தக் கோணத்தில் கோலம் போடுகிறாள்? அவனை உசுப்பும் கவிதைக்குள்ளிருந்து நெருப்புத் தகிப்பு. பனிக்குளிரைத் தூக்கி எறிந்துவிட்டு கட்டிலில் கிடக்கும் வெள்ளை மாதைப் புறந்தள்ளிவிட்டு தன் தேகம் பலம் கொண்ட துணிவேறுதலோடு ஜன்னல் கதவைத் திறந்து அலாதியான மௌனப் பரபரப்போடு அவளைத் தேடினான்! தெரு விளக்குகள் புழுதிமகளைத் தூக்கிக்கொண்டொளித்தன ...! விழிகள் வழி நெடுகே குறித்தான். நேர்கோடு தடுமாற உயிர் உருகினான். அவனிடமிருந்து பறித்துப் போனவர்கள் தெரு விளக்குகள்தான். மீண்டும் அந்த நிலவு இந்த வாசத்திற்குள் வந்து வசமாகும்... உணர்வு உதறுகின்றது. ... உறுப்புகள் பதறுகின்றன. அவன் பார்வை தெய்வம் தந்துவிட்டுப் பறித்துக்கொண்ட துக்கத்தைச் சுமந்தது. காமாந்த உணர்வைப் புறந்தள்ளி புனிதமான காதல் சொர்க்கத்தின் மிதப்பில் மிதக்கின்றது ... விளக்க முடியாத பிரியத்தின் வெளிப்பாட்டைச் சொல்லிவிடத் துடிக்கின்றது. அவள்-அந்தப் புழுதிமண் தேவதை எங்கே? யார் அந்தத் தேவதை? சொர்க்கத்தில் சிக்காது தவிக்கும் சொர்க்கத் தீவின் அழகிய சின்னத் தீவின் கடல் தேவதைகள்!

அந்த ஊர்க் கடல் அன்னை மிக மிக அமைதியாக, அழகாக இருந்தாள் ... சில சமயங்களில் பேரலைகளின் மடக்கடிச் சத்தம் அந்த ஊரை விழுங்கி விடும் பேரதிர்ச்சியைத் தோற்றுவிக்கும்! கெடுதல் இருந்ததில்லை. இந்த அலைகடல் தாலாட்டில் தான் அவள் தோன்றினாள். 26 மார்கழி 2004 காலை ஒன்பது மணிக்கு பேரதிர்ச்சியின் பேரிடி உலகோர் தலைகளில் விழுந்தது. சுனாமி ஆழிப்பேரலை நொடிப் பொழுதில் பொங்கி எழுந்து நெய்தல் நிலத்தையே காவுகொண்டுவிட்டது! அந்தப் பேரலை விழுங்கிய பெண்கள் இந்தப் பனிமலர் தேசங்களில் தேவதைகளாக திரிகின்றார்கள். காதலர்களைத் தேடுகின்றார்கள். உண்மையைத் தவிர வேறுயில்லை! மௌனடைப்பில் நெஞ்சை அவன் பொத்திக்கொண்டான்; அன்பானவளை வாஞ்சையோடு வாரிக்கொண்டவன் குழந்தையைப் போன்ற ஊரவள் - உப்புக் காற்றில் - நீரில் கறுத்த அழகு ஊர் பட்டுமணல் கலரில் காட்சி அளித்த மென்தளிர்மேனியவள் - புனிதவதி - அவள் புனிதத்தை பக்தியோடு பண்ணிசைத்திடும் பவித்திரப் பேழையவள்; அந்தப் புண்ணியவதி தான் புனிதவதி! அவள் இந்தச் சுனாமி பேரலைக்குள் அகப்பட்டு இங்கு வந்தாளா? சுனாமிக்குப் பிற்பாடு கடல் தேவதைகள் அலைவதாகக் கண்டங்கள் சொல்கின்றன! அந்த உச்சிபிளந்தடி நினைவிற்குள் அவன் அனலிடைப் புழுவெனத் துடித்தான். முடிவெதுவெனப் பின் பாரும் ... காதலாலும் கசிந்துருகும் பார்வையாலும் அவள் - அவனுக்கு அபரீதப் பெண்ணாக, அதிசயப் பிறப்பாக, தேவதை வார்ப்பாக அவனை ஆட்கொண்ட நெய்தல் மகள்; அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் - அந்தப் புனிதவதியின் அன்பை உடைக்க அமெரிக்கனின் அணுகுண்டாலும் முடியாதென வளர்ந்த காதல்!

அவளைக் காண மணற்பரப்பில் கால்கள் புதைய நடந்து வீதியேறி குச்சொழுங்கைகள் வழியே தனிக்காட்டு ராஜாவைப் போல் மான்மகளின் தரிசனம் காணக் காலை - மாலை நேரம் தப்பாது போவான் ... அவனிருப்பது அயல் ஊர். அவள் குடும்பம் பற்றிய விசாரிப்பு - தகப்பன் - தமையன்மார் பற்றிய பயபீதி கிஞ்சிற்றும் அவனிடம் இருக்கவில்லை! அவள் இனிய காதல் நெஞ்சே நிறைந்திருந்தன தஞ்சம் அவள் தரிசனம்; வேலிகளை அலங்கரித்து நின்ற ஊதா - நெந்நிறக் கடதாசிப் பூக்கள்கூட அவனுக்கு நறுமணத்தை வீசி நின்றன; பூவரசம் இலைகள் எல்லாம் சுருண்டு புல்லாங்குழல் இசை வழங்கின ... சண்டி இலைகள் சாமரம் வீசி நின்றன - செவ்வரத்தம் பூக்கள் தேன் மழை சொரிந்து வண்டை வரவேற்றன. வீட்டு நாய்களும் மோப்பம் பிடித்து காதல் மகளிடம் வாலை ஆட்டி - கால்களை உயர்த்திகாதலன் வரவின் ஆனந்தக் களிப்பினில் துள்ளித் துள்ளி ஓடுங்கள். காற்றிலே மாலை நேரத்து இன்ப கீதம் தவழ்ந்து இருவர் காதுகளுக்குள் ரீங்காரமிடும் - இவை அனைத்தும் காதலர் இருவருக்கும்தான் வெளிச்சம்.

இப்பேரானந்தத்தோடு இருவர் வீட்டாரையும் நோக்குங்கால் ...!



படிப்பகம்

www.padippakam.com


புனிதவதியின் வீட்டார்! சைவமா? பேதமா? எனும் வேதத்தை ஊதியே வாதம் புரிந்தனர்! அவன் வேதக்காரன் - அவள் சைவக்காரி - எங்கே இந்த ஆகம விதி வினையாகி வந்தது? புனிதவதி கண்ணீரைக் கடலாக்கினாள் - அவன் புன்னகையைப் பதிருக்குள் புதைத்தான் ... அவன் வீட்டார் எப்படிக் கத்தோலிக்க மதத்தில் பிடியாக இருந்தார்களோ! புனிதவதியின் வீட்டார் சாமி குடும்பம் என்று ஊரார் பட்டம் சூட்டி அழைக்கும் இந்து மதத்தில் ஊறித் திளைத்திருந்தனர்; காதல் முன் இத்தடைகள் கணத்தினில் உருத்தெரியாமல் மறைந்து விடும்.

நெஞ்சில் பள்ளி கொண்டவள் கோடி முத்தங்களை அள்ளி அள்ளி இனிய புன்னகையால் தந்தவள்; அந்தத் தேவதையை நினைத்து ஏங்கியபடி விமானம் ஏறிப் பறப்பதற்கு ... காதலின் நினைப்பைச் சுமந்த நிதானத்துடன் கொழும்பில் நின்றான்!

காதல் போராட்டம் கனவுகளற்ற நனவினில் கனநாட்களாக நீடித்தது. காதலாலும் - பெற்றோர்களின் கட்டாயத்தாலும் புனிதவதியை ஊரில் விட்டுவிட்டு சிங்கள நாட்டுத் தலைநகர் கொழும்புக்குள் வந்து விட்டான்!

'காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடும் நாளே
இனிய நன்நாள் அதுவரை
உன் நினைவே பரமபதம்'

பேரினவாதப் பேய்கள் தமிழினத்தைக் கொடுமையாக மிதிக்கத் தொடங்கினர்; தமிழீழப் போராட்டம் உச்சத்தின் அகோரத்தில் அனர்த்தங்



களாலும் - அகதி வெளியேற்றங்களாலும் சின்னாபின்னாப் பட்டுக்கொண்டிருந்தது! அவன் - அவள் இதயம் பிளந்திடும் இன்னல்படும் காலம் ...'அவனால் கொழும்பிலிருந்து புனிதவதியுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை! அவனது நிர்க்கதிக் கோலம் பார்க்கக்கூடிய விதமற்று ரகம் மாறிக் கிடந்தது! பார்வதியைப் பிரிந்த தேவதாஸின் கோலவடிவத்திலும் தோன்றத் தொடங்கினான்! எந்த நேரமும் இழப்பின் கொந்தளிப்பின் தாக்கத் தகிப்பில் இருந்தான் - நின்றான் - நடந்தான் - ஓடி ஓடி கொச்சிக்கடை புனித அந்தோணியார் படிகள்



படிப்பகம்

www.padippakam.com

ஏறி மொழுகுத்திரி கொழுத்திவிட்டு அந்த மொழுகுத்திரி அழுவது போல் அழுதான்; புனிதவதி கனவிலும் நனவிலும் அவனைச் சித்திரவதைப்படுத்திக்கொண்டிருந்தாள். இதயத்தை இழந்த அலறல் அதிவேகப் பாய்ச்சல் பாய்ந்தது. புனிதவதி நல்லவள் - தூய்மையானவள், காதலுக்குக் களங்கம் ஏற்படுத்தக்கூடியவளல்ல! அன்பான காதலை இதயத்தில் ஆழமாகப் பதித்தவள்; உணர்ச்சியின் உந்தலை மௌன சங்கீதத்தில் சங்கமமாக்கிய அற்புதப் பேழை; மூலிகையைத் தேடும் பிணியாளனைப் போல் அவள் அன்பைத் தேடினவன் எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாத மனநோயாளியாக மாறிவிட்டான்! மேலெழுந்த விமானத்தின் வேகம் எந்தளவோ அதையும் மீறிய வேகமாய் அவன் மன ஓட்டம்; தனித்துப் போன மன உளைச்சலில் நொடிக்கொரு தடவை வெடி போல் சீறத் தொடங்கினான்! தன்னை விட்டு புனிதவதி பறந்துபோய் விட்டாளா? கூவிய குயில் காவியக் காதலை அறுத்துப் போய்விட்டதா? நடக்கும் போராட்டத்தில் வெடிதாங்கிப் போய் விட்டாளா? தமிழீழத்தை நேசிப்பவள் அதிகம் யாசிப்பவள் எப்படிப் போவாள்! எப்படிப் பாடுகளைப் பாடுவேன்? இப்படியே வெந்து துடிக்கும் உணர்வில் விமான இருக்கையில் உயிரற்ற பிணமாய் கண்கள் பிதுங்கி இருந்தான்...

புனிதவதியின் பரிச்சயம் போராட்டக் காலத்தில் அகதி முகாம் ஒன்றில்தான் தரிசனம் பெற்றவன். துன்பங்களையும் - துயரச் சுமைகளையும் - ரணங்களையும் சந்தித்த வேளையில்தான் புனிதவதியைச் சந்திக்க வைத்துக் காதலின் சுவைபடு துன்பயின்ப சுழற்சிக் கிளர்ச்சிகளை அனுபவித்து இன்பவுலகத்தைக் காட்டிக் காட்டி கிறிஸ்துவின் கற்றூண் காட்சியைக் கொடுத்தது! புனிதவதியின் பார்வைப் பிரியத்தினால் அவன் இன்பவுலகத்தில் பறந்தவன்; அவளின் அகத்தின் காதல் முகத்தில் பிரதிபலித்திருந்தது - அந்த அற்புதப் பேரழகின் வதனம் இவன் என்னகத்தில் கல்லோவியமாய் பதியப்பட்டுள்ளது; எங்கு போனாலும் அழித்துவிட முடியாது! அவனின்றி அவளில்லை - அவளின்றி அவனில்லை.

இன்று வேறின்றி காலத் தச்சனின் காலக் கட்டாயத்தால் வான்பரப்பில் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறான் ... புனிதவதியின் நேசிப்பின் மீதான காதல் வெல்லும் எனும் யோசிப்பில்.

எங்கெங்கு அலைந்து அங்கங்கு எல்லாம் மூத்த குடிமகன் கண்கள் குளமாக இதயம் ரணமாக முகமிழந்த தமிழனாய் அவதியுற்று சமத்துவம் - சகோதரத்துவம் - சுதந்திரம் மூன்று உயர் தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் உயர் புரட்சியில் பூத்து கலைகளின் நிலையில் உன்னதமான உயர்ந்த நாடான பிரான்சில் தஞ்சமடைந்தான் ...!

அன்னை நன்நாட்டின் மக்காள்! ஏகுவம்

மன்னு புகழ் நாளிதுவே!

நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்

நாட்டினார் உதிரக் கொடிதனை!!

பிரான்சின் தேசிய கீதத்தின் சில அடிகளை உச்சரித்தபடியே தஞ்சம் கோரினான். அவர்கள் ... அகதியென்று அடையாளமிட்டு முத்திரை பதித்தனர். உலகில் மூத்த குடி எனும் பெருமைக்குச் சூட்டிய அழியாத பெயர்.

காலங்கள் அலை போல் ஓடின ... அடித்துக் கொண்டும் இருந்தன! சூரியன் உதிக்கும்போது நட்சத்திரங்கள் தங்கள் ஒளியை இழந்துவிடுவது போல் ... விடிந்துவிட்ட - விழித்துவிட்ட கனவின் நாளுக்கான உணர்வுகள் - உடலையும் மனதையும் வந்தடையும்போது கனவுகள் தங்கள் பிடியை விலக்கிச் செல்கின்றன! இதன் காரணத்தால் கண்ட கனவுகள் நிலைப்பதில்லை, மறந்துபோகின்றன. அவன் கண்ட கனவுகள் பல்லாயிரமாகும்! இந்த நிலை பெற்றிருந்ததற்கு புனிதவதியின் நினைப்பை அவனால் மறக்க முடியாத நிலை தான்!

வெள்ளை மனைவியின் நேரடித் தாக்கத்தின் யோசிப்பில் எழும் கன்வுகள் காமாந்தக் கனவுகளாக உருவாவதற்கு அவளது செயல்பயம் காரணமாகிவிடுகின்றது அவனுக்கு. காலையில் மறந்



படிப்பகம்

www.padippakam.com

துபோற கனவுகளை வெள்ளை மனைவியின் நடை செயல் வாக்குவாதம் மதிப்பின்மை சேர்க்கை போக்கு நினைவுக்குக் கொண்டுவரும்! புனிதவதியின் பூமுகத்தை நோக்கியபடி ஏங்கப் பண்ணும்! அந்த நேரங்கள் அதிக காலம் அவனை வாட்டி வதைத்தன. இன்றும் அவன் நினைப்பறை யிலிருந்து அந்தத் தெய்வமகள் நீங்கவில்லை; அவள் என்னவானாள் என்ற தேடுதல் அவனை நாடுதல் கொண்ட இழப்பின் அலறலாகவும் - முடிவுறாக் கொந்தளிப்பாகவும் உள்ளது. இப்படியே இருவரதும் சந்திப்புக்கள் வருடங்களைத் தாண்டி விட்டன.

உணர்வுகளைச் சீண்டிய புனிதவதியின் பூமுகம் அவன் நினைவிலிருந்து நீங்கிவிட்டதா? அவளது கள்ளமற்ற சிரிப்பு கண்களிலிருந்து தெறிக்கும் மின்வெட்டு ஜொலிப்பு மறைந்ததா? கன்ன உச்சியிழுத்த கூந்தல் கட்டின் ஓவியப் பேரழகானவள் எங்கே?

நடு உச்சி தெறிக்க இரட்டைச்சடைப் பின்னல் தோளில் தொங்கும் அழகுத் தேவதை எங்கே? முழுகியபின் விரித்த கேசங்களின் நெளிவும் - வளைவும் அழகின் அழகே எங்கே? அந்தப் புன்னகைப் பூவரசி நனவிடை இன்பமே ...! கவிதைக்குள் கவிதையே புதையும்! அவள் ஊர் அந்தக் கடற்கரை ஓரம்தான் - அவள் வீடு அந்த அலை தொடும் இடத்தில்தான் - அவளது மென்பட்டுப் பாதம் புதைய நடை நடப்பது அந்த வெண்மணல் பரப்பில்தான் - புத்தொளிப் புன்னகையின் சலங்கை ஒலிச் சத்தம் ஒலிப்பது அந்த நெய்தல் நிலத்தில் தான் ... இந்தச் சுனாமி ஆழிப்பேரலை அவள் ஊரையே விழுங்கி ஏப்பமிட்டுவிட்டதே! ஐயகோ அந்தப் புனிதவதியைத்தான் இந்தச் சுனாமிப் பேரலை அள்ளிக்கொண்டு வந்து இந்தப் பனிமலர் தேசத்தில் தேவதையாக விட்டுள்ளது!

ஐயகோ! அவளது முகவசீகரத்தையும் பூமேனி தழுவும் பருவத்தையும் கண்டேன்! அவள்தான், அந்தத் தேவதைதான் எங்கே ... எங்கே என் தேவதை? மூன்றாவது மாடிச் சாளரத்தின் வழி தேம்பிய சத்தத்தையும் - நெஞ்சின் பதறலையும் கம்பளிப் போர்வைக்குள் கிடந்த வெள்ளை மனைவி கள்ளமாகக் கவனித்தாள். அடுத்த கணம் வள்ளென்று குரைத்தாள்; சாளரத்தை எப்படி அடிச்சுச் சாத்திய சுருக்கோடு பயநடுக்கத்தில் கட்டில் தலைமாட்டுச் சட்டத்தில் பிடரியை வைத்துச் சவமாய்ச் சாய்ந்திருந்தான் ... நித்திரையக் குழப்பியை வெப்பிசாரம் குறையாது! போர்வையை விலத்திய பார்வையோடு கடிந்துரைத்தாள்.

''ராஜா நித்திரை வராவிட்டால் கோலுக்கு போயிருந்து ரீ. வி. யப் போட்டுப் பாரேன்! செக்ஸ் படம் விழும்'' என்றவள் போர்வையை இழுத்துப் போர்த்தபடி பிரண்டு படுத்தாள். இச்சொல்லடியில் திக்குண்டு கனவுக்குள் விளையாடி புனிதவதி நினைவில் மேலும் வலியத் திணித்தாள். பண்பாட்டுப் பொட்டகம் இருட்டறையில் ஒளிச்சுடர் பாய்ச்சி நின்றாள்! அவனைக் கண்டு தலைகவிழ்ந்துபோனமகள்; சந்திக்கும் நேரங்களில் சிந்திய வார்த்தைகளில் சுடர்விட்ட சந்தோச கானங்கள் சிந்து பைரவியாக ஒலித்துக்கொண்டிருந்தன ... கைகளால் தீண்டாது உணர்ச்சிகளைப் புணர்ச்சிக்கு உட்படுத்தாத உளமகிழும் உன்னதமான உத்வேக வார்த்தைகளால் வசப்பட்டு வாழ்வில் வளம் பெறும் வாலிபக் கவிதைக்கு ஊற்று தந்த தெய்வத் திருமகள் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தாள்.

அந்த உத்தம நிலையை இந்தப் பிரஞ்சு தேசத்து பிரியமற்ற பிராணியிடத்தில் எப்படிப் பெற முடியும்? இந்தப் பிரஞ்சுப் பெண்ணை சொந்த மண்ணின் ரோஷத்தை விட்டு வரிந்து கட்டிக்கொண்டானா?

இந்தக் கதையையும் சொல்ல வேண்டும்!

ஆசைகள் செத்துவிட்டால் ஆட்டமும் அடங்கிவிடும். ஆசைகள் வெட்கம் அறியாது. ஆசைக்கு அளவேயில்லை. அந்தக் காலம் இளமையின் பருவவிரிப்பின் உச்சக் காலம். இக்காலத்து மனநோய் காமத்தின் உச்சியடிப்பில் நின்றாலும் துணை வேண்டி வேகமாகச்சுழலும்காலம். புனிதவதி எங்கிருக்கிறாள் என்ற அசுமாத்தம் கூட அவனுக்குத் தெரியவில்லை ... காலம் கடந்து செல்லச் செல்ல புனிதவதி எங்கிருந்தாலும் வாழ்க!



படிப்பகம்

www.padippakam.com

தனிமை அவனை வாட்டியது. இளமை அவனை விட்டுப் போய்க்கொண்டிருந்தது. முடிவை ஒரு சந்திப்பு நிச்சயித்தது ...

சஞ்சலப்பட்ட ரணத்திற்கு மருந்திட புளோறன்ஸ் அவன் கண்களில் பட்டாள்! அவன் வேலை பார்க்கும் சென் மிசல் (St Michel) றெஸ்ரோறன்ட் வாசலில் ...! சில நாளாய் புளோறன்ஸின் சிரிப்பு அவனைத் திக்குமுக்காடப் பண்ணியது; வாலிபன் தான் அவன்; கனவில் சஞ்சரித்த நினைவினில் கணப்பொழுதில் புனிதவதியை மறந்துவிட்டான்! அவன் மனவானில் புனிதவதி பறக்கிறாள் ... மறக்கத் துடித்து நினைத்து நினைத்து நொந்து மடிந்து புளோறன்ஸை அடிக்கடி சந்திக்கிறான்; ஒரு நாள்! இரவுக் கூடலில் இணைகின்றனர் ... நேரம் கைகூடிய கட்டிலறை ஆலங்கன நர்த்தனம் சித்தம் போல் சத்தமிட்டு அரங்கேறியது ... விடிகாலை விபரம் கேட்டது!

அன்றிலிருந்து பதிவற்ற தற்காலிக மனைவி! அவனோடுதான் கூடிவிட்டாள். முட்கள் இப்போது தப்பாகக் குத்துவதாக உணர்கின்றான்! காலம் கொஞ்சம் கொஞ்சமாகப் புனிதவதியிடமிருந்து பிடுங்கிவிட்டது ... முட்கள் குத்தும் வேதனை புளோறன்ஸின் வடிவில்! அவளது நடவடிக்கைகள் அவன் குரல்வளையை நெருக்கின்றன! சிக்காத சொற்களெல்லாம் புளோறன்ஸின் வார்த்தை முட்களாகத் தொண்டைக்குள் சிக்கி கோரணிய வாதனை செய்கின்றது! தாய்த் தரணியின் தாற்பரியம் இப்போது அதிகம் நிதானப்படுத்திப் புனிதவதியை அதிகம் பூஜிக்கப் பண்ணுகின்றது - அந்த அருந்தமிழ்ச் செல்வி எங்கிருக்கிறாள் என்ற தேடுதல் ஆசை இந்தச் சுனாமி ஆழிப்பேரலை காவுகொண்ட நாலு லட்சம் மனித உயிர்ப்பலியின் பின்னர் அவனுக்கு நிஷ்டூரத்தின் வியாகுலத்தை விதைத்துள்ளது ... தப்பிக்க முடியாத சங்கடத்தில் மாட்டிக்கொண்டவன்! புண்ணியவதியான புனிதவதியை அதிகமாக நேசிக்கிறான். நெய்தல் நிலத்தைக் காவுகொண்ட சுனாமி ஆழிப்பேரலையின் கொடூரத்தினாலும் நெக்குருகி அமுங்கிப்போனவன். அந்தப் பேரலை அள்ளி வந்த தேவதையைக் கண்ட அதிர்ச்சிக்குள்ளும் புனோறன்ஸின் பார்வையில் சடலமாய் மாறிவிட்டான்! உயிர்பெற்றிருப்பது பனிமலரிடையே தேவதையைக் கண்ட நேரம் ... ●

## கவிதை



மஞ்சள் வானத்தில்
கருப்புக் குழைவுகளின்
பதியன்கள்
சிரைத்துப் போட்ட
முண்டமில்லா தலைகளென
விரைகின்றன கழுகுகள்
தீயில் கருகிய
மாமிசத் துண்டென
எச்சிலூறப் பார்த்தன
பிணந்தின்னிகள்
கூந்தல் முடித்து
நேரெதிர் படுத்துறங்கும்
அழகு மாதென
விறைத்து நிற்கிறது
கவிகளின் பேனாக்கள்
காத்திருந்த காற்று
அத்தனையும் கலைத்து
கடந்துபோகிறது
முடியாமல் இருக்கும்
முதலிரவைப் போல்.

த. சுரபி.



படிப்பகம்

www.padippakam.com

# வங்காள கவர்னரைக் கொல்ல முயற்சி

வங்காளி மூலம்; கமலாதாஸ் குப்தா

தமிழில் ; சு. கிருஷ்ணமூர்த்தி

வரலாறு

இந்திய விடுதலைப்போராட்டத்தில் வங்காளிப் போராளிகளின் பங்கு யாவரும் அறிந்ததே. இருபதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளை வங்காளத்தின் அக்கினி யுகம் என்று சொல்லலாம்.

வங்காளிப் போராளிகளில் ஒருவரான கமலா தாஸ் குப்தா ரத்தோ 'அக்கடா' (இரத்த எழுத்தில்) என்ற தலைப்பில் தம் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். இதன் தமிழாக்கம் விரைவில் வெளிவரஉள்ளது. இந்த நூலிலிருந்து ஒரு சுவையான பகுதி இங்கு வெளியிடப்படுகிறது.

1932ஆம் ஆண்டில் மறுபடியும் சட்ட மறுப்பு இயக்க அலை வீசியது. கல்யாணி இந்த இயக்கத்தில் ஈடுபட்டுக் கைதானாள். அவளைப் பற்றி விசாரிப்பதற்காக இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவளுடைய வீட்டுக்குப் போனேன். கல்யாணியின் தங்கை வீணாதாஸ் செய்திப்பத்திரிகை படித்துக்கொண்டிருந்தாள். அவள் என்னைப் பார்த்ததும் புண்முறுவலோடு, ''கமலா அக்கா, உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும் ... நான் கவர்னரைச் சுட்டுக் கொல்ல ஆசைப்படறேன். நீ எனக்கு ஒரு ரிவால்வர் தர முடியுமா?'' என்று கேட்டாள்.

''ரிவால்வரா?''

''ஆமா, நான் சீரியஸாத்தான் பேசறேன். என்னை நம்பு?''

தீனேஷ் மஜூம்தார் வீணாவைத் தம் குழுவில் சேர்க்க ஒரு முறை முயற்சி செய்தாரென்பது எனக்குத் தெரியும். ஆனால், இதற்குள் அவள் வேறொரு குழுவில் சேர்ந்துவிட்டதால் அவளுக்கு எங்களுடன் பணிபுரிய வாய்ப்பு ஏற்படவில்லை. ஆகையால் வேறொரு குழுவைச் சேர்ந்த பெண் மூலம் நான் எப்படி செயற்பட முடியும்?

ஆகையால் அவளைக் கேட்டேன், ''நீ உன் குழுவைச் சேர்ந்த பெரியவங்க கிட்டே கேக்கறதுக்கென்ன?''

வீணா வருத்தத்தோடு சொன்னாள், ''எங்க குழுவிலே சில பேர் கைதாயிட்டாங்க, சிலர் விலகிப் போயிட்டாங்க. எங்க குழு சிதறிப் போயிடுச்சு. நான் என் சொந்தப் பொறுப்பிலே ஏதாவது செய்ய ஆசைப்படறேன். யாரும் எனக்குப் பொறுப்பாளி இல்லே.''

வீணா தன் சொந்தப் பொறுப்பில் செயற்படலாம். ஆனால், அவளுக்கும் எங்கள் குழுவுக்குமிடையே என்ன தொடர்பு என்பதைப் புரிந்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்ள வேண்டியது என் கடமை. அன்று அவளு டன் பல விஷயங்களைப் பேசிவிட்டு வீடு திரும்பி னேன்.

வீணா பொய் சொல்ல மாட்டாள், எவருக்கும் அதிர்ச்சியளிக்க மாட்டாள் என்று எனக்குத் தெரியும். ஓர் இலட்சிய உலகம் அவளது முகத்தில் பிர திபலிக்கும். அவள் மிகவும் மென்மையானவள், இனிய சுபாவங் கொண்டவள். அவள் அறிவுஜீவி, இலக்கிய ரசிகை, மிக நன்றாக விவாதம் செய் வாள். தேர்வுகளில் முதலிடம் அவளுக்கு. அவள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவள். அவள் உணர்ச்சி வேகத்தில் என்னிடம் இவ்வாறு சொல் லியிருக்கலாம். பின்னால் இந்த வேகம் குறைந்து விட்டால்? அப்படியானால் அவளைக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்விப்பது பெரிய பொறுப் பாகும். புரட்சி வெள்ளத்தைத் தங்கு தடையின்றி முன்னேற்றிச் செல்வதே எங்கள் கடமை.

நான் வீணாவுடன் ஆலோசனையைத் தொடங்கினேன். அவள் செய்ய விரும்பிய காரி யத்தின் ஆபத்தான விளைவுகளை அழுத்தமாக விளக்கினேன். முற்றிலும் மாறுபட்ட இலட்சி யங்களைக் கொண்ட பெற்றோரின் செல்லப் பெண் அவள். அவளுடைய செய்கையால் அவளு டைய பெற்றோருக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சி ஏற்படும் என்பது அவளுக்குத் தெரியுமோ தெரி யாதோ, எனக்கு நிறையவே தெரிந்திருந்தது.



''உன் காரியத்தை அவங்க பொறுத்துக்க மாட் டாங்க. இதனாலே ஏற்படற அதிர்ச்சி அவங்க ளைக் கொன்னுடலாம் அல்லது பைத்தியமாக்கிட லாம்'' என்று அவளிடம் சொன்னேன்.

வீணா உடனே தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு, ''கமலா அக்கா, அவங்களைப் பத் திப் பேசாதே, அக்கா!'' என்று இறைஞ்சினாள்.

''ஆனால் தெரிஞ்சு வச்சுக்கிறது நல்லதுதானே அம்மா!'' என்று சொன்னேன். அவளுடன் அன்று நான் வேறெதுவும் பேசவில்லை. அவளை யோசிக்க விட்டுவிட்டு வந்துவிட்டேன்.

சுதீரைக் கூப்பிட்டு எல்லா விஷயங்களையும் சொன்னேன்.

நம் நாடு அன்னிய ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. இந்த ஆதிக்கத்தின் மிக உயர்ந்த அடையாளம் கவர்னர். இதுவரையில் புரட்சிக்காரர்கள் நடத்திய தாக்குதல்களெல்லாம் டாக்கா, மேதினிபூர், குமில்லா முதலிய மாவட்டங்களின் அதிகார வர்க்கத்தைக் குறிவைத்து நடத்தப்பட்டிருந்தன. கவர்னரையே குறிவைத்துத் தாக்குதல் நிகழ்ந்தால் புரட்சியின் தீவிரம் உச்ச நிலையை எட்டும். இவ் வளவு செய்வது அந்த நேரத்துக்கு அவசியத் தேவையாயிருந்தது. புரட்சிக்காரர்களில் அநேக மாக எல்லோருமே சிறையிலிருந்தார்கள். நாங்க ளும் எந்த நேரமும் கைது செய்யப்படலாம். கை தாவதற்குமுன் ஒரு பெரிய சாதனையைச் செய்து விட வேண்டும். இதன் பிறகு இத்தகைய வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். ஆகவே கவர்னரைச் சுட்டுக் கொல்லும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட் டது. நான் சுதீருடன் கலந்தாலோசித்துவிட்டு வீடு திரும்பினேன்.

நாங்கள் பேசிய விஷயங்கள் என் காதில் எதி ரொலித்துக்கொண்டிருந்தன. எனக்கு நாற்புறமும் புரட்சி வெள்ளம் நுரை பொங்கப் பாய்ந்துகொண் டிருப்பதுபோல் தோன்றியது. எந்தப் புரட்சி வெள்ளம் பாய்வதற்காக சட்டகிராம் ஆயுதக் கிடங்கு சூறையாடப்பட்டதோ, எந்த வெள்ளம் தீனேஷ் மஜும்தார், வினய் போஸ், தீனேஷ்



படிப்பகம்

www.padippakam.com



குப்தா, பாதல் குப்தா, சாந்தி, சுநீதியை அடித்துக் கொண்டு சென்றதோ, அந்தப் பிரவாகத்தில் வீணா, நான், சுதீர் எல்லாரும் அமுங்கி மறைய ஆர் வங்கொண்டோம். இதுதான் எங்கள் வாழ்க்கை யின் பலன் என்று நினைத்தோம்.

இரவில் படுக்கையில் படுத்தால் உறக்கம் வர வில்லை. மனதில் பல்வேறு சிந்தனைகள். எவ் வளவோ விஷயங்களைத் திட்டமிட வேண்டும்.

வீணா தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண் டால்?

எந்தக் காரியத்தையும் முடிவு செய்யுமுன் அத னால் நேரக்கூடிய கெட்ட விளைவுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். டல்ஹௌசி சதுக்க நிகழ்ச் சிக்குப் பிறகு, கைது செய்யப்பட்ட தொண்டர்கள் மிகக் கொடுமையாக சித்திரவதை செய்யப்பட் டார்கள். அவர்களில் சிலர் இந்தக் கொடுமையைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துவிட்டார்கள். அத்தகைய கொடு மைக்கு முன்னால் வீணாவும் தன் குற்றத்தை ஒப் புக் கொள்ளும் சாத்தியக்கூறு உண்டு. புரட்சிக்கா ரர்களில் அண்ணன் போன்ற வீரர்களும் உண்டு. 102 டிகிரி காய்ச்சல் பீடிக்கப்பட்ட நிலையில் கைதா னார் அவர். அவருடைய கைகளில் விலங்கை மாட்டி தலை முதல் கால் வரை பூட்ஸ் காலால் உதைத்தார்கள். அவரது வாயிலிருந்து இரத்தம் பெருகியது. அவர் மயக்கமடைந்தார். அப்போது அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து அவரது மயக்



படிப்பகம்

www.padippakam.com

கத்தைத் தெளிவித்து மறுபடியும் உதைத்து மீண்டும் மயக்கமடையச் செய்தார்கள். அவரது வாயிலிருந்து நுரை தள்ளியது. அப்படியும் அவர் பேசவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை, இரகசியங்களை வெளியிடவில்லை. அப்படிப்பட்ட கொடுமைக்கு ஆளானபோதும் நான் தளராமலிருக்க வேண்டும், வீணாவும் உறுதியாக இருக்க வேண்டும். ஆனால், வீணா உறுதி குலைந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் நேரக்கூடிய விளைவுகளையும் நான் கருத்தில் கொள்ள வேண்டும். தூக்குத் தண்டனை கிடைத்தால்?

தீனேஷ் மஜூம்தார் தூக்குத் தண்டனை ஏற்கத் தயாராயிருந்தார். தீனேஷ் குப்தா தூக்குத் தண்டனை பெற ஆர்வமாயிருந்தார். ஆர்வ மிகுதியில் அவரது எடை கூடிவிட்டது! குதிராம் தொடங்கி எங்கள் தீனேஷ் மஜூம்தார், தீனேஷ் குப்தா வரையில் எல்லோரும் சேர்ந்து என்னை இந்த விளையாட்டில் சேர்த்துக்கொள்ள அழைப்பதாகத் தோன்றியது எனக்கு. நான் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன் - ''வரேன் அண்ணா, வரேன்!''

வாழ்நாள் முழுதும் நாடு கடத்தப்பட்டால்?

அதனாலென்ன! டல்ஹௌசி சதுக்க நிகழ்ச்சியிலேயே இந்தத் தண்டனை கிடைக்க வாய்ப்பு இருந்தது. வெடிகுண்டுகள் என்னிடம் இருந்ததற்கான சான்று கிடைக்காததால் நான் தப்பிக்க முடிந்தது.

அணு அணுவாக சித்திரவதை செய்யப்பட்டால்?

அதுவும் எதிர்பாராததல்ல. இந்தப் பணியில் துன்பம் இயற்கையாக வருவது, இன்பம் தற்செயல் நிகழ்வுதான் என்று அண்ணன் முன்பே தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இரவு முழுதும் உறக்கம் வரவில்லை. நயாகரா நீர்வீழ்ச்சி என்னை அளவற்ற வேகத்தோடு இழுத்துக்கொண்டு செல்கிறது. பெருங்கடலில் போய்ச் சேரும் வரை விடுதலை ஏது?

சுதீரை தினந்தோறும் சந்தித்தேன். என் சிந்தனைகளை அவனிடம் சொல்ல முடியும். அவனிடம் முழு நம்பிக்கை எனக்கு. என்னுடைய சந்தேகங்கள், குழப்பங்களையெல்லாம் அவனிடம் வெளியிட்டு அவனைத் தொந்தரவு செய்தேன். என் பொறுப்புகளின் சமான அளவை அவன் மிகவும் சாதாரணமாக ஏற்றுக்கொண்டான். நான் இரவில் தூங்கவில்லையென்றால் அவன் எனக்கும் சேர்த்துத் தூங்கிவிட்டுச் சிரிப்பான்.

''ஒரு ரிவால்வர் கொண்டு வந்து கொடுப்பியா?'' நான் அவனைக் கேட்டேன்.

''கொடுக்க முடியும்னு நினைக்கறேன்... ஆனால் நிறைய செலவாகுமே!''


''பணத்துக்கு நான் ஏற்பாடு செய்யறேன். நீ ரிவால்வர் கொடு.''

வீணாவோடு பேசும்போதெல்லாம் அவளுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள ஆபத்தைத் திரும்பத் திரும்ப விளக்கினேன். அப்படியும் அவள் தளரவில்லை. அவளது உறுதி குலையவில்லை.

நான் அவளை 'மனு' என்று அழைப்பேன்.

''மனு, உனக்குத் தூக்குத் தண்டனை கிடைச்சால்?''


வீணா இனிமையாகத் தலையையசைத்து, ''அப்படின்னா நான் சிரித்த முகத்தோடு தூக்கு மேடையேறுவேன், நீயே பாரு, கமலா அக்கா!'' என்று சொன்னாள்.





படிப்பகம்

www.padippakam.com



''உனக்கு ஆயுட்காலச் சிறை கிடைச்சால்?''

''அங்கே சின்னப் பெண்கள் சாந்தியும் சுநீதியும் இருக்காங்க. அவங்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்தே என் சிறை வாழ்க்கையைக் கடத்திடுவேன். நீ கவலையே படாதே!''

''போலீஸ் சித்திரவதையிலே நொந்து போய் எல்லா ரகசியத்தையும் சொல்லிடுவியா?''

''நீ கவலைப்பட வேண்டாம், கமலா அக்கா! ... நான் உசிர் இருக்கறவரையிலே உன்னைக் காட்டிக்கொடுக்க மாட்டேன்!'' உறுதியான குரலில் பதிலளித்தாள் வீணா.

பிறகு, எங்கள் திட்டத்தை விவாதிக்கத் தொடங்கினோம். இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று, கவர்னர் குதிரைப் பந்தய மைதானத்துக்கு வரும்போது அவரைக் கொல்வது. இரண்டாவது, கல்கத்தா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நிகழவிருந்தது. வீணா அதில் பி.ஏ. தேர்வு பெற்றிருந்தாள். கவர்னர் அந்த விழாவில் கலந்துகொள்ளும்போது அவரைச் சுட்டுக் கொல்வது. பகத்சிங்கும் படுகேஸ்வர் சிங்கும் டில்லியில் மத்திய சட்டசபையில் வெடிகுண்டு வீசியது என் நினைவுக்கு வந்தது. ஆகவே, இரண்டாவது வழியையே தேர்ந்தெடுத்தோம். குதிரைப் பந்தய மைதானத்தில் கவர்னரை அணுகுவது கடினம். பல்கலைக்கழக செனெட் அரங்கில் அவரை எளிதில் அணுக முடியும்.

இரண்டு பேர் இருந்தால் தேவலை என்று வீணா சொன்னாள். சாந்தியும் சுநீதியும் இணைந்து செயற்பட்ட நிகழ்ச்சி ஞாபகம் வந்தது. வீணாவுக்கு ஒரு தோழி இருந்தாள். அவளைச் சேர்த்துக் கொள்ளலாமா என்று விவாதித்தோம். அந்தப்



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணின் தந்தை சில நாட்களுக்கு முன்புதான் இறந்துபோயிருந்தார். அவளது குடும்பம் முழுதும் அவளையே நம்பியிருந்தது. இந்த நிலையில் அவளை ஆபத்துக்குள்ளாக்க விருப்பமில்லை எங்களுக்கு. ஆகையால் அவளை இந்த முயற்சியில் சேர்த்துக்கொள்ளவில்லை. இதற்குமுன் இத்தகைய முயற்சிகளில் தனியாக எவரும் ஈடுபடவில்லையா? எல்லாக் காரியங்களிலும் துணை தேட முடியாது. வேறெந்தப் புரட்சிக்காரப் பெண்ணும் பட்டம் வாங்க அந்த விழாவுக்குப் போகும் வாய்ப்பு இல்லை. ஆகவே வீணா தனியாகவே தன் திட்டத்தை நிறைவேற்றுவதென்று முடிவாயிற்று.

அப்போது நானும் வீணாவும் வேறு வேறு மனிதர்களாக இல்லை, ஒன்றாகவே இயங்கினோம். அவளுடைய நல்லது கெட்டது, வசதி - அசௌகரியம் எல்லாம் என்னுடையதாகவும் இருந்தன.

வீணா வீட்டில் தங்காமல் வெளியே தங்கியிருந்தால்தான் செயற்பட வசதியாயிருக்கும். ஆகையால் அவள் தன் டயோசீசன் கல்லூரி விடுதியில் தங்குவதென்று நிச்சயிக்கப்பட்டது. கல்லூரியின் இலட்சிய மாணவி என்று பெயர் பெற்றிருந்தாள் வீணா. அவள் அந்தக் கல்லூரியில் பி.ஏ. தேர்வில் தேறிவிட்டு அங்கேயே B.T. படித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் அவள் விடுதியில் தங்க விரும்புவது பற்றி எவருக்கும் சந்தேகமேற்படவில்லை.

சுதீர் ரிவால்வர் பெறப் பெருமுயற்சி செய்தான். அதை வெளியிலிருந்து கடத்தி வர செலவு அதிகமாயிற்று. சுதீருக்கு வீணாவைத் தெரியாது. அதற்குத் தேவையும் இருக்கவில்லை. வீணா செய்ய வேண்டியதையெல்லாம் நானே சுதீருடன் விவாதித்து முடிவு செய்தேன். இது வீணாவுக்குத் தெரியாது.

''ரிவால்வர் சுடப் பயிற்சி செய்துகொண்டால் நல்லது. வீணாவுக்கு அதுதான் ஆசை. எங்கேயாவது போய் நானும் வீணாவும் மட்டும் பயிற்சி செய்யலாமா?'' என்று சுதீரைக் கேட்டேன்.

சுதீர் சொன்னான், ''டெகார்ட் மேலே தாக்குதல் நடந்தபிறகு எல்லா இடத்திலேயும் போலீஸ் கண்காணிப்பு அதிகமாயிடுச்சு. அதனாலே பக்கத்தில் எங்கேயும் பயிற்சி பண்ண முடியாது. பண்ணினால் பட்டமளிப்பு விழாவுக்கு முன்னாலேயே ஆம்பிட்டுக்க வேண்டியதுதான் ... ரிவால்வரைக் கீழ்ப்புறமாக வச்சுக்கிட்டு இடுப்புகிட்டேயிருந்து குறிவச்சுச் சுடச் சொல்லுங்க. இல்லாட்டி ரிவால்வர் அதிர்ச்சியிலே மேலே எகிறும், குறிதவறிப் போய்விடும்.''

நான் சுதீரின் அறிவுரையை வீணாவுக்குத் தெரிவித்தேன்.

ரிவால்வர் வாங்கப் பணம் வேண்டுமே! ஒரு தோழியிடம் போனேன். ''எனக்கு அவசரத் தேவை, பணங் கொடு'' என்று சொன்னேன். அவள் முகஞ்சுளிக்காமல், காரணம் கேட்காமல் இழுப்பறையைத் திறந்து அறுபது ரூபாய் கொடுத்தாள். இப்படிக் கொடுத்ததையே ஒரு பெரும் பேறாகக் கருதிவிட்டாள் அவள், ''உனக்காகத்தான் வச்சிருந்தேன்'' என்று வேறு சொன்னாள்! ஆச்சரியமான பெண் அவள்! நான் எதற்காகப் பணம் வேண்டுகிறேன் என்று அவள் ஒரு முறை கூடக் கேட்கவில்லை. நான் புரட்சிக் குழுவைச் சேர்ந்தவள் என்று மட்டும் அவளுக்குத் தெரியும். எனக்கு எப்போதாவது தேவைப்படுமோ என்றுதான் பணம் சேர்த்து வைத்திருக்கிறாள். புரட்சி இயக்கத்தில் தான் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதன்பால் தீவிர ஆர்வமிருந்தது அவளுக்கு. புரட்சியில் நேரடியாகப் பங்கு பெற்ற ஒரு சில பெண்களுக்குப் பின்னால் அவர்களுக்கு ஆதரவளித்த பெண்கள் இவள் போல் பலர் இருந்தனர். புரட்சி இயக்கத்தின்பால் அவர்களுக்கு உள்ளார்ந்த அனுதாபம், ஆர்வம் இருந்தது. எனக்குப் பணம் கொடுத்து உதவியவள் என் சக மாணவி. பெயர் சுலதாகர்.

தேவைப்பட்ட பணம் சிறிது சிறிதாகச் சேர்ந்துவிட்டது. ரிவால்வர் வாங்குவதற்காக 280 ரூபாய் சுதீரிடம் கொடுத்தேன். வீணா கொஞ்சம் பொட்டாசியம் சயனைடு கேட்டாள். சுதீரிடம் சொன்னேன். கேள்வி கேட்பது போல் என்னைப் பார்த்தான். பிறகு, ''ஏற்பாடு செய்யறேன்'' என்று சொன்னான்.

சில நாட்களுக்குப் பின் சுதீர் ரிவால்வரும் பொட்டாசியம் சயனைடும் கொண்டு வந்து கொடுத்தான். ரிவால்வரின் பாகங்களைப் பிரித்து அவற்றின் உபயோகத்தை விளக்கினான். நான் அவன் கூறியதைக் கவனமாகக் கேட்டு மனதுக்குள் நெட்டுருப் பண்ணி வைத்துக்கொண்டேன்.

அவன் என்னிடம் காலி ரிவால்வரையும் ஒரு



படிப்பகம்

www.padippakam.com



பொட்டலம் குண்டுகளையும் கொடுத்தான். சயனைடு பொட்டலத்தைக் கொடுக்கும்போது சிரித்துக்கொண்டே, ''ஜாக்கிரதை, இதைத் தொட்ட கையைக் கழுவாமே வாயிலே வச்சுக்காதீங்க. என்ன ஆகுமோ!'' என்று மட்டும் சொன்னான்.

அன்று மாலை வீணாவை மகளிர் பூங்காவில் சந்தித்தேன். ஒரு மறைவான மூலைக்கு அழைத்துப் போனேன். அவளை இப்போது ஒரு கடக்க முடியாத பாலைவனத்துக்குள் அனுப்பப் போகிறேன். நஜ்ருலின் பாட்டு என் காதுகளில் ஒலித்தது -''நள்ளிரவில் கடக்க வேண்டும், பயணிகளே ஜாக்கிரதை!''

''சாமானைக் கொண்டு வந்திருக்கேன்'' என்று தணிந்த குரலில் சொல்லி அவளிடம் ரிவால்வரையும் குண்டுகளையும் கொடுத்தேன். ஆனால் பொட்டாசியம் சயனைடைக் கொடுக்க முதலில் மனம் இடங் கொடுக்கவில்லை. எனினும் இறுதியில் அதையும் கொடுத்துவிட்டு, ''ரொம்ப அவசியம் ஏற்பட்டாலொழிய இதைச் சாப்பிடாதே, மனு!'' என்று சொன்னேன்.

''ஏன் அனாவசியமாகக் கவலைப்படறே, அக்கா? நான் ரொம்ப அவசியமில்லேன்னா சாப்பிட மாட்டேன்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் வீணா. ''இவ்வளவு குண்டு எதுக்கு?'' என்று சொல்லிச் சில குண்டுகளை மட்டும் எடுத்துக்கொண்டு மீதியை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

ரிவால்வரின் பாகங்களைப் பிரித்து அவற்றின் உபயோகத்தை வீணாவுக்கு விளக்க வேண்டும். மகளிர் பூங்காவில் எல்லோருக்கும் முன்னால் ரிவால்வரை வெளியே எடுக்கவே முடியாது. இருவரும் ராம்மோகன் நூலகத்துக்குப் போனோம். அங்கே இரண்டாம் மாடியில் ஒரு சிறு அறையில்



படிப்பகம்

www.padippakam.com

நாங்கள் ஏகாந்தமாக உட்கார்ந்துகொண்டோம். அவளுக்கு எல்லாவற்றையும் விளக்கி முடித்த அதே சமயத்தில் ஒருவர் மேலே ஏறி வந்தார். நாங்கள் உடனே ரிவால்வரை மறைத்துக்கொண்டோம். பிறகு மீதிப் பேச்சைப் பேசிவிட்டு வெளியே வந்தோம்.

வீணாவின் பஸ் வந்துவிட்டது. மனதை ஈர்க்கும் வகையில் புன்சிரிப்புடன் அவள் விடைபெற்றாள். இன்னொரு புகழ்பெற்ற தேசபக்திப் பாடல் நினைவுக்கு வந்தது - ''தூக்கு மேடையில் வாழ்க்கையின் வெற்றிப் பாடலைப் பாடிச் சென்றவர்கள் மற்ற தேசபக்தர்கள் செய்யவிருக்கும் தியாகத்தைப் பார்க்க வந்து நிற்கிறார்கள் கண்ணுக்குத் தெரியாமல்!''

வீடு திரும்பினேன். மனதை ஆட்கொண்டன நூறு பயங்கள். ரிவால்வரையும் சயனைடையும் என்னிடம் கொடுத்த மறுநாளே சுதீர் ஜாம்ஷெத்பூர் போய்விட்டான். திட்டமிட்ட நிகழ்ச்சி நடைபெறும்போது அவன் கல்கத்தாவிலேயே இருக்கக் கூடாது. அதற்கும் அவனுக்கும் ஒரு தொடர்பு மில்லை என்று தோன்ற வேண்டும்.

பட்டமளிப்பு விழாவிற்கு ஒரு சில நாட்களே உள்ளன. வீணா விடுதியில், சுதீர் ஜாம்ஷெத்பூரில், நான் வீட்டில் நாங்கள் மூவரும் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் எங்கள் சிந்தனையில் ஒரே விஷயந்தான்.

விடுதியில் ஓரிரு நாள் விடுப்பில் வீட்டுக்கு வந்தாள் வீணா, கடைசி முறையாகப் பெற்றோரைப் பார்த்துவிட்டுப் போக நானும் அவளை இறுதியாகப் பார்க்க அங்கே போனேன். அவள் சொன்னாள், ''கமலா அக்கா, தெரியுமா உனக்கு நான் ரிவால்வரை எப்போதும் என்கிட்டேயே வச்சுக்கிட்டிருக்கேன். இதைவிட பத்திரமா வேறே இடம் இல்லே. ராத்திரிகூட அதை வச்சுக்கிட்டுத்தான் படுத்துக்கறேன்''. நான் அவளோடு மீண்டுமொரு முறை எல்லா விஷயங்களையும் விவாதித்தேன். அவள் உறுதியாக, அமைதியாக இருந்தாள். அவளது பார்வையில் குழந்தையின் களங்கமின்மை. என் கட்டளைகளை அப்படியே நிறைவேற்றத் தயாராயிருக்கும் தங்கை போலிருந்தாள் அவள். பேச வேண்டியதையெல்லாம் பேசிவிட்டு அவளிடம் மௌனமாக விடைபெற்றுக்கொண்டேன். வாயிலிருந்து வார்த்தை வரவில்லை. அவள் நான் போவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவள் முகத்தில் விசித்திர அழகு ஒளிர்ந்தது.

1932ஆம் ஆண்டு பிப்ரவரி ஆறாம் நாள். மாலை நேரத்தில் செனட் அரங்கில் பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. நான் என் வீட்டு மொட்டை மாடியில் அமர்ந்திருக்கிறேன். ஆனால் என் உள்ளம் விழா அரங்கில் வீணாவையே சுற்றிக் கொண்டிருக்கிறது. திடீரென்று அப்பா வேகவேகமாக மாடியேறி வந்தார். நான் திடுக்கிட்டேன், வீணா என்னைக் கூப்பிட வந்திருப்பதாக ஒரு பிரமை.

அப்ப கேட்டார், ''நீ ஏன் திடுக்கிட்டே! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே ஒரு அதிரடி நிகழ்ச்சி நடந்திருக்கு. பட்டமளிப்பு விழாவிலே வீணா தாஸ் என்கிற பொண்ணு கவர்னரைச் சுட்டுட்டா! ... உனக்கு இது பத்தி ஏதாவது தெரியுமா?''

''தெரியாதே, அப்பா.''

''ஊரிலே எல்லா இடத்திலேயும் போலீஸ் சோதனை போட்டுக்கிட்டு இருக்கு ... நீ ஜாக்கிரதையா இரு!''

''சரி.''

அப்பா கவலை தோய்ந்த முகத்துடன் படியிறங்கிப் போனார்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் கேள்விப்பட்டது இதுதான் -

செனட் அரங்கில் கவர்னர் ஜாக்சன் தம் உரையைப் படித்துக் கொண்டிருந்தபோது வீணா தன் இருக்கையிலிருந்து எழுந்து அவரைச் சுட்டிருக்கிறாள். குண்டு அவருடைய காதைத் தொடாமல் போய்விட்டது. கவர்னர் உடனே தலையை நகர்த்திக்கொண்டதால் குண்டு அவர் மேல் படவில்லை. சிப்பாய்களின் இனத்தவரல்லவா! கூர்மையான செவிகள் அவருக்கு. உடனே கர்னல் சுஹ்ரவர்தி மேடையிலிருந்து இறங்கியோடி வந்து வீணாவின் கழுத்தைப் பிடித்து அவளை இருக்கையில் அமர்த்த முயன்றார். வீணா அந்த நிலையிலேயே தொடர்ந்து சுட்டாள். ரிவால்வரிலிருந்து குண்டுகள் தீரும்வரை சுட்டுக்கொண்டேயிருந்தாள். குண்டு கவர்னர் மேல் படவில்லையெனினும் குண்டுகள் தீரும்வரை அவள் சுடுவதை யாராலும் நிறுத்த முயலவில்லை. அவள் சுட்டது



படிப்பகம்

www.padippakam.com



பிரிட்டிஷ் சாமராஜ்யத்தின் அஸ்திவாரத்தில் ஓட்டையுண்டாக்க.

வீணாவை முதலில் எலிஷியம் ரோவுக்கும் பிறகு லால் பஜாருக்கும் கொண்டுபோனார்கள்.

மறுநாள் போலீஸ் எங்கள் வீட்டுக்கு வந்தது. சோதனை நடத்தியது. எப்படிப்பட்ட சோதனை! மூலைமுடுக்குகளில், துணி மடிப்புக்கு இடையில், தலையணை உறையில் ரிவால்வரைத் தேடியது போலீஸ். பிறகு நான் எலிஷியம் ரோவுக்குக் கொண்டுசெல்லப்பட்டேன்.

அதே எலிஷியம் ரோ, அதே எஸ்.பி.அலுவலகம். அதே விசாரணை - ''வீணாவுக்கு ரிவால்வர் எப்படி கிடைத்தது? அவளுக்குப் பின்னால் யார் யார் இருக்கிறார்கள்?''

''எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று பதில் சொன்னேன்.

போலீசார் வீணாவின் மேல் கை வைக்கவில்லைதான். ஆனால், அசிங்கமாகத் திட்டினார்கள். இழிவுபடுத்தினார்கள். அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நான் அவளைச் சந்திக்க இயலவில்லை.

நாள் பூராவும் விசாரணை செய்யப்பட்டு இரவு ஒன்பது மணிக்கு வீடு திரும்பினேன். எதிர்பாராத விதமாக நான் திரும்பி வந்ததைப் பார்த்து அப்பா உணர்ச்சி வசப்பட்டு என் தலையை இறுகத் தழுவிக்கொண்டார் - இழந்த மாணிக்கத்தைத் திரும்பப் பெற்றவர் போல.

போலீஸ் என்னை வெளியே விட்டு வைக்கும் நோக்கத்துடன் விடுதலை செய்யவில்லை. இந்த நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் யாரென்று போலீசுக்குத் தெரியாததால் அவர்கள் என்னை வெளியே விட்டு வைத்து என்னை உளவு பார்ப்ப



படிப்பகம்

www.padippakam.com

தன் மூலம் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றித் துப்பு கிடைக்கும் என்று நினைத்தார்கள். இருபத்திரண்டு நாட்களுக்குப் பிறகு மார்ச் முதல் நாள் நான் மறுபடி கைது செய்யப்பட்டதிலிருந்து இதுதான் அவர்களது நோக்கம் என்று புரிந்தது.

நான் ஆறேகால் ஆண்டுகள் காவல் கைதியாகச் சிறையில் இருந்தேன்.

நான் வெளியிலிருந்த இருபத்திரண்டு நாட்களும் சாதுப் பெண் போலப் பள்ளிக்குப் போய்க் கல்வி கற்பித்தேன். இரண்டு மைல் தொலைவிலிருந்த பள்ளிக்கு நடந்தே போனேன். அங்கிருந்து நடந்தே வீடு திரும்பினேன். காசு மிச்சம்.

கவர்னரைச் சுட்ட வழக்கு ஒரே நாளில் முடிந்துவிட்டது. வீணாவின் வாக்குமூலம் வெளியாயிற்று. செய்திப் பத்திரிகைகளுக்கு முழு வாக்குமூலத்தையும் பிரசுரிக்கத் துணிவில்லை. அவளுக்கு ஒன்பதாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்த சமயத்தில் டயோசீசன் கல்லூரியின் கன்னிமார் வீணாவின் சார்பில் பெருமுயற்சி செய்ததாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் அவளை மிகவும் நேசித்தார்கள். வீணா போன்ற ஒரு 'நல்ல' பெண் இப்படிப்பட்ட காரியம் செய்யக்கூடும் என்று அவர்களால் கற்பனை கூடச் செய்ய முயலவில்லை. நான் நினைத்துப் பார்ப்பேன் - இங்கிலாந்து நம் நாட்டைப் போல் அடிமைப்பட்டிருந்தால் அந்நாட்டு வீர யுவதிகள் அடிமைத்தனத்தின் அவமானத்தைப் போக்கிக்கொள்வதற்காக இதே போன்ற செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்களா? படிப்பில் முதன்மையாக இருப்பது மட்டுந்தான் 'நல்ல' பெண்களுக்கு அடையாளமா? அவர்கள் நாட்டுக்கு ஏற்படும் அவமானத்தைப் பேசாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? சுதந்திரப் பிரியர்களான ஆங்கிலேயர் இப்படி இருக்கக் கூடும் என்பதை நினைக்கவே என்னவோ போலிருக்கிறது. அவர்கள் அரசாளும் இனம் என்ற நோக்கிலேயே வீணாவின் செய்கையைப் பார்த்தார்கள் என்று தோன்றுகிறது.

அடிமைப்பட்ட நாட்டின் 'நல்ல' பெண்களின் இலக்கணத்தைத் திருத்தும் சமயம் வெகு நாட்களுக்கு முன்பே வந்துவிட்டது. ஒவ்வொரு பையன் - பெண்ணின் உடம்பில், அதன் ஒவ்வோர் அணுவில், இருப்பில் அடிமைத்தனத்தின் கருப்புக் கறை ஒட்டிக்கொண்டிருக்கிறது. யாராவது அந்தக் கறையைத் துடைத்தெறிய முன்வந்தால் மற்றவர்கள் திடுக்கிட்டு ''அப்படியா?'' என்று நினைக்கிறார்கள். ''நாமும் அப்படியே செய்வோம், நாங்களும் உன்னுடன்தான்'' என்று சொல்கிறார்கள். இந்த மாற்றம், புரட்சி பாரத இனத்தின் உள்ளத்தில் தோன்றியது அன்று. அவர்கள் இரத்தத்தில் சலனம் எழுந்தது. 'நல்ல' பையன்களும் பெண்களும் இந்த வழியில் செல்லத் தொடங்கினார்கள்.

சில நாட்களுக்குப் பின் சுதீர் ஜாம்ஷெத்பூரிலிருந்து திரும்பி வந்தான். கவர்னர் சுடப்பட்டதன் விளைவுகளைப் பற்றி நாங்கள் விவாதித்தோம். சுதீர் சொன்னான், ''நாம் எதிர்பார்த்த பலன்தான் கிடைச்சிருக்கு. வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் மிக உயர்ந்த அடையாளமான கவர்னர் தாக்கப்பட்டது ஆட்சியாளரிடையே நடுக்கத்தை உண்டாக்கியிருக்கு. கவர்னர் செத்தாரா இல்லியா என்பது முக்கியமில்லே. அவர் தாக்கப்பட்டதாலே அரசாட்சி எவ்வளவு தூரம் ஆட்டங் கண்டிருக்கு, நம்ம இயக்கத்துக்கு எவ்வளவு வேகம் ஏற்பட்டிருக்கு என்பதுதான் முக்கியம். நாம் உண்டாக்க விரும்பின உணர்ச்சி வேகம் உண்டாயிருக்கு. கவர்னர் செத்துப்போயிருந்தால் என்ன விளைவு ஏற்பட்டிருக்குமோ. அதைவிடக் குறைவானதில்லே இப்போ ஏற்பட்டுள்ள பாதிப்பு. இதுதான் நம் மோட வெற்றி. நாம் இதை விட அதிகமாக வேறென்ன எதிர்பார்க்க முடியும்?''

வீணாவின் குடும்பத்தின் நிலையை வருணிக்க இயலாது. வீணாவின் தந்தை மிகவும் சாது. அவர் கல்விமான். முனிவர் போன்ற தன்மை கொண்டவர். வீணாவின் செய்கை அவரது இலட்சியத்துக்குப் பெரும் அதிர்ச்சி. இந்த அதிர்ச்சி ஒரு புறம், மறுபுறம் வீணாவின் சிறைத் தண்டனை. இரண்டும் சேர்ந்து அவளுடைய பெற்றோரை அநேகமாகப் பைத்தியமாக்கிவிட்ட நிலை. அடிமைப்பட்ட நாட்டின் எவ்வளவு பையன்களும் பெண்களும் இம்மாதிரி தங்கள் பெற்றோர்களை வேதனையிலாழ்த்திவிட்டுப் போய்விட்டார்கள் என்று எண்ணி முடியாது. எவ்வளவு இளைஞர்கள், யுவதிகள் மறுபடி இயல்பு வாழ்வுக்குத் திரும்பவில்லை! இதுதான் அவர்களுக்குக் கிடைத்த பரிசு.

●



படிப்பகம்

www.padippakam.com

# திருவனந்தபுரத்தில் திரைப்பட விழா!

இரா. கதைப்பித்தன்

கட்டுரை

சென்ற மே மாதம் 25ம் தேதி முதல் 30ம் தேதி முடிய இந்திய திரைப்படச் சங்கங்களின் கூட்டமைப்பின் தென்மேற்குப் பிராந்தியத்தின் சார்பில் SIGS 2005 என்ற அமைப்பு, திருவனந்தபுரத்தில் கலாபவன் திரையரங்கில் குறும்படங்கள் மற்றும் ஆவணப் படங்களின் திருவிழாவைச் சிறப்பாக நடத்தியது.

கேரளவாசிகள் கொடுத்து வைத்தவர்கள். அரசாங்கமே ஒரு அருமையான திரையரங்கைக் கொடுத்து நல்ல முறையில் எல்லா மொழிக் குறும்படங்களையும் ஆவணப் படங்களையும் ஒரு நாளைக்கு சுமார் 20 படங்கள் வீதம் திரையிட்டார்கள். சில படங்களைத் தவிர பார்த்த படங்கள் அத்தனையுமே ரசிக்கத் தகுந்தவை. சில படங்கள் நெஞ்சை நெகிழ வைத்தன. இத்திருவிழாவில் மறைந்த இயக்குநர் ஜான் ஆபிரகாம் நினைவுப் பரிசுகள் விழா முடிவில் ஒரு கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழங்கப்பட்டன. முதல் பரிசு இரண்டு குறும்படங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதில் ஒன்று கே.முத்துக்குமார் இயக்கிய 'பிறந்த நாள்' என்ற தமிழ்க் குறும்படம். படம் முடிந்தபோது எல்லோரும் கை ஒலி எழுப்பிப் பாராட்டினார்கள். ஒரு கதா விருது பெறுகிற இளம் எழுத்தாளன் ஒரு லாட்ஜில் தண்ணீர்க் கஷ்டத்துடன் சென்னையில் தன் பிறந்த நாளன்று பெறும் துயரமான அனுபவங்களைச் சுவையாகச் சித்திரிக்கிற படம். இரண்டாவது 'உள்ளுருக்கம்' என்ற மலையாளக் குறும்படம். மலபார் கிராமத்தில் உள்ள ஒரு குடும்பம் மூட நம்பிக்கைகளால் பெறும் கஷ்டங்ளை சித்தரிக்கிற படம்.

ஆவணப் படங்களில் முதல் பரிசு விபின் விஜய் இயக்கிய 'ஹவாமெகல்' என்ற (வங்காள) பெங்காலி மொழிப் படத்திற்கு கிடைத்தது. அத்துடன் 'லேடிஸ் ஸ்பெஷல்' என்ற நிதி தில்லி' என்பவர் இயக்கிய இந்திப் படத்திற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. ஹவாமெஹல், ரேடியோவின் வளர்ச்சி மற்றும் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு வளர்ச்சியைப் பற்றி வித்தியாசமான முறையில் எடுக்கப்பட்ட படம். 'லேடிஸ் ஸ்பெஷல்' மும்பையில் பெண்கள் மட்டுமே பயணிக்கும் ரயிலின் ஒரு நாள் பயண அனுபவங்களைச் சுவையாக சித்திரிக்கிற படம்.



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நிலத்தடி நீரை சுரண்டி வியாபாரப் பொருளாக்கி விற்கிற அநியாயங்களைச் சொல்கிற படங்கள், மும்பை படவிழாவில் தடைச் செய்யப்பட்டு தற்போதைய அரசால் அனுமதிக்கப்பட்ட 'பைனல் சொல்யூஷன்' என்கிற ராகேஷ் சர்மா இயக்கியுள்ள, குஜராத் கலவரங்களின் ஆரம்ப முதல் முடிவு வரை நடந்த நிக்ச்சிகளை விளக்கமாக அலசுகிற இரண்டே கால் மணிநேர அருமையான ஆங்கிலப் படம்.

'பென்சில்' என்ற, வெற்றி வீரன் இயக்கிய தமிழ்க் குறும்படமும், 'பாம் பாம்' என்ற மகேஷ் நாராயணன் இயக்கிய தமிழ்க் குறும்படமும் பாராட்டுப் பெற்றன.

'நாகா ஸ்டோரி' என்ற நாகாலாந்தில் நடைபெற்று வரும் வன்முறைகளைப் பற்றி விளக்கமாகச் சொல்கிற ஆவணப் படம் பாராட்டுப் பெற்றது.

அலிகளின் வாழ்வைப் பற்றியப் படம், ஆதரவற்ற குழந்தைகளைப் பற்றிய படம், எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களின், ஒதுக்கி வைக்கப்பட்ட குழந்தைகளைப் பற்றிய படம், கேரளத்தின் மடலப்புரம், கோட்டயம் இல்லா மக்கள் வாழ்வைப் பற்றிய படம் மற்றும் கேரளத்தின் புகழ் பெற்ற தகழி, இயக்குநர் அரவிந்தன், கே.ஸி.எஸ். பணிக்கர், கவிஞர் அய்யப்பன், வைத்யரத்னம் பி.எஸ்.வாரியர், வயலார் ராமவர்மா இவர்களின் வாழ்வையும் கலை இலக்கிய சமுதாயச் சேவைகளையும் சித்திரிக்கிற சுவையான ஆவணப் படங்கள், வைக்கம் முகம்மது பஷீரின் சிறுகதையைக் கொண்ட குறும்படங்கள் இப்படிப் பலவிதமான சுவை கொண்ட வித்தியாசமான குறும்படங்கள், ஆவணப் படங்களை பார்க்க உண்மையிலேயே கொடுத்து வைத்திருக்க வேண்டும். தினந்தோறும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை Open Forum என்ற அன்றைக்கு திரையிட்ட படங்களின் இயக்குநர்களுடன் நேருக்கு நேர் கலந்துரையாடல். மும்பை படவிழாவில் இடம் பெற்ற 'எய்ட்டீன்த் எலிபெண்ட்' என்ற மலையாள இயக்குநர் பி.பாலன் இயக்கிய ஆவணப் படம், கேரளக் கோவில் விழாக்களில் யானைகள் படும் அவஸ்தைகளைச் சித்திரிக்கிற அருமையான படம் இங்கேயும் திரையிடப்பட்டது. ●

**கணையாழி**
பழைய எண்.7
புதிய எண்.11,
நானா தெரு,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

**தொலைபேசி:**
24347354 / 24349191

பதிப்பாளர்
**தமன் பிரகாஷ்**

**இணையதள முகவரி**
www.kanaiyazhi.com

**கௌரவ ஆசிரியர்:**
கி. கஸ்தூரி ரங்கன்

**நிர்வாக ஆசிரியர்**
அருள்மொழி நங்கை
சுவாமிநாதன்

**ஆசிரியர்**
மய்திலி ராஜேந்திரன்

**ஆலோசகர்கள்**
இந்திரா பார்த்தசாரதி
டிராட்ஸ்கி மருது/க.கணேசன்
ரெ.பாலகிருஷ்ணன் / க.போசு
கா. அலாவுதீன்

**தொடர்புக்கு:**
எஸ். சொக்கலிங்கம்
தொ.பேசி: 98402 67296

**ஒளிஅச்சு**
என்.எஸ்.டிசைனர்ஸ் & பிராசஸ்
தொ.பேசி : 55380310

**அச்சிட்டோர்:**
பகவதி அச்சகம்
தொ.பேசி 28485938

**வடிவமைப்பு**
விழிகள்

சந்தா, ஏஜென்சி தொடர்புகள், மற்றும் படைப்புகள் அனுப்பவேண்டிய புதிய முகவரி :
பழைய எண்.7, புதிய எண்.11, நானா தெரு, (தலைமைத் தபால் நிலையம் அருகில்)
தியாகராய நகர், சென்னை - 600 017. தொலைபேசி : 24347354



படிப்பகம்

www.padippakam.com

# கணையாழி படைப்பகம்






மண்ணைப் பற்றிக் கொள்ளாத
மாற்றம் நிலைக்காது என்பதால்
வேர்களைக் காக்கவும்
விழுதுகளாய் இருக்கவும்
இறங்கவுமான முயற்சியில்.






## கணையாழி படைப்பகத்தின் வெளியீடுகள்:

காலின் மெக்கன்சி – வரலாறும் சுவடிகளும்
முனைவர் ம. இராசேந்திரன் .......................... 45.00

மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள்
முனைவர் ம. இராசேந்திரன் .......................... 60.00

நின்ற சொல்
முனைவர் ம. இராசேந்திரன் .......................... 50.00

இலக்கிய உலகில் ஒரு பயணம்
டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியன் .................. 60.00

மணிக்கொடி சீனிவாசனின் எழுத்துக்கள்
தொகுப்பாசிரியர் : ஜயதேவ் சீனிவாசன் ..... 120.00

மரபும் ஆக்கமும்
டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியன் ................ 100.00

சிற்பியின் விதி
முனைவர் ம. ராஜேந்திரன் ............................ 50.00








## கணையாழி படைப்பகம்

H-58 / F4, மருதம், திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 600 041
தமிழ்நாடு, இந்தியா
மின்னஞ்சல் : kanaiyazhipadai@yahoo.com

படிப்பகம்

www.padippakam.com
KANAIYAZHI Monthly, Regd. No. TN / PMG (CCR) 806 / 03-05 WPP 503 / 03-05
Regd. with RNI Under Lic. No. 10685 / 65

